
# மீள்பார்வை

இலங்கை முஸ்லிம்களின் தனித்துவக் குரல்

இதழ் - 235 ✱ 02 டிசம்பர் 2011 ✱ வெள்ளிக்கிழமை ✱ முஹர்ரம் 1433 ✱ விலை 30.00








மீள்பார்வை கலண்டர்

2012ஆம் ஆண்டிற்கான
கலண்டர்கள் இப்போது விற்பனையில்...

கிழக்கு மாகாணத்துக்கான பிரத்தியேக
தொழுகை நேர அட்டவணை.

இம்முறை இஸ்லாமிய உலகின் பல்கலைக்கழகங்கள்
என்ற தொனிப்பொருளில் வெளிவந்துள்ளது.

தொடர்புகளுக்கு...
0772227569


# ரணிலின் தலைவர் பதவிக்கு ஆப்பு?



## கட்சி மாநாட்டில் போட்டி வேட்பாளர்

டிசம்பரில் நடைபெறவுள்ள கட்சி மாநாட்டில், ஐ.தே.க. புதிய தலைவரைத் தெரிவுசெய்யவுள்ளது. தலைவர் பதவிக்கு மீண்டும் போட்டியிடப் போவதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கட்சியிலுள்ள ரணில் எதிர்ப்பாளர்கள் அவருக்குப் போட்டியாக இன்னொரு வேட்பாளரை நியமிக்கவுள்ளனர்.

ரணிலை பதவி இறக்குவதற்கான முயற்சியை, அவரது எதிர்ப்பாளர்கள் தீவிரப்படுத்தியுள்ளனர். ஆனால், கரு ஜயசூரியவையா அல்லது சஜித் பிரேமதாசவையா நியமிப்பது என்பதில் இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என அவர்களுக்கு நெருக்கமான வட்டாரமொன்று தெரிவித்துள்ளது.

கடந்தமுறை இறுதி நேரத்தில் ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டுக்கு அமைய, சஜித் பிரேமதாஸ ரணிலுக்கு எதிராகப் போட்டியிடாமல் தவிர்ந்து கொண்டார். ஆனால், இம்முறை அந்த நிலை ஏற்பட வாய்ப்பில்லை. போட்டி நிச்சயம் என்று அது உறுதிப்படுத்தியுள்ளது. கட்சியின் செயற்குழுவிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். அத்தோடு ரணிலுக்கு எதிரான குற்றப் பத்திரிகை விசாரிக்கப்பட வேண்டும் என்றும் ரணில் (பக்.19)



மூன்று கட்டமாக இடம்பெறும் எகிப்திய பாராளுமன்றத் தேர்தலின் முதல் நாள் வாக்களிப்பின்போது, இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் அரசியல் கட்சியான சுதந்திரத்திற்கும் நீதிக்குமான கட்சியின் தலைவர் முஹம்மத் முர்ஸி, பொதுச் செயலாளர் ஸஅத் அல் கதாதீனி ஆகியோர் வாக்களிப்பு நிலையமொன்றில் கடமையிலுள்ள இராணுவத்தினருடன் கைகுலுக்கும் காட்சி. இக்கட்சி அதிக ஆசனங்களைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.



மொரோக்கோ இஃவானிய அணியான நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி, பாராளுமன்றத் தேர்தலில் 107 ஆசனங்களைப் பெற்று தனிப் பெரும் கட்சியாக வெற்றியீட்டியுள்ளது. அதன் தலைவர் அப்துல் இலாஹ் பின் கிரான் ஊடகங்களுக்கு மகிழ்ச்சியுடன் கருத்து வெளியிடுகிறார்.

## ஜனாதிபதியை சட்டத்தரணியாகத் தெரியும், ஆனால் தனிப்பட்ட நண்பரல்ல



### நீதிபதி தீபாலி விஜேசுந்தர

வெள்ளைக்கொடி வழக்கில் சரத் பொன்சேகாவுக்கு மூன்று வருட சிறைத்தண்டனையை தீபாலி விஜேசுந்தர வழங்கினார். இதனையடுத்து அவருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின. இது குறித்து தகவல் தந்துள்ள தீபாலி, தமக்கும் தமது மகளுக்கும் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக குறிப் பிட்டுள்ளார். (பக்.19)



தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது இலங்கையில் அமைக்கப்படவுள்ள நெடுஞ்சாலை வலையமைப்பின் முதலாவது நெடுஞ்சாலை என்பது குறிப்பிடத்தக்கது. நான்கு வழிகள் கொண்ட இந்நெடுஞ்சாலையின் நீளம் 128 கி.மீ. ஆகும். 500 பேர் கொண்ட விசேட பொலிஸ் பிரிவு வொன்று இவ்வீதியில் போக்குவரத்து ஒழுங்கை மேற்கொள்வதற்கென தனியாக உருவாக்கப்பட்டுள்ளது. இது 24 மணித்தியாலமும் செயற்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



நாடு இப்போது முன்னேற்றப் பாதையில் பயணம் செய்கிறது. 1977க்குப் பின்னர் நாடு அழிவுப் பாதையில் சென்றது. 77இன் பின்னரான பாதை புதிய தாராளவாத பொருளாதாரக் கொள்கையால் ஒருபக்கமும், பிரிவினைவாத பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளால் ஆதிக்கம் செய்யப்பட்டதாக அமைந்து காணப்பட்டது என ஜனாதிபதி வரவு செலவுத் திட்ட உரையின்போது தெரிவித்தார்.

## நாட்டின் கடன்சுமை அதிகரித்துள்ளது!



### விமல் வீரவன்ச அங்கலாய்ப்பு

நாட்டின் கடன்சுமை வெகுவாக அதிகரித்துள்ளது என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். நாட்டின் மொத்தக் கடன்சுமை 5000 பில்லியன் ரூபாவை அண்மித்துள்ளது. 70களில் மொத்தக் கடன்சுமை 22 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

அண்மையில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட யோசனையில் கடன்சுமையை குறைப்பதற்கு ஏதேனும் திட்டங்கள் முன்வைக்கப்பட்டனவா? இதுதொடர்பில் எதிர்க்கட்சிகளும் கவனம் செலுத்தவில்லை.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் வாக்குமூலம்

'கொள்ளைக் கட்டளை: ஒரு நியாயமான மதிப்பீடு' என்ற கட்டுரை [illegible] பற்றிய [illegible] அமைப்புகளின் நேர்காணல் மிகப் பயனுள்ளதாக இருந்தது. இஸ்லாமிய பிரயோசனமிக்க வாசிப்புக்களைத் தொகுத்துத் தருவதில் [illegible] பங்களிப்பு மகத்தானதாகும். ஆனால் [illegible] மீள்பார்வையின் [illegible].

பாத்திமா பஸ்னா - கம்பளை

'பெற்றோரின் வன்கொடுமைகளும் பிள்ளைகளின் கல்வியும்' என்ற கட்டுரை [illegible] கருத்துக்களை [illegible]. கல்வி வரலாற்றிலே 1992ஆம் ஆண்டுவரை பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களில் 67 வீதமான மாணவர்கள் தாயும் தந்தையும் அரச உத்தியோகம் செய்பவர்களின் பிள்ளைகளாகும். அந்தக் கட்டுரை இதற்கு முரணாக உள்ளது.

எஸ்.எல். ரெஸ்மி - இறக்காமம்

"ஒரு தாய் சொன்ன கதை" ஒவ்வொரு [illegible] வேண்டிய கதை. இலக்கை அடைந்து கொள்ளல் என்ற ஆக்கம் [illegible]. மேலும் இதுபோல் [illegible] பற்றிய கட்டுரைகளை எதிர்பார்க்கிறேன்.

பயாஸா - கஹடோவிட

நமது இளைஞர்களின் பெறுமானம் என்ற தலைப்பில் வந்த கட்டுரை மூலம் இன்றைய நிலைமை விளக்கப்பட்டுள்ளது. மேலும் இளைஞர்களுக்கான ஆக்கங்களை எதிர்பார்க்கிறேன்.

ஆஷிக் - பாணகமுவ

மீள்பார்வை இஸ்லாமிய உலகு சம்பந்தப்பட்ட பல்வேறு தகவல்களை வழங்கி வருகிறது. இஸ்லாமிய உலகு சம்பந்தமான முஸ்லிம் அல்லாதவர்களின் கருத்துக்களையும் [illegible] வாசகர்களுக்கு அறியத்தந்தால் பயனுள்ளதாயிருக்கும். இந்த ஆக்கங்களை மீள்பார்வையில் எதிர்பார்க்கிறேன்.

ஜாதிர் - அக்குறணை

மீள்பார்வை பத்திரிகையின் மூலம் சமூகத்திற்கு மிகவும் பயனுள்ளது. "ஒரு தாய் சொன்ன கதை" மிகவும் அருமையாக இருந்தது. மீள்பார்வையின் சேவை நீண்ட காலம் தொடர வாழ்த்துகிறேன்.

எம். எச். நஸ்மிரா - [illegible]

எனது எழுத்துத் திறனுக்கு வலுவூட்டிக் கொண்டிருக்கும் மீள்பார்வைக்கு நன்றிகள். சென்ற இதழில் [illegible] 'உனைப் பொறுமையாளனாக?' என்ற தலைப்பில் சொல்லப்பட்டவை மிகவும் பாராட்டத்தக்கது. பணிகள் தொடரட்டும்.

எம். அனீஸ் - தம்பலகமம்

## சத்திர சிகிச்சைக்கு நிதியுதவி கோரல்

இல. 39, [illegible] முகவரியைச் சேர்ந்த மௌலவி எம்.எஸ். அப்துர் றஊப் என்பவர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். இவரைப் பரிசோதித்த வைத்தியர் ஏ.எல்.எம். நஸீர், இவருக்கு சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென ஆலோசனை கூறியுள்ளார்.

இந்த சத்திரசிகிச்சையை மேற்கொள்ள சுமார் 10 இலட்சம் ரூபா (1 மில்லியன்) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சிறுநீரக நோய் ஏற்பட முன்னர் பள்ளியில் இமாமாக கடமையாற்றிய இவர் தற்போது அப்பணியையும் மேற்கொள்ள முடியாது எவ்வித வருமானமுமின்றி வாழ்ந்து வருகிறார். இந்நிலையில் அவரால் இந்த சத்திர சிகிச்சைக்கான நிதியைப் பெறுவதென்பதும் முடியாத காரியம்.

எனவே, இச்சிகிச்சையை மேற்கொள்வதற்காக தனவந்தர்களிடமிருந்தும் பரோபகாரிகளிடமிருந்தும் உதவியை எதிர்பார்க்கிறார். இவருக்கு உதவ விரும்புவோர் கீழ்வரும் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறு வேண்டப்படுகின்றனர்.

**தொடர்புகளுக்கு** - எம்.எஸ். அப்துர் றஊப் - 0716 390297

Acc. No – 072020123917

HNB – Sea Street Branch, Colombo – 12.

# பள்ளி நிர்வாகிகள் அல்லாஹ்வுக்காக இதைச் செய்வார்களா?

"இன்றைய இளைஞர்களின் நோக்கும் போக்கும்" பற்றி ஒரு கட்டுரை 11.11.2011 மீள்பார்வை வெளியீட்டில் வெளிவந்தது. அது தொடர்பாக எமது கருத்துக்களையும் இங்கு தருகின்றேன்.

ஐவேளை தொழுகையின்போது சிறுவர்கள் இளைஞர்கள் ஆகியோர் நவநாகரிக புதுவகை 'டீ சேட்' அணிந்து தொழுவது இப்போதெல்லாம் ஒரு வித 'பெஷ'னாகி விட்டது. இதைப் பற்றி யாரும் கவனிப்பதில்லை, குறிப்பிடுவதில்லை, பெரிதுபடுத்துவதும் இல்லை, அலட்டிக் கொள்வதுமில்லை. அந்த 'டீ சேட்'களின் பின்பக்கம் முழுவதும் அவதானிப்புக்கள். அழகழகான கலை நுணுக்கமுள்ள வேலைப்பாடுகள், பொருத்தமற்ற வசனங்கள் (ஆங்கில எழுத்துக்கள் அடங்கியவை) கண்ணைக் கவரும் காட்சிகள், பெரிய வடிவிலான உருவங்கள், இலக்கங்கள், கம்பனிகளின் விளம்பரங்கள் போன்றவை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. இவைகளை அணிந்து தொழுகைக்கு வரும் இளைஞர்களைப் பார்த்து முகம் சுழிப்போர் இல்லாமலில்லை.

மேற்படி 'டீ சேட்'களை அணிந்து தொழுத தொழுகை பயனளிக்குமா என்பது கேள்விக்குறியாகும். இதனால் ஏற்படும் விளைவுகளை யாரும் கண்டு கொள்வதில்லை. நமக்கேன் வீண் வம்பு என்று ஒதுங்கிப்போவோர் நிறையவே உள்ளனர். இதைப் பார்த்து தம் மனதுக்குள்ளே வெறுப்பை உமிழ்பவரும் உண்டு.

இப்படியான 'டீ சேட்கள்' அணிந்து பள்ளியில் தொழுபவர்களால் என்ன விபரீதங்கள் ஏற்படுகின்றன என்பதை நாம் சிறிது சிந்தித்துப் பார்ப்போமானால், பின் வரிசையில் தொழுவோரின் கவனம் சுலபமாக ஈர்க்கப்படுவதை மறுக்க முடியாது. அல்லாஹ்வை நினைவு கூர்ந்து தொழும் வேளையில் இப்படியான ஷைத்தானிய செயல்கள் புகுந்தால் தொழுகை என்னவாகும்?

தொழுகையால் ஏற்படும் பிரதிபலன் கிடைக்காமல் போனமை அல்லவா? இவற்றுக்கெல்லாம் காரணமானவர்கள் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து தப்ப முடியுமா? வெள்ளிக்கிழமை நாட்களில் அல்லது விசேட நாட்களில் இப்படியான 'டீசேட்கள்' அணிந்து தொழுகையில் ஈடுபடுவது பெஷனாகி விட்டது. சிலர் அப்படித் தொழுவதைப் பெருமையாகவும் நினைக்கின்றனர்.

ஒருவர் அணிந்து வந்த 'டீசேட்' பின்பக்கத்தை அவதானித்தபோது என் இதயமே தொடுத்தது. அவ்வளவு பயங்கரமான பார்க்க முடியாத காட்சி அது. முதுகு முழுவதும் யேசுநாதரின் விசாலமான படம். அவர் பெரியதொரு சிலுவையை ஏந்தியவாறு கோவிலை நோக்கி மலைமேல் ஏறிச் செல்கிறார். இந்தக் காட்சி அந்த நபரின் 'டீ சேட்டின்' முதுகுப் பக்கம் முழுவதும் ஆக்கிரமித்திருந்தது.

இவ்விடயத்தில் ஒவ்வொரு பெற்றோரும் கவனம் செலுத்த வேண்டும். மேலைநாட்டு மோகத்தின் காரணமாக நமது இளைஞர் நவநாகரிகம் என்ற பெயரில் இப்படி நடந்து, தாமும் கெட்டு பிறரையும் கெடுக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இங்கு பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு முக்கிய பொறுப்பிருக்கிறது. நமது பள்ளிகளில் கைத்தொலைபேசி ஓசையை கட்டுப்படுத்தத் தாறுக்குத் தான் விளம்பரம் ஒட்டியிருப்பர். ஆனால் ஆபாச உடைகளுக்கு தடையான விளம்பரம் இருப்பதில்லை. "உருவப் படங்கள், காட்சிகள், கம்பெனி விளம்பரங்கள், இலக்கங்கள், வாக்கியங்கள் முதுகுப் புறத்தே தாங்கியவாறான 'டீ சேட்கள்' அணிந்து பள்ளியில் நுழையாதீர்கள்" என்று விளம்பரங்களை ஒட்டினால் என்ன? பள்ளி நிர்வாகிகள் அல்லாஹ்வுக்காக இதைச் செய்வார்களா?

கலாபூஷணம்
எம்.எச்.எம். யூஸுப்
வெலிகம

**சொல்வதை தெளிவாகச் சொல்லுங்கள்**

கருத்துக் களத்தில் எழுதப்படுவன வாசகர்களின் கருத்துக்களே. மீள்பார்வையின் உத்தியோகபூர்வ கருத்தாக அவை இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை (ஆ-ர்)

கருத்துக்களம்

## முஸ்லிம் இளைஞர்களின் நோக்கும் போக்கும்: ஓர் எதிர்வினை

மீள்பார்வையின் கருத்துக்களம் பகுதியில் 'இன்றைய முஸ்லிம் இளைஞர்களின் நோக்கும் போக்கும்' என்ற ஆக்கம் வெளியாகி இருந்தது. அதில் வரவேற்கத்தக்க நல்ல பல விடயங்கள் இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

எமது இளைஞர்கள் அந்நிய கலாசாரத்தைப் போன்று நடந்து கொள்கின்றனர். அவ்வாறே அண்மைக் காலமாக எமது முஸ்லிம் சகோதரிகளின் ஒழுங்கற்ற நடத்தைகளையும் சில துண்டுப்பிரசுரங்கள் மூலம் அறிகின்றோம்.


ஒன்றை எழுதுவதற்கு முன் அல்லது கருத்துத் தெரிவிப்பதற்கு முன் ஒழுக்கம் என்பது என்ன? அதன் வரைவிலக்கணம் என்ன என்பதை அறிந்தே எமது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். தொப்பி அணிந்து தொழுவது போன்ற விடயங்களை இப்போது யாரும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. ஏனெனில் ஒழுக்கச் சீர்கேட்டுக்கும் அதற்குமிடையில் எந்த சம்பந்தமுமில்லை.

நான் மீள்பார்வை வாசகர்களில் ஒருவன். மீள்பார்வையின் ஆக்கங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுவரும் நிலையில் தனது பத்திரிகையில் எதைப் பிரசுரிக்க வேண்டும், எதைப் பிரசுரிக்கக் கூடாது என்று தரம் பிரித்து பிரசுரிப்பது பொறுப்புள்ள பத்திரிகையின் கடமையாகும்.

குறித்த சகோதரர் சமூகத்தில் நடக்கும் ஒழுங்கீனங்களை சுட்டிக் காண்பிக்கலாம். ஆனால், அவர் தொப்பி பற்றிய கருத்தைத் தெரிவிப்பதற்குத்தான் இதை எழுதினாரோ என எண்ணத் தோன்றுகிறது.

Dr. றபீக் ஸலாஹுதீன்
பேருவளை

வாசகர் வாக்கு மூலம் SMS: 077 222 7569




CHOICE PARK
**வேலை வாய்ப்பு**
விற்பனைப் பிரதிநிதி
குழந்தைகள் முதல் ஆண் பெண் ஆடைகள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் விற்பனைத் துறைக்கு

- தங்குமிட வசதி உண்டு
- சம்பளம் திறமைக்கு ஏற்ப வழங்கப்படும்
- அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை

Branch Akurana Central Province
Mob:- 071-6868588
Te:- 081-4930074


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 வருடங்களில் முஸ்லிம் காங்கிரஸ்:

## சாதித்தவையும் சாதிக்காதவையும் பற்றிய ஒரு சிறுகுறிப்பு

சிராஜ் மஷ்ஹூர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டு 25 வருடங்கள் நிறைவடையும் இத்தருணத்தில், எத்தனையோ விடயங்கள் மனதுள் எழுகின்றன. 1980களின் பிற்கூறில் முஸ்லிம்களுக்கென தனிக்கட்சி ஒன்று என்பது மிகவும் இன்றியமையாத் தேவையாக உணரப்பட்டது. ஆனால், இன்றைய சூழலில் ஆளுக்கொரு கட்சி, ஊருக்கொரு கட்சி என்று முஸ்லிம்களது தனித்துவ அரசியல் பாதை திசை திரும்பியிருக்கிறது.



மறைந்த மு.கா. தலைவர் அஷ்ரபுடைய காலத்து கட்சியையும் இன்றைய கட்சியையும் ஒப்பிட்டு நோக்கும்போது சொல்ல வேண்டிய எத்தனையோ விடயங்கள் உள்ளன. சந்தேகத்திற்கு இடமில்லாமல் அஷ்ரப் முஸ்லிம்களது அரசியல் அரங்கில் அசைக்க முடியாத ஓர் ஆளுமையாக இருந்தார். அவருடைய தலைமைத்துவ ஆற்றல்கள் முஸ்லிம்களது அரசியல் வரலாற்றின் அழியாத பக்கங்களாக உள்ளன. முஸ்லிம் அரசியலை நிலைநிறுத்தும் வரலாற்றுப் பாத்திரம் அவருக்கு வழங்கப்பட்டது. அதில், பல நல்ல விளைவுகள் உள்ளது போலவே எதிர்மறையான அம்சங்களும் உள்ளன.

முஸ்லிம் அரசியல் தவிர்க்க முடியாத ஒன்று என்பதை நிலைநிறுத்துவதில் மு.கா.வின் வகிபாகம் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது. வன்முறை வழியிலிருந்து முஸ்லிம் இளைஞர்களை திசைதிருப்பி, பாராளுமன்ற அரசியல் பாதையை நோக்கித் திசைப்படுத்தியதில் மு.கா.வுக்கு குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. நாட்டின் பிரதான சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்கள் ஆயுதங்களால் உருக்குலைந்த போது, முஸ்லிம் சமூகம் மிகப் பெரும் அழிவிலிருந்து தப்பியது சந்தேகத்திற்கு இடமில்லாமல் மிகவும் ஆரோக்கியமானதே.

தேசிய இனப்பிரச்சினை இரு பரிமாணம் கொண்டதல்ல. அது சிங்கள-தமிழ்-முஸ்லிம் எனும் முப்பரிமாணம் கொண்டது என நிறுவுவதில் மு.கா.வுக்கு பெரும் பங்கு இருந்தது. அதேபோன்று பேரம் பேசும் அரசியல் என்ற ஆயுதத்தை துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி அது ஆரம்ப நாட்களில் அதிகம் சாதித்தது. இவ்வாறான சாதனைகள் பலவற்றை விரிவாகப் பட்டியலிடலாம். பின்னாட்களில் அதுவே அதன் பலவீனமாக மாறியது தவிர்க்கஇயலாதது.

மு.கா.வினது இன்றைய நிலைக்கான விதைகள் பல அதன் ஆரம்ப காலங்களிலேயே ஊன்றப்பட்டுவிட்டது என்ற கசப்பான உண்மையையும் நாம் மறுக்க முடியாது. குறிப்பாக அஷ்ரபுக்குப் பின்னர் யார் என்ற கேள்விக்கான பதில் இல்லாமையும், இரண்டாம் நிலை தலைமைத்துவ உருவாக்கம் பற்றிய ஆர்வக்குறைவும் மிக முக்கியமான வரலாற்றுத் தவறுகளாகும். உருவாக்க காலத்தில் இவ்விடயம் சீரியஸாக பார்க்கப்படாததன் விளைவுகள், பின்னாட்களில் பல வடிவங்களில் வெளிப்பட்டன.

மு.கா. வரலாற்றில், உரிமை அரசியலா அல்லது அபிவிருத்தி அரசியலா -எதற்கு முன்னுரிமை கொடுப்பது? என்ற நீண்ட வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தேறியது. ஆரம்பத்தில் உரிமை அரசியல் குறித்து மு.கா. அதீத ஆர்வம் காட்டியது. பிந்திய காலங்களில் அபிவிருத்தி அரசியலில் மூழ்கி அதன் அடிப்படை அடையாளமே தொய்வடையத் தொடங்கிற்று.


(பக்.19)

# ஸீரதுர் றஸூல் (ஸல்)

## ஒரு புதிய தொடர் கட்டுரைக்கான அறிமுகக் குறிப்பு

அஸ்லம் முஹம்மத் (நளீமி)

அல்லாஹுத்தஆலா தனது பிரதிநிதியாக மனிதனைப் படைத்தான். அந்த மனிதனுக்கு நேர்வழி காட்டுவதற்காக காலத்திற்குக் காலம் நபிமார்களை அனுப்பி வைத்தான். அந்த நபிமார்களின் தொடரில் கடைசியாக வந்தவர்கள்தான் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்.



அவர்களுக்கு இறக்கப்பட்ட வழிகாட்டிதான் அல்குர்ஆன். இந்த அல்குர்ஆனை முழுமையாக நடைமுறைப்படுத்திக் காட்டியவர்கள் முஹம்மத் (ஸல்) அவர்கள். இந்த வகையில் அல்குர்ஆனை சரியாக விளங்குவதற்கும் அதனை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதற்கும், இறுதி நபியவர்கள் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பது கட்டாயமாகின்றது.

உலகம் அழியும் வரைக்கும் எந்த மாற்றங்கள் ஏற்பட்டாலும் அவை அனைத்துக்கும் வழிகாட்டக் கூடிய ஒரேயொரு வாழ்க்கையாக இறுதி நபியின் வாழ்க்கையே காணப்படுகின்றது. எல்லாக் காலத்திற்கும் இவர்களது வாழ்க்கையே வழிகாட்டியாக காணப்படும். அந்த வகையில் வாழ்க்கை வரலாற்றை படிப்பது சம்பந்தமான சில விடயங்களை கீழே நோக்குவோம்.

'லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் றஸூலுல்லாஹ்' என்ற ஈமானின் முதல் அம்சம், அல்லாஹ்வுக்கு அடுத்ததாக முஹம்மதுர் றஸூலுல்லாஹ் என்று இருப்பதனால், எங்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் படிப்பது ஈமானோடு தொடர்புபடுகின்ற ஒரு அம்சமாக மாறுகின்றது.

''உலகத்தார்கள் அனைவருக்கும் ரஹ்மத்தாகவே நபியே, உங்களை நாம் அனுப்பி இருக்கின்றோம்'' (ஸூறதுல் அன்பியா: 107).

இந்த வசனம் நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாமல் உலகத்தில் உள்ள அனைவருக்கும் நபி என்பதையும், அவர்கள் ஒரு சர்வதேச தூதுவர் என்பதையும் விளக்குகின்றது.

ஸூறதுத் தவ்பாவின் 24ஆம் வசனம் மனிதனுடைய அன்றாட நேசத்திற்குரிய மனைவி மக்கள், பெற்றோர், சகோதர சகோதரிகள், வீடுகள், பொருளாதாரம் போன்ற அனைத்து விடயங்களையும் கூறி, அவற்றைவிட அல்லாஹ்வும் அவனது தூதரும், ஜிஹாதும் விருப்பத்திற்குரியதாகக் காணப்பட வேண்டும் என்று கூறுகின்றது.

நபி (ஸல்) அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் முஃமின்கள், அவர்களுடைய உயிர்களையும்விட மேலானவர்கள். அவர்களுடைய மனைவிமார்கள் முஃமின்களுடைய தாய்மார்கள் என ஸூறதுல் அஹ்ஸாபில் அல்லாஹுத்தஆலா கூறுகிறான்.

இந்த வசனம் நேசத்தின் இன்னுமொரு உச்சக் கட்டத்தைக் கூறுகிறது. அதாவது நபி (ஸல்) அவர்கள், உயிரையும் விட மேலானவர்களாக இருப்பதோடு முஃமின்களின் தந்தையாகவும் உள்ளார் என்ற அந்தஸ்தையும் மறைமுகமாக கட்டிக்காட்டுகின்றது. ஏனெனில், அவர்களது மனைவிமார்கள் ஷரீஅத் ரீதியாக தாய்மார்களாக மாறிவிட்டார்கள்.

இதேபோன்றுதான் ஒருவருக்கு அவருடைய தந்தையைவிட, குழந்தைகளைவிட, மனிதர்கள் அனைவரையும் விட நான் விருப்பத்திற்குரியவராக ஆகாதவரைக்கும் அவர் ஈமான் கொண்டவராக இருக்க மாட்டார் என நபி (ஸல்) அவர்களும் கூறினார்கள்.

இவை அனைத்தும் எங்களுக்கு சொல்லித்தருகின்ற விடயம்; நேசம் என்பது அடிப்படையதும் இல்லாமல் உருவாகின்ற ஒரு விடயமல்ல. நேசம் ஏற்படுவதற்கு, அவரோடு நெருங் கிய உறவு இருப்பதோடு, நெருங் கிப் பழகும் சந்தர்ப்பமும் கிடை க்க வேண்டும்.

இது சாதாரணமாக தாய் தந்தை, சகோதர சகோதரிகள், குடும்ப உறவைக் கூறலாம். ஆனால், இந்த இடத்தில் நபி (ஸல்) அவர்கள்மீது நேசம் வைப்பதற்காக நெருங்கிப் பழகும் வாய்ப்பு, ஸஹாபாக்களுக்குப் பின்னர் வந்தவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால், உறவு முறை ஒன்றை இஸ்லாம் ஷரீஅத்தாக மாற்றி இருக்கிறது. அதுதான் நபியவர்களது மனைவிமார்கள் தாய்மார்கள் என்ற அந்தஸ்தையும்; நபி (ஸல்) அவர்கள் தந்தையின் அந்தஸ்தையும் பெறுகிறார்கள் என்பதுதான் இங்கு அக்கறை கொள்ள வேண்டிய விடயம்.

இந்த இடத்தில், நபியவர்கள் மீது அன்பு ஏற்படுவதற்கு, இயல்பாக பழகுகின்ற வாய்ப்பு எங்களுக்கு கிடைக்கவில்லைதான். ஆனால், அதனைப் பெற்றுக் கொள்வதற்கான மிக முக்கிய அடிப்படைதான் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை சரியாகப் படிப்பதும் ஆழமாக விளங்குவதுமாகும். இதற்கான ஒரு முயற்சியே இந்த வரலாற்றுத் தொடராகும்.

பெருமானார் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் படிக்கின்றபோது, திடீரென அவர்களது வாழ்க்கையிலிருந்து தான் ஆரம்பிப்பது என்று அமையாது. ஏனெனில், அல்லாஹுத்தஆலா ஆதம் (அலை) அவர்களைப் படைத்து, மனிதனை இந்த பூமியில் பரப்பினான். அதன் பின்னர் படிப்படியாக உலகம் முழுவதும் மனிதர்களுக்கு தொடர்பு ஏற்பட்டு வந்தது. சர்வதேச தொடர்புள்ள ஒரு சமூகத்தை உருவாக்கி, அதன் பின்புதான் சர்வதேச நபியும் இறுதி நபியுமான முஹம்மத் (ஸல்) அவர்களை அல்லாஹுத்தஆலா அனுப்பி வைக்கின்றான்.

எனவே, நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையை படிப்பதற்கு முன்னர், நபியவர்களை அனுப்பி வைப்பதற்காக, அல்லாஹுத்தஆலா இந்த உலகத்தை எவ்வாறு தயார் செய்தான் என்பதை ஆராய வேண்டும். இது நபியவர்களது வாழ்க்கையைப் படிப்பதன் முதல் அம்சமாகும். இவற்றோடு தொடர்புபடுத்திய வகையிலேயே, முஹம்மத் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையை ஆழமாகப் படிக்க வேண்டும்.

அந்த வகையில், முதல் கட்டத்தைப் படிக்கின்றபோது முதல் நபி ஆதம் (அலை) அவர்கள் தொடக்கம் இறுதி நபி வரைக்கும் வந்த நபிமார்களின் வரலாற்றைப் படிப்பது நோக்கமல்ல. அது தனியொரு தலைப்பாகும்.

மாற்றமாக, ஆதம் (அலை) அவர்களையும் அவர்களது குடும்பத்தையும் மனித இனம் உலகம் முழுவதும் பரவியதையும் கற்க வேண்டும். பின்னர் இப்றாஹீம் (அலை) அவர்களின் குடும்பத்தின் மூலம் சர்வதேச நகரம் ஒன்றும், சர்வதேச சமூகம் ஒன்றும் கட்டியெழுப்பப்பட்ட விதத்தை அறிய வேண்டும். அப்றஹாவின் படையெடுப்பும் நபியவர்களின் பிறப்பும் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியதாக இதன் முதல் பகுதி அமையும்

இரண்டாவது பகுதியில் நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை விரிவாகவும் ஆழமாகவும் ஒவ்வொரு கட்டமாக நோக்குவோம். ஏனெனில், இது தான் எங்களுக்கும் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் இடையில் அன்பையும் பாசத்தையும் ஏற்படுத்தப் போகின்ற ஒன்றாகும்.

உலக வரலாற்றில் மிகவும் பாரிய பாதிப்பைச் செலுத்திய ஒரு ஆளுமையைப் பற்றி படித்து, விளங்கி, நேசித்து அந்த வாழ்க்கையை நடைமுறைப் படுத்தக் கூடிய தயார் நிலையை அல்லாஹுத்தஆலா எங்களுக்கு வழங்க வேண்டும் என்ற பாரிய நோக்கமே இந்தத் தலைப்பின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை

ஆசிரிய பீடத்திலிருந்து...

Meelparvai Media Centre (MMC)
2A, Hill Castle Place, Bandaranayake Mawatha, Colombo 12. Tel/Fax: 0112 336272
E-mail: meelparvai@gmail.com Web: www.meelparvai.net

# அறபு-இஸ்லாமிய உலகின் மக்களுக்கு சுபசோபனமும் வாழ்த்தும் உண்டாகட்டும்!

இஸ்லாமியப் புத்தாண்டு புதிய நம்பிக்கைகளோடு [illegible] எல்லாருக்கும் [illegible] வந்த விதம் இருக்கின்றன. அரபு இஸ்லாமிய உலகில் அரபு வசந்தம் ஏற்படுத்திய ஆரோக்கியமான விளைவுகள் இந்த நம்பிக்கையை மேலும் பலப்படுத்துகின்றன.

நீண்டகாலமாக வெகுஜனமான இராணுவ சர்வாதிகார அடக்குமுறையில் உழன்று வந்த மக்கள் இன்று சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் தொடங்கியுள்ளனர்.

அரபுப் புரட்சி துனீசியாவில் தொடங்கியது போல, அந் நாட்டில்தான் முதலில் தேர்தலும் நடைபெற்றது. அரசியலமைப்பு சபைக்கான தேர்தலில் அந்நஹ்தா கட்சி எதிர்பார்த்ததை விடவும் அதிக வெற்றியைப் பெற்றது.

இதேபோன்று மொரோக்கோவில் இஸ்லாமியவாதிகளின் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி, பாராளுமன்றத் தேர்தலில் எதிர்பார்ப்பை விடவும் அதிக ஆசனங்களை வென்றெடுத்துள்ளது.

அறபுலகின் மிகப் பெரிய மக்கள் தொகையைக் கொண்ட நாடான எகிப்தில் மூன்று கட்டமாக இடம்பெறும் பாராளுமன்றத் தேர்தல் [illegible] ஆரம்பித்துவிட்டது. அதிலும் இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் அரசியல் கட்சியான சுதந்திரத்திற்கும் நீதிக்குமான கட்சி எதிர்பார்த்ததை விடவும் அதிக ஆசனங்களைப் பெறும் என்ற அபிப்பிராயங்கள் தென்படுகின்றன.

இந்தத் தொடரான மாற்றங்கள் உலக முஸ்லிம்களுக்கு நம்பிக்கையூட்டும் செய்திகளாக உள்ளன. எங்கு நீதி மறுக்கப்பட்டதோ, எங்கு சுதந்திரம் [illegible] பட்டதோ, எங்கு ஜனநாயகம் கட்டுப்படுத்தப்பட்டதோ அங்கு எதிர்பாராத மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இது அல்லாஹ் [illegible] செய்த பெரும் அருளாகும்.

மத்திய கிழக்கில் ஜனநாயகத்திற்கு மேற்குலகும் மதச்சார்பற்ற சக்திகளும் இவ்வளவு காலமும் அஞ்சிக் கொண்டிருந்தனவோ, இன்று அந்த ஜனநாயகம் அறபு-இஸ்லாமிய நாடுகளில் தழைக்கத் தொடங்கியுள்ளது. தாம் மட்டும் ஜனநாயகத்தினது நல்ல அம்சங்களை அனுபவித்து விட்டு, காலாகாலமும் அறபு முஸ்லிம் நாடுகளை அடிமைப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்ற அவர்களது தீராத வேட்கை சுக்குநூறாகியிருக்கிறது.

வட ஆபிரிக்க நாட்டு முஸ்லிம்கள் ஆண்கள், பெண்கள், முதியோர்கள் என பெருந்திரளாய் வாக்குச்சாவடிகளில் நீண்ட வரிசைகளில் காத்திருந்து, [illegible] இஸ்லாமியவாதிகள் [illegible] செய்வதறியாது தடுமாற்றத்தில் திகைத்திருக்கின்றனர். அடுத்த கட்ட நகர்வு குறித்த முன்கணிப்புகளை செய்வதற்குக் கூட அவர்களுக்கு அவகாசம் இல்லை. அவ்வளவு வேகமாக மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன.


மத்திய கிழக்கில் இஸ்லாமியவாதிகள் மக்கள் ஆதரவைப் பெற்றிருக்கின்றனர் என்பது பகிரங்க ரகசியமாக இருந்தது. ஆனால், அதனை வாக்குச் சாவடிகளில், தேர்தல் பெறுபேறுகளில் [illegible] இதுகாலவரையும் இருந்து வந்தது. இஸ்லாமியவாதிகள் அதிகாரத்திற்கு வருவதை [illegible] ஏனைய மதச்சார்பற்ற சக்திகளினதும் [illegible] இந்த அச்சத்தில் ஆழ்ந்து போயிருந்தன.

இப்போது இந்த எல்லாத் தளைகளும் உடைத்தெறியப்பட்டுள்ளன. ஜனநாயக வழிமுறையின் மூலம் இஸ்லாமியவாதிகள் மக்கள் பிரதிநிதிகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றனர். அல்லாஹ் [illegible] நம்பிக்கையான [illegible] முஸ்லிம் உலகிற்கு தந்துள்ளான். ஆனால், இந்த நம்பிக்கைகளை தொடர்ந்தும் [illegible] சவால் மிக்க [illegible] வெளியே இருந்து [illegible] உள்ளிருந்து கூட இந்த சக்திகள் [illegible] இஸ்லாமியவாதிகள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

இந்த [illegible] அறபு-இஸ்லாமிய உலகின் மக்களுக்கு சுபசோபனமும் வாழ்த்தும் உண்டாகட்டும்! புதிய நம்பிக்கைகளோடு [illegible]

## அரசாங்கம்-தமிழ்க் கூட்டமைப்பு பேச்சுக்கள்:

# முஸ்லிம் அரசியல்வாதிகள் எங்கு போனார்கள்?



முஸ்லிம் விவகாரங்களை எழுப்புவதன் மூலம் ஜனாதிபதியின் எதிர்ப்பை சம்பாதித்து, அதனால் தமது பதவிகளையும் சுகபோகங்களையும் இழந்து விடக் கூடும் என அவர்கள் அஞ்சுகின்றனர் என்ற எண்ணம்தான் சமூகத்தில் காணப்படுகிறது.



லதீப் பாரூக்

முஸ்லிம் அரசியல்வாதிகள் எங்கே போனார்கள்? முஸ்லிம் சமூகம் முகம்கொடுக்கும் எரியும் பிரச்சினைகள் தொடர்பான அவர்களது நிலைப்பாடு என்ன? தமிழரது பிரச்சினைகளைத் தீர்ப்பதை இலக்காகக் கொண்டு, அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வரும் நிலையில், முஸ்லிம் வட்டாரங்களில் எழுப்பப்படும் கேள்விகளே இவை.

எனினும், முஸ்லிம் அரசியல்வாதிகள் அவர்களது நீண்ட தூக்கத்திலிருந்து இன்னும் எழவில்லை போலவே தெரிகிறது. பிரச்சினைகளை உரிய முறையில் வெளிப்படுத்தாமல் முஸ்லிம்களை அவர்கள் கைவிட்டுள்ளனர் போலவே உள்ளது.

முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒருவருக்குப் பின் அடுத்தவர் என, தனியாகவும் கூட்டாகவும் அரசாங்கத்தோடு இணைந்து கொண்டனர். "பலவீனமான எதிர்க்கட்சியுடன் இருந்து கொண்டு நேரத்தை விரயமாக்குவதில் பயனில்லை. அரசாங்கத்தோடு இணைந்து சமூகத்திற்கு உதவி செய்வதே சிறந்தது" என்று கூறிக்கொண்டுதான் இவர்கள் அரசாங்கத்தோடு தொடர்பு (Deal) வைத்துக்கொண்டனர்.

இப்போது அவர்கள் அரசாங்கத்தில்தான் உள்ளனர். அவர்கள் சமூகப் பிரச்சினைகளை முன்வைப்பார்கள் என்றுதான் முஸ்லிம்கள் எண்ணினர். ஆனால், அவர்கள் சமூகத்திற்கு உதவுவதற்குப் பதிலாக தாம் மட்டுமே பயன் பெறுகின்றனர். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவிக்காகவும் சுய இலாபங்களுக்காகவும் சமூகத்தைக் கைவிட்டு விட்டனர் என்ற எண்ணம் சமூக மட்டத்தில் வளர்ந்து வருகிறது. இனியும் அவர்கள் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தப் போவதில்லை என்ற கருத்தும் வளர்ந்து வருகிறது.

நஷ்டமடைந்த நிறுவனங்களது சொத்துக்களைக் கையேற்கும் சர்ச்சைக்குரிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது அவர்கள் முழு அமைதி காத்தனர். அரச பங்காளிகளான ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகியவை வாக்களிப்பிலிருந்து தவிர்ந்து கொண்டன. அப்போது கூட இவர்கள் வாய்பேசாது மௌனிகளாக இருந்தனர்.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில், தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. எனினும், முஸ்லிம் சமூகத்திற்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதுபோல் இம்முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்துகொள்கின்றனர்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமாதானப் பேச்சானது எல்லா பல்லின, பலமத, பல்கலாச்சார இலங்கையர்களது நலன்களையும் எதிர்காலத்தையும் பாதிக்கும் விடயமாகும். அனைத்து சமூகங்களும் ஒன்றுபட்டு இணைந்து வாழ வேண்டும் என்பது தவிர்க்க முடியாத யதார்த்தம். தம்மிடையே பொது அம்சங்களைப் பகிர்ந்து கொள்வதும் அவசியம். ஆதலால் இந்தப் பேச்சுக்கள் தமிழரோடு மட்டும் சுருக்கப்பட்டு விடக் கூடாது. அனைத்து இலங்கையரும் சமத்துவமாக நடத்தப்படுவர் என்ற உத்தரவாதம், எல்லா சிறுபான்மை சமூகங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்தமை, நாட்டுக்கு ஓர் அரிய வாய்ப்பைப் பெற்றுத் தந்துள்ளது. முழுமையான திட்டமொன்றின் மூலம் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இறுதி வாய்ப்பாகக் கூட அது இருக்கலாம்.

ஆனால், நாட்டில் இரண்டு சமூகங்கள் மட்டுமே உள்ளது என்ற மனப்பதிவையே தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சு தருகிறது. அரசாங்கத்தால் சிங்களவர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தமிழரது அபிலாஷைகளும் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றன என்பதுதான் வெளிப் பார்வை.

ஜே.ஆர். ஜெயவர்தனவின் அரசியல் அமைப்பு நாட்டின் ஜனநாயகத்தை 'வன் மேன் ஷோ' ஆக மாற்றியுள்ளது. சர்வவல்லமை படைத்த ஜனாதிபதி சட்டத்துக்கு மேலால் இருந்து கொண்டு, யாருக்கும் வகைசொல்லாத ஒரு நிலை காணப்படுகிறது. ஆதலால், முஸ்லிம்களது பிரச்சினைகளுக்கான தீர்வைக் காண, இம்முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் பேசியிருந்திருக்க வேண்டும்.


இவ்வாறான சூழலில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக ஜனாதிபதியைச் சந்திப்பதைத் தடுக்கும் விடயம் என்ன என்பது, புரிந்துகொள்வதற்கு கடினமான ஒன்றாகவே உள்ளது. தமிழ்க் கூட்டமைப்பு இதனைச் செய்கிறதுதானே. நிச்சயமாக ஜனாதிபதி இவர்களை விரட்டிவிடப் போவதில்லை. அவர்களது ஆதங்கங்களையும் அவர் கேட்பார் என நான் உறுதியாக நம்புகிறேன். ஒரு பிரச்சினை தீர்க்கப்படலாம் அல்லது தீர்க்கப்படாமலும் விடலாம். ஆனால், அந்த விடயம் தொடர்பான அறிவாவது அவருக்கு இருக்க வேண்டும்.

எனினும், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் கவலைக்குரிய வகையில் தோல்வி கண்டிருக்கின்றனர். முஸ்லிம் விவகாரங்களை எழுப்புவதன் மூலம் ஜனாதிபதியின் எதிர்ப்பை சம்பாதித்து, அதனால் தமது பதவிகளையும் சுகபோகங்களையும் இழந்து விடக் கூடும் என அவர்கள் அஞ்சுகின்றனர் என்ற எண்ணம்தான் சமூகத்தில் காணப்படுகிறது. ஆகவே, அவர்கள் தமது பதவி, பட்டங்களை இழக்க விரும்பவில்லை.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, முஸ்லிம்கள் ஏனைய இன, சமயக் குழுக்களுடன் அமைதியான முறையில் உறவுகொள்கின்ற சமூகத்தினர் என சரியாகவே சுட்டிக்காட்டியிருந்தார். அத்தோடு அவர்கள் அக்கலாச்சாரங்களை தமது சொந்தக் கலாச்சாரத்துடன் சுமுகமாக இடைத் தொடர்புடையதாய் மாற்றுகின்றனர் எனவும் குறிப்பிட்டிருந்தார். "அவர்கள் ஆயுதப் போராட்டத்திற்கோ அல்லது அழிவுக்கோ தம்மை ஒன்றுதிரட்டியிருக்கவில்லை."

அதற்குப் பகரமாக, வரலாற்றின் நெருக்கடியான காலங்களில், நாட்டைக் காப்பாற்றுவதற்கு முஸ்லிம்கள் பெரும் (பக்.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்யித் முஹம்மத் இப்னு முஹம்மத் யூஸுப் ஆலிம் அவர்கள் ஹெம்மாதகமை மடுல்போவையைச் சேர்ந்தவர். வாடியதன்னை முஸ்லிம் வித்தியாலயத்தில் [தற்போதைய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி] ஆரம்பக் கல்வியைப் பெற்றார். தர்ஹா நகர் மஃஅஹதுல் இஸ்லாமியிலும், அல் ஹம்ரா பாடசாலையிலும் கல்வி கற்றார். பின்னர் ஆங்கிலம் கற்பதற்காக மாத்தளை ஸாஹிறாக் கல்லூரிக்குச் சென்றார்.

செய்யித் முஹம்மத் அவர்கள் அதற்குமேல் படிக்கவில்லை. ஆனால், அவரது தீவிர வாசிப்பினால் சகல கலைகள் குறித்தும் ஆழ்ந்த அறிவைப் பெற்றுக்கொண்டார். 1957–1959 வரை இவர் இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் அமீராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.


நூல்களுடன் இறுக்கமான பிணைப்பைக் கொண்டிருக்கும் இவர், தற்போது Islamic Book Houseஇன் பொறுப்பாளராகப் பணியாற்றி வருகிறார். மிக எளிமையான வாழ்க்கையை வாழ்ந்துவரும் செய்யித் முஹம்மத் அவர்களுடன் மீள்பார்வை மேற்கொண்ட நேர்காணலை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

**சந்திப்பு சிராஜ் மஷ்ஹூர், இன்ஸாப் ஸலாஹுதீன்**

# மக்கள் ஆதாரபூர்வமானதை வாசிக்கவே விரும்புகிறார்கள்

**செய்யித் முஹம்மத் - முன்னாள் அமீர் - இலங்கை ஜமாஅதே இஸ்லாமி**

இந்த நாட்டிலே நாங்கள் சுமார் 1000 வருடங்கள் வாழ்கிறோம் ஆனால், பக்கத்தில் இருக்கும் தமிழ், சிங்கள சகோதரர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி நாம் எதுவும் சொல்லவில்லை. அதற்குரிய குற்றம் முழு முஸ்லிம் சமூகத்தையும் சாரும். அல்லது உலமாக்களைச் சாரும். அல்லாஹ் யாரைக் குற்றம் பிடிப்பான் என்று தெரியாது.



**★ புத்தக நிலையத்துடனான அனுபவங்களை முதலில் அறிந்துகொள்ள விரும்புகின்றோம்...**

இங்கு ஜமாஅதே இஸ்லாமி தொடங்குவதற்கு முன்னரே புத்தக நிலையம் தொடங்கப் பட்டு விட்டது. அதாவது 1949, 50களில் ஜமாஅத்தை ஆரம்பிப்பதற்கான அத்திவாரப் பணிகளை மேற்கொண்டோம். அங்கத்தவர்களைத் திரட்டுவதற்காக சுமார் 4 வருடங்கள் அல்குர்ஆன் வகுப்புகளை நடத்தினோம். இந்த முயற்சியின் போதே புத்தகம் விற்பனை செய்வதும் ஆரம்பித்தோம். 1954இல் உத்தியோகபூர்வமாக ஜமாஅதே இஸ்லாமியை அங்குரார்ப் பணம் செய்தபோது இலங்கை ஜமாஅதே இஸ்லாமி புத்தக நிலையமும் தொடங்கப் பட்டது. கிட்டத்தட்ட 1987 வரைக்கும் அப்பெயர்தான் இருந்தது. அதன் பிறகுதான் Islamic Book House என்று மாற்றம் பெற்றது.

ஆரம்ப காலத்தில் ஒருசில தர்ஜுமா பிரதிகளையும் சென்னையிலிருந்து வந்த ஜமாஅத்தின் ஒரு சில புத்தகங்களையும் வைத்துத்தான் புத்தக நிலையம் ஆரம்பிக்கப் பட்டது. 1987இற்குப் பிறகு ஏனைய கருத்துக்களையும் அங்கீகரிக்க வேண்டும் என்ற முடிவில் அங்கீகரிக்க முடியுமான புத்தகங்களையும் வைத்தோம். அல்லாஹ்வின் கிருபையால் இன்று நாட்டில் பிரபல்யமான ஒரு புத்தக நிலையமாக மாறியிருக்கின்றது. எமது நோக்கம் வியாபாரம் என்பதை விட முஸ்லிம் சமூகத்திற்கும் ஏனையவர் களுக்கும் அறிவைக் கொடுக்க வேண்டும் என்பதுதான் முதன்மை நோக்கமாகும்.

**★ சமூகத்தில் வாசிப்பு அதிகரித்திருப்பதாகக் காண்கின்றீர்களா?**

இந்தக் கால எல்லைக்குள் எனது அனுபவத்தின் அடியாகச் சொல்வதாயின், வாசிப்பு ரொம்பத் துரிதமாக வளர்ந்திருக்கின்றது என்றுதான் சொல்வேன். அதிலும் சந்தோசத்திற்குரிய விடயம் என்னவென்றால், எல்லோரும் ஆதாரபூர்வமாக வாசிக்கவே விரும்புகின்றார்கள். மூடநம்பிக்கைகளை மக்கள் இப்போது வாசிப்பதில்லை.

மற்றது, பெரிய மட்டத்தில் ஆங்கிலம் வாசிக்கும் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களும் ஆதாரபூர்வமான புத்தகங்களையே எப்போதும் கேட்கிறார்கள். இவை மனத்திற்கு மகிழ்ச்சியைத் தரும் விடயங்களாகும்.

**★ ஜமாஅத்துடனான இணைவு பற்றிக் குறிப்பிட முடியுமா?**

நான் தர்ஹா நகரில் இருக்கும்போது துன்துவையைச் சேர்ந்த அப்துல் காதர் மாஸ்டர் என்பவருக்கு மௌலானா மௌதூதி (றஹ்) அவர்கள் ஜமாஅத்தை ஆரம்பித்தபோது அவருடன் கடிதத் தொடர்பு இருந்திருக்கின்றது. மேலும் இமாம் ஹஸனுல் பன்னாவின் சகோதரத்துவ அமைப்புடனும் தொடர்பு வைத்திருந்திருக்கி றார். சர்வதேச அளவில் நடைபெறும் இப்புதிய முயற்சிகள் குறித்து ஷாஜப் ஆசிரியர் மூலமாக நான் அறிந்துகொண்டேன். அப்துல் காதர் மாஸ்டர் அவர்கள் ஸாஜுதியிலேதான் மரணித்தார் என்பதனை இங்கு நினைவுபடுத்த வேண்டும்.

நவீன சீர்திருத்த இயக்கங்கள் குறித்த அறிமுகம் எனக்குள் அதன் பிறகுதான் ஏற்பட்டது. பின்னர் 1950களில் நான் கொழும்பில் இருக்கும்போது ஜெய்லானி ஹஸ்ரத் அவர்கள் சம்மாங்கோட்டைப் பள்ளியில் ஒரு உரை நிகழ்த்துவதாக அறிந்து அங்கு சென்றேன். அவருடன் அறிமுகமாகிக் கொண்டேன்.

இன்னுமொரு தடவை இலங்கை வந்தபோது, மெசென்ஜர் வீதி காதிரிய்யா தகிய்யாவில் தொழச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் அவரைச் சந்தித்தேன். என்னை நன்றாக ஞாபகத்தில் வைத்திருந்து கதைத்தார். இஸ்லாமிய மறுமலர்ச்சிக்குப் பணியாற்ற இலங்கை சிறந்த இடம் எனவும், இனிமேல் அவர் இங்கு இருக்கப் போவதாகவும் சொன்னார். அதன் பிறகு எளிமையான முறையில் இஸ்லாமியப் பணிகள் ஆரம்பமாயின. அங்குதான் ஜமாஅத்துடனான எனது ஆரம்பம் துவங்கியது.

**★ நீங்கள் மௌலானா மௌதூதி அவர்களைச் சந்தித்தது பற்றியும், இஸ்லாமிய எழுச்சிக்கு அவரது பங்களிப்பு பற்றியும் குறிப்பிட முடியுமா?**

1954 அளவில் நான் மௌலானா மௌதூதி அவர்களைச் சந்திக்க பாகிஸ்தான் சென்றேன். ஜமாஅத்தின் செயற்பாடுகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில் மூன்று மாதம் அளவில் அவருடன் தங்கினேன். எல்லா நடவடிக்கைகளையும் நன்கு அவதானித்துப் புரிந்து கொண்டேன்.

மௌலானா அவர்களைச் சந்தித்தது என் வாழ்வில் ஒரு பாக்கியம்தான். ஜமாஅத்தின் தலைமைக் காரியாலயமும் மௌலானாவின் வீடும் ஒன்றாகத்தான் இருந்தது. அந்த வீட்டின் பின் பகுதியில் மௌலானா தங்கியிருந்தார். வீட்டின் முற்றவெளியில் சில வேளை அஸர் தொழுகை நடைபெறும். பெரும்பாலான நேரங்களில் நீண்ட தூரம் மஸ்ஜிதுக்கு நடந்து செல்வார்கள்.

முற்றவெளியில் அஸர் தொழுகை முடிந்ததும் எல்லோரும் அங்கு அமர்வார்கள். பல இடங்களிலும் இருந்து வந்தவர்கள் கேள்விகள் கேட்பார்கள். அதில் ஒரு சிறிய பகுதிதான் 'மாலை அமர்வுகளிலே' எனத் தமிழில் நூலாக வந்திருக்கிறது. நானும் அந்த அமர்வுகளில் கலந்து கொண்டிருக்கிறேன். மௌலானாவுடன் அமர்ந்திருந்தது, கலந்துரையாடியது என எல்லா நினைவுகளும் மனதுக்குள் இனிமையாக இருக்கின்றன.

மௌலானா அவர்கள் நவீன இஸ்லாமிய எழுச்சிக்கு அவரது சிந்தனைகளால் பெரிதும் பங்களித்திருக்கிறார். அவரைப் பற்றி நான் எதுவும் பெரிதாய்ச் சொல்லத் தேவையில்லை. ஷெய்க் யூஸுப் அல் கர்ளாவி அவர்கள் அவரை இந்த நூற்றாண்டின் முஜத்தித் என்கிறார். மேலும் மௌலானா அவர்களின் நூல்களும், பேச்சுக்களும் நவீன இஸ்லாமிய எழுச்சிக்கு அளப்பரிய பங்களிப்புகளை ஆற்றியிருக்கின்றன.

**★ முஸ்லிம் சமூகத்திற்கு நீங்கள் சொல்ல நினைப்பவை...**

இந்த நாட்டிலே நாங்கள் சுமார் 1000 வருடங்கள் வாழ்கிறோம். ஆனால், பக்கத்தில் இருக்கும் தமிழ், சிங்கள சகோதரர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி நாம் எதுவும் சொல்லவில்லை. அதற்குரிய குற்றம் முழு முஸ்லிம் சமூகத்தையும் சாரும். அல்லது உலமாக்களைச் சாரும். அல்லாஹ் யாரைக் குற்றம் பிடிப்பான் என்று தெரியாது.

மேலும், இயக்கங்கள் தங்களுக்கு மத்தியில் உள்ள உறவுகளை சீர்படுத்திக்கொள்ள வேண்டும். அழகிய இஸ்லாத்தின் தூதை பிறருக்கு எத்தி வைக்க வேண்டும்.

அதேவேளை, சமூகத்திற்குள் சீர்திருத்தம் செய்ய வேண்டும். இஸ்லாத்தை பிறருக்கு எத்தி வைக்க வேண்டும். இவற்றைச் செய்வதற்கு முஸ்லிம் சமூகம் ஐக்கியப்பட வேண்டும். ஒரு பொது இணைப்பில் அனைவரும் செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கருத்து
மாற்றுக் கருத்து

# முதலில் நாம், அடுத்து மற்றவர்கள்

## First We, Next Others

**உம்மு பத்ஹி வெகன்**



''உயிர்த்துடிப்புடன் கூடிய இஸ்லாமியப் பெண் ஆளுமை குறித்து...'' என்ற சகோதரர் பிராஜ் மஷ்ஹூரின் கட்டுரை ஆழமான பல கருத்துக்களை தன்னுள் அடக்கியிருந்தது. ''தவக்குல் கர்மானிடம் நாம் படிப்பதற்கு நிறையப் பாடங்கள் உள்ளன. அவரது உயிர்த்துடிப்புடன் கூடிய சமூக அரசியல் செயற்பாடுகள் நமது கீழைத்தேயப் பெண்களுக்கு சிறந்த முன்மாதிரியாக உள்ளது. இத்தகைய இஸ்லாமியப் பெண் ஆளுமைகளை உருவாக்க வேண்டிய பலத்த தேவை நம் முன்னேயும் உள்ளது'' என்ற கட்டுரையாசிரியரின் முடிவுரை வசனங்கள் என்னை எழுதத் தூண்டியது.

சகோதரி தவக்குல் கர்மான் போன்ற பெண் ஆளுமைகளை வேண்டி நிற்பது நியாயமே. ஆயினும் எமது சமூகக் கட்டமைப்பின் எத்தனை புல்லுருவிகள், தடைக்கற்கள் உள்ளன. ஆளுமை உருவாக்கத்தை தடுக்கும் அல்லது வரையறை செய்யும் வட்டத்துள் பின்வருவோர் பலவகையில் தாக்கம் செலுத்துகின்றனர்.

1. பெற்றோர்
2. பாடசாலை
3. மத்ரஸாக்கள், அறபுக் கல்லூரிகள்
4. சமூக அமைப்புக்கள்
5. கணவன்
6. குறிப்பிட்ட பெண்

இன்றைய முஸ்லிம் சமூகத்திலுள்ள பெற்றோர் பெண்ணைப் பெற்றோம், வளர்த்தோம், கட்டிக் கொடுத்தோம், கடமை முடிந்துவிட்டது என்று பெருமூச்சு விடுபவர்களாகவே இருக்கின்றனர். இதன் காரணமாக உருவாக வேண்டிய எத்தனையோ பெண் ஆளுமைகள் இடையில் உடைத்து விடப்படுகின்றன.

பெற்றோரின் இத்தகைய சிந்தனை இளவயதுத் திருமணங்களைத் தூண்டி விவாகரத்து, விதவை என்ற பாவ பரிதாபத்திற்குரிய பாத்திரங்களை உருவாக்குகின்றன. இளவயதுத் திருமணங்களினால் விதவைகளின் எண்ணிக்கை புத்தளம் மாவட்டத்தில் அதிகரித்துள்ளது. இதனால் தாபரிப்புப் பணம் பெறுவோரின் எண்ணிக்கையும் அதிகமாகியுள்ளது (23.10.11 தினக்குரல்). இந்த அவதானத்தை ஓர் அந்நிய மதப் பெண் அல்லது எழுத்தாளர் கூறுபவருக்கு இப்பிரச்சினை முற்றியுள்ளது.

அடுத்து, பாடசாலைகள் குறிப்பாக முஸ்லிம் பாடசாலைகள், எத்தனையோ பெண் ஆளுமைகளை முளையிலே கிள்ளி விடுவதை அவதானிக்கலாம். கலவன் பாடசாலைகளில் ஆண் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுப்போம், அடங்கிப்போக வேண்டும் என்று விவாத மேடைகள், மன்றங்கள் என்பவற்றில் மாணவிகள் தூரமாக்கப்படுவர்.

விளையாட்டுப் போட்டிகளின் போது கலாசாரத்தைப் பேணி நடத்தத் தெரியாத அல்லது நடத்த எத்தனிக்காத அதிபர், ஆசிரியர்களால் எத்தனையோ பெண் ஆளுமைகள் மாணவப் பருவத்திலேயே விலங்கிடப்படுகின்றன. பெண்கள் பாடசாலைகள் என்றால் அங்கே கட்டுப்பாடுகள் அதிகமாகி ஆளுமைகள் அர்த்தமற்றவையாக ஆக்கப்படுகின்றன.

அறபு மத்ரஸாக்கள் குறுகிய மனப்பான்மையுடனே செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. குர்ஆனைப் படித்துக் கொடுக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. என்றாலும், அநேகமானோரின் போதே அபாயா அணிய வேண்டும், பருவ வயதை அடைந்தவர்கள் என்றால் முகம் மூட வேண்டும் என்று இரண்டு வரையறைகளை விதித்துவிடுவர். (1. வயதுக்கு வருதல் 2. முகம் மூடுதல்)

இந்நிலை பாடசாலைக் கல்வியில் இவர்களது ஆர்வத்தை இழக்கச் செய்துவிடும். ஒரு மாதிரியாய் சாதாரண தரப் பரீட்சை எழுதுவார்கள். அதன் பிறகு உள்ள டியூசன், கடின உழைப்புடன் கூடிய படிப்பு என்பவற்றைக் கருத்திற் கொண்டு சாதாரண தரத்தில் 9 பாடங்களிலும் ஏ எடுத்தவர்களும் வீட்டோடு இருந்துவிடுவர். இங்கிருந்து சமூக ஆளுமைகள் உருவாவது எப்படிச் சாத்தியமாகும்?

அறபுக் கல்லூரிகளும் பெரும்பாலும் அறபு அறிவை வளர்த்துவிடுகின்றன. பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்புகின்றன. ஆனால், அறிஞர் அவையொன்றில் எழுந்து நின்று இரண்டு வார்த்தையேனும் பேச இவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதில்லை. ஆளுமை உருவாக்கத்தில் பேச்சுக்கு ஒரு தனியிடம் இருக்கிறது என்பதை இவர்கள் மறந்துவிடுகின்றனர் அல்லது மறுத்துவிடுகின்றனர்.

இன்றைய எமது சூழலில் எட்டிக்குப் போட்டியாக எத்தனையோ சமூக அமைப்புக்கள் உருவாக்கம் பெற்றுள்ளன. அவையெல்லாம் இயங்குவது இஸ்லாமியப் பெயரில்தான்; சொல்லிக் கொடுப்பதும் இஸ்லாத்தைத்தான்.

எனினும், அங்கும் பெண் ஆளுமைகளுக்கு வரம்புகள் இடப்படுகின்றன. உடையமைப்பாலே நாம் இந்தக் குழு என்று அடையாளப்படுத்திக் கொண்டு அலங்கோலங்களாக அவதிப்படுகின்றனர். நாம் கற்றதை இன்னொருவருக்கு சொல்லிக் கொடுக்கும் திராணி அற்றவர்களாகவே காணப்படும் இவர்களில் இருந்து பெண் ஆளுமைகள் எப்படி உருவாவது?

அடுத்து, பெண்களின் ஆளுமை உருவாக்கத்தில் படிக்கற்களாக நிற்கவேண்டிய எத்தனையோ 'கணவன்' என்ற சமூகப் பாத்திரங்கள் தடைக்கற்களாக தட்டுப்படுகின்றன. திருமணம் முடித்தவுடன் அழகான எனது மனைவி வீட்டுடனே ருசியாக சமைத்துப் போட்டுக் கொண்டு பிள்ளைகளை, தமது பெற்றோரைக் கவனித்துக் கொண்டு இருக்க வேண்டும் என்று ஒரு கட்டுப்பாடு விதித்து விடுகின்றனர்.

கன்னியாய் இருக்கும்போது கடமையுணர்வுடன் செயற்பட்ட எத்தனையோ பெண்கள் கல்யாணம் ஆனதும் கட்டுப்பாட்டுக்கு மதிப்பளித்து தொழிலையே விட்டுவிடுகின்றனர். சகோதரி தவக்குல் கர்மானின் கணவன் இதற்கு விதிவிலக்கானவர். இன்னும் சில கணவன்மார் மனைவி வெளியே போனால் பிள்ளைகளை யார் பார்ப்பது? என்று தமது முடிவுக்கு நியாயமான வினா எழுப்ப முனைவர்.

**இந்தத் துறை**, அதாவது திருமணம் என்ற அம்சமானது முஸ்லிம் சமூகத்தில் பாரியதொரு சமூக இடைவெளியை ஏற்படுத்திக் கொண்டிருப்பது கண்கூடு. அதாவது ஆர்வமுள்ள, ஆளுமைப் பண்புகளுடன் கூடிய எத்தனையோ பெண்கள் ஆர்வமற்ற, சமூகம் பற்றிய கவலையே அற்ற ஆண்களை தமது கணவர்களாகக் கட்டிக் கொள்வதால், எத்தனையோ ஆளுமைகளை உடைத்து விடும் ஒரு கருவியாக திருமணம் திகழ்கிறது. அதனால் திருமணம் பண்ணக் கூடாது என்று பிழையாக விளங்கிக் கொள்ளவும் கூடாது.

இதேவேளை ஆளுமைப் பண்புகளுடன் கூடிய ஒரு ஆண் வெறுமனே மனைவியின் அழகை மட்டும் கவனத்திற் கொண்டு திருமண பந்தத்தில் இணைந்த நாள், தனக்கிருந்த ஆளுமைப் பண்புகளை இழந்த சந்தர்ப்பங்கள் அதிகமுள்ளன. இந்நிலை தொடருமானால் பெண் ஆளுமைகள் எதிர்காலத்தில் எப்படி உருவாவது அல்லது உருவாக்குவது?

அடுத்து, ஆளுமைப் பண்புள்ள பெண்ணின் உருவாக்கத்தில் குறிப்பிட்ட இப்பாத்திரமே -அதாவது குறிப்பிட்ட பெண்ணே- தனக்குத் தடையாக அமைந்துவிடும் சந்தர்ப்பங்களும் அதிகம். மேலே குறிப்பிட்ட அனைத்துச் சக்திகளினதும் ஒருங்கிணைந்த எதிர்மறைத் தாக்கம் இவரில் தென்பட்டுவிடும். படிப்பதற்கு, வகுப்புக்குப் போவதற்கு, பல்கலைக்கழகம் போவதற்கு என்று தலையைச் சொறியும் யுவதிகள் இன்று அநேகர். இவர்கள் செல்போன், இன்டர்நெட், Facebook... என்பவற்றில் ஆழ்ந்து, பெறுமதியான தமது ஆளுமைப் பண்புகளை இழந்துவிடுகின்றனர்.


ஆக, தாசக்களை, உயிர்த்துடிப்புடன் கூடிய இஸ்லாமிய பெண் ஆளுமைகளை உருவாக்குவது என்பது பெண்களிலிருந்து மட்டுமல்ல, ஆண்களில் இருந்தும்தான் ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில் மேற்கூறிய தடைகளில் அதிமானவை ஆண்கள் பக்கமிருந்தே வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஷீர்

# எதிர்ப்பும் தற்காப்பும்: வலதுசாரி பாதையினூடே

**பா.ஜ.க. தனது ஃபாஸிச மக்கள் விரோத, ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் ஆதரவு நிகழ்ச்சி நிரலை பகலில் முன்னெடுத்து செல்கின்றது. அதையே இரவென்ற கரிய திரைக்குப் பின்னிருந்து காங்கிரஸ் கட்சி நைச்சியமாக செய்து முடிக்கின்றது.**



இந்தியாவை ஆளும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியரசு பல முனைகளில் நெருக்கடியை சந்தித்து வருகிறது. காங்கிரஸ் கட்சிக்கு இத்தனை சிக்கல்கள் இருந்தாலும், அவர்களின் ஒரே ஒரு அரசியல் எதிரியான பா.ஜ.க.வை நினைத்துத்தான் தூக்கத்தை தொலைக்கின்றனர்.

காரணம், கொள்கை வேறுபாடெல்லாம் ஒன்றுமில்லை. காங்கிரஸ் கட்சி இன்று சந்திக்கும் மேற்சொன்ன விடயங்களில் தனையாவது எதிர்க்கட்சியான பா.ஜ.க.விற்கு கவிழ்ந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இன்னுஞ் சொல்லப்போனால் ஒரே சித்தாந்தத்தின் இரு பணியாளர்கள்தான் காங்கிரஸும், பா.ஜ.க.வும்.

பா.ஜ.க. தனது ஃபாஸிச மக்கள் விரோத, ஏகாதிபத்திய உலகமய மாக்கலின் ஆதரவு நிகழ்ச்சி நிரலை பகலில் முன்னெடுத்துச் செல்கின்றது. அதையே இரவென்ற கரிய திரைக்குப் பின்னிருந்து காங்கிரஸ் கட்சி நைச்சியமாக செய்து முடிக்கின்றது. காங்கிரஸின் கவலையெல்லாம் மக்கள் விரோத ஏகாதிபத்திய அடியாள் வேலையில் எப்படியாவது பா.ஜ.க.வை முந்திவிட வேண்டும் என்பதே. பா.ஜ.க.வை முந்தும் இந்த செயற்திட்டத்தின் மூலமாக காங்கிரஸ் அரசு மலைபோல குவிந்துள்ள தனது தோல்விகளை வெளிப் பறக்கடிக்கப் பார்க்கின்றது.

**விளிம்பு நிலை மக்களுக் கெதிரான காங்கிரஸ் அரசின் தீர்மானங்களும், செயல்பாடுகளும்**

இந்திய மேல்தட்டு வர்க்கம், தமது இனிய கனவை கலைக்கும் தொல்லைமிக்க கொடுங்கனவாகவே இந்தியக் குடிமகனின் அன்றாட வாழ்விற்கான அடிப்படை தேவைகளை காணுகிறது.

வாழையடி வாழையாக பிறந்து, தவழ்ந்து ஓடி விளையாடி களித்து வளர்ந்த பூமியை விட்டு பிடுங்கி எறியப்படுகின்றனர். இந்த அநீதிக்கெதிராக சாத்வீக போராட்டங்களை அம்மக்கள் முன்னெடுத்து அப்போராட்டங்கள் இலக்கை எட்டாமல் களைத்துப் போகும் பட்சத்தில் அம்மக்களின் உணர்வில் கையறு நிலையுடன் கூடிய மூச்சடைக்கும் வெற்றிடம் உண்டாகின்றது.

மார்க்ஸிய லெனினிய அதி தீவிர குழுக்கள் அவ்வெற்றிடத்தை சூறாவளியின் வேகத்தில் நிரப்ப முயல்கின்றனர். அந்த உரசலில் அப்பாவி குடிமக்களோடு சேர்ந்து அரச படை விளைக்கும் பெருத்த சேதம் விளைகின்றது.

இந்திய மத்திய அரசின் உள்துறையமைச்சர் ப.சிதம்பரம் குடிமக்களின் இந்த வாழ்வாதார கோரிக்கைகளையும், போராட்டங்களையும், உணர்வுகளையும் தேசப் பாதுகாப்பிற்கு எதிரானது என்ற ஒற்றை வரி ஆத்திரத்திற்குள் அடக்க முயல்கிறார். மாவோயிச பிரச்சினையை தீர்க்க ஒரே வழி காவல்துறைக்கு மென்மேலும் படைக்கலன்களை அள்ளி வழங்குவதுதான் என்கிறார். இப்பிரச்சினையை சிவப்பு அபாயம் என இந்திய தலைமையமைச்சர் மன்மோகன் சிங் மென்மையான குரலில் திருவாய் மலர்கிறார்.

இதையே ஹிந்துத்துவ ஃபாஸிச குரு கோல்வால்கர் இடதுசாரிகள் இந்திய தேசிய வாழ்விற்கு எதிரானவர்கள் என அன்றே கர்வம் பொங்க முன்மொழிந்துள்ளார். இவ்வாறாக காங்கிரஸின் கருக்குழு (CORE GROUP) வலதுசாரி தீரோட்டத் திற்கேற்ப தனது மனச்சாட்சியை எவ்விதத் உறுத்தலுமின்றி தகவமைத்துக் கொண்டிருக்கின்றது.

**ஆதார் என்ற ஆள் மோசடி அட்டை**

தனது சொந்த குடிமக்களை அறுத்துப் பலியிட்டாவது பழம் பெரும் தோத்தை காப்பாற்றத் துடிக்கும் வலதுசாரி பாவச்செல்வரான உள்துறையமைச்சர் சிதம்பரம் இன்னும் பல கருப்பு சட்டங்களையும் திட்டங்களையும் கொண்டு வருகின்றார்.

எடுத்துக்காட்டாக ஆதார் என்ற குடிமக்கள் தேசிய அடையாள அட்டை பதிவேடு திட்டத்தைக் குறிப்பிடலாம். ஒரு குடிமகனுடைய இறப்பு நீங்கலாக எல்லா விவரங்களையும் கொண்டிருக்கும் இந்த தேசிய அடையாள அட்டை பதிவேட்டில் உள்ள விவரக் குறிப்புகளை தேசிய தகவல் தொகுப்பு வலைப்பின்னல் என்ற கட்டமைப்பின் கீழ் விவரமாகப் பகுத்து சேமிப்பர்.

இவற்றில் உள்ள தரவுகள் குடிவரவு, குடியகல்வுத் துறை, அவசர, உள்நாட்டு உளவுத் துறையினர், மத்திய புலனாய்வுக்கழகம் உள்ளிட்ட 30 துறைகளுக்கிடையேயும், தேவை ஏற்படின் இன்னும் பல துறையினரிடையேயும் பகிர்ந்து கொள்ளப்படும்.

இந்த பல நோக்கு தேசிய அடையாள அட்டை மக்கள் நலத் திட்டங்களுக்கு பயன்படும் என மறைமுகமாக அரசு பேசிக்கொண்டாலும், அதன் உண்மையான நோக்கம் குடிமகனின் அனைத்து நடவடிக்கைகளையும் நவீன முறையில் உளவறிவதேயாகும்.

இன்னும் சொல்லப்போனால் இது முந்தைய பா.ஜ.க அரசின் கனவுத் திட்டமாகும். பங்களாதேஷிலிருந்து பிழைப்புத் தேடி இந்தியாவிற்குள் வரும் மிகவும் வறிய நிலையில் உள்ள முஸ்லிம் உழைப்பாளி அகதிகளை அன்னிய ஊடுருவல்காரர்கள் என முத்திரை குத்திய பா.ஜ.க ஃபாஸிசம் அவர்களை கண்டுபிடித்து நாடு கடத்த வேண்டும் எனவும் விரும்பியது. இதற்கு இசைவாக தேசிய குடிமக்கள் பேரேடு ஒன்றை உருவாக்க வேண்டும் என கூவத்தொடங்கினார்கள். அதற்குள் அவர்களின் பதவி ஆயுள் தீர்ந்து போனது.

இன்றைய காங்கிரஸ் அரசோ இந்த ஆதார் அடையாள அட்டையை கொண்டுவருவதற்கான தலையாய தேவையாக பங்களாதேஷ் ஊடுருவல்காரர்களையும், கஷ்மீரில் பாகிஸ்தானி ஊடுருவல்காரர்களையுமே காரணமாக காட்டுவதோடு இன்னும் ஒருபடி மேலே போய் குடிமக்களை மோப்பம் பிடிக்கத்தான் இந்த திட்டம் என்பதை வெட்கமின்றி ஒப்புக்கொள்கின்றனர். ஆதார் தேசிய அடையாள அட்டையில் குடிமகனின் இறப்பைத் தவிர அனைத்து விவரங்களும் உள்ளன.

**இணையத்தள கெடுபிடி சட்டம்**

இணையத்தள ஒழுங்குமுறைச் சட்டம் என்ற சட்டத்தின் வாயிலாக பொது இணையத்தள விடுதிகளையும் அதனை கட்டண முறையில் பயன்படுத்தும் குடிமகனையும் கண்காணித்து கட்டுப்படுத்த முனைகின்றது இந்திய மத்திய அரசு.

இந்த சட்டத்தை கொண்டுவருவதற்கு தீவிரவாதிகள் விடுக்கும் மிரட்டல் மின்னஞ்சல்கள், ஆபாச இணையதளம் பார்த்தல், பண மோசடி மின்னஞ்சல்கள் ஆகியவற்றை தடுத்தல் போன்றவற்றைக் காரணம் என அரசு கூறுகின்றது. ஆனால் அரசின் கெடுபிடிகள் எதும் மேற்கண்ட வற்றை தடுத்திடவில்லை.

இன்னும் சொல்லப்போனால் ஒரிடத்தில் குண்டு வெடிக்கும் முன்பும், வெடித்த பின்பும் உரிமை கோரும் மின்னஞ்சல்களுக்கு குறைவில்லை. மற்ற இணையத்தள தீமைகளும் குறைவற நடந்து கொண்டே இருக்கின்றன.

உண்மையில் அரசு நாடுவதெல்லாம் குடிமக்களின் அந்தரங்கம் பேணும் உரிமை, இணையத்தள விடுதிக்காரர்களின் பிழைப்பு, குறைந்த கட்டணத்தில் இணையத்தள வசதியை பயன்படுத்தி கல்வியையும், பயனுள்ள பல தகவல்களையும் பெறும் எளிய மக்களின் வாய்ப்பு போன்றவற்றை பறிப்பது தான்.

**மத சிறுபான்மையினரிடம் காட்டப்படும் இரு முகம்**

பா.ஜ.க.வின் சிறுபான்மை விரோத வலதுசாரி போக்கை காட்டியே இதுவரை முஸ்லிம் வாக்குகளை பெற்றுவரும் காங்கிரஸ் அதற்கு கைமாறாக அரசு துறைகளில் இடஒதுக்கீட்டை ஆணை காட்டி வருகின்றது.

இதற்கு முன் நீதியரசர் நீதிபதி ராஜிந்தர் சச்சார் தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது. அவ்வாணையம் தலித்துகளைவிட கீழான பரிதாபகர வாழ்நிலையில் இந்திய முஸ்லிம்களின் வாழ்வுதாக ஒளிவுமறைவின்றி வெளிச்சம் போட்டுக்காட்டியதோடு மட்டுமின்றி அரசு எடுக்க வேண்டிய பரிகாரங்களையும், தீர்வுகளையும் பரிந்துரைத்தது. அவற்றில் இடஒதுக்கீடும் அடங்கும்.

அதை நடைமுறைப்படுத்தக் கோரினால், சிறுபான்மையினருக்கான மத்திய அமைச்சர் ஸல்மான் குர்ஷித் என்பவர்; சச்சார் ஆணைய பரிந்துரை ஒன்றும் குர்ஆன் வசனமில்லை அப்படியே கடைப்பிடிக்க என திருவாய் மலர்ந்தருளினார்.

அத்துடன் நில்லாது இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீடு என்பது சாத்தியமே இல்லை என மிகத் தெளிவாக கூறினார் இதே அமைச்சர், சில மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்களோ அல்லது இடைத் தேர்தல்களோ வரும் போது முஸ்லிம்களுக்கான இடஒதுக்கீட்டை மத்திய அரசு கொண்டு வரும் என பசப்புவார்.

மாலேகான், நாண்டேட், இந்தியா, பாகிஸ்தான் புகையிரதம் உள்ளிட்ட பல இடங்களில் குண்டு வெடிப்புகள் நடந்து நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல இக்குண்டுகளை வைத்தது முஸ்லிம்கள்தான் எனக் கூறி ஏராளமான முஸ்லிம் இளைஞர்களை மித்திரவதை செய்து சிறையிலடைத்தது காவல் துறை.

ஆனால் குண்டு வெடிப்பை திட்டமிட்டு நடத்தியது ஆர்.எஸ்.எஸ் தான் என்பது பயங்கரவாத எதிர்ப்பு படையின் தலைவரும், நேர்மையான மனசாட்சியுள்ள காவல் அதிகாரியுமான ஹேமந்த் கர்கரே அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அம்பலப்படுத்தப்பட்டது.

மாநில அரசினுடைய காவல் துறையின் செயல்பாடுகளில் ஹிந்துத்துவ போக்கும் சார்பானமும் இருப்பதால் இவ்வழக்கின் விசாரணை நீதமாக பாரபட்சமின்றி நடக்க வேண்டுமெனில் மத்திய புலனாய்வுக்கழகத்திற்கு ஒப்படைக்க வேண்டும் என கோரிக்கை எழுந்தது. அதன்படியே இவ்வழக்குகள் அதன்வசம் ஒப்படைக்கப்பட்டன.

குண்டு வைத்த உண்மைக் குற்றவாளிகள் ஹிந்துத்துவ ஃபாஸிஸ்டுகள்தான் என்பது தெளிவான பிறகு எங்களுக்கு பிணை வழங்கி இவ்வழக்கிலிருந்தும் விடுதலை செய்ய வேண்டும் என இவ்வழக்கின் சிறைப்பிடிக்கப்பட்ட நிரபராதி முஸ்லிம்கள் நீதிமன்றத்தில் கோரிக்கை வைத்தபோது அதை மத்திய புலனாய்வுக்கழகம் வன்மையாக எதிர்த்தது.

இதன் விளைவாக அவர்கள் செய்யாத குற்றத்திற்காக இன்னும் சிறையில் வாடி வதங்கி வருகின்றனர். இந்த முஸ்லிம் இளைஞர்களை காங்கிரஸ் கூட்டணி ஆளும் மஹாராஷ்டிர மாநில அரசே முதலில் சிறைப் பிடித்தது. அவர்களை பிணையில் விட மறுப்பதும் காங்கிரஸ் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள மத்திய புலனாய்வுக் கழகம் என்பதை நினைவிலிருத்த வேண்டும்.

இதுவல்லாமல் சிறுபான்மை மாணவர்களுக்கு மத்திய காங்கிரஸ் மத்திய அரசு அளித்துவரும் கல்வி உதவித்தொகையும், ஆந்திர மாநிலத்தில் அங்கு ஆளும் காங்கிரஸ் அரசு கொண்டுவந்த முஸ்லிம்களுக்கான இடஒதுக்கீடும் கடலில் கரைத்த பெருங்காயத்திற்கு சமம்தான். அத்துடன் அது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையே.

**நிறைவாக...**

இவ்வாறாக, இருக்கின்ற ஆட்சியை தக்கவைக்கவும், பல முனைகளில் கண்டுவரும் தோல்விகளை மறைக்கவும் முயலும் காங்கிரஸ் ஒரு பக்கம். மறுபுறம் தனது ஃபாஸிச நிகழ்ச்சி நிரலை முழு வீரியத்துடன் முன்னெடுத்துச் செல்வதற்காக இழந்த ஆட்சியை கைப்பற்ற முயலும் பா.ஜ.க மறுபக்கமுமாக இருவருமே தங்களது உத்தியாகவும், ஆயுதமாகவும் பயன்படுத்துவது ஃபாஸிச வழிமுறைகளைத்தான் என்பது இத்தேசத்தின் மீது படர்ந்து வரும் காரிருளையே சுட்டுகின்றது.

இதற்கான மாற்று அரசியல் சக்தியாக இடதுசாரிகள்தான் களங்களில் படுகின்றனர். எவ்வெனில், பல்லின, மத, மொழி, பண்பாடுகளுடைய மக்கள் வாழும் ஒரு தேசத்தில் சிறுபான்மையினர் தங்களது தனித்துவ அடையாள அரசியலை மட்டும் நடத்தி தங்களுக்கான உரிமைகளை நிலைநாட்டவும், இன வெறுப்பு அரசியலுக்கு அணை போடவும் இயலாது.

தங்களின் தனித்துவத்தை தக்க வைத்துக்கொண்டே பெரும்பான்மை மக்களையும் ஒன்றிணைத்துச் செல்லும் ஒரு வேலைத்திட்டம் தேவைப்படுகின்றது. அவ்வேலைத்திட்டம் துளிர்த்து தழைத்து வேர்பிடிக்கும் வரை இடதுசாரிகளுடன் ஐக்கிய முன்னணி ஒன்றை கட்டுவதே தீர்வாக இருக்கும். அவர்களுடன் ஐக்கியம் கட்டுவதற்கு சில நெகிழ்வான, தளர்வான போக்குகளையுடைய முடிவுகளை நாம் எடுக்க வேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொரோக்கோ பொதுத் தேர்தலில் இஸ்லாமியக் கட்சி வெற்றி

மொரோக்கோவில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் நீதிக்கும் அபிவிருத்திக்குமான இஸ்லாமியக் கட்சி (Party of Justice and Development) அதிக ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளது. அக்கட்சி 395 ஆசனங்களைக் கொண்ட மொரோக்கோ பாராளுமன்றத்தில் 107 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

இதன்மூலம் பாராளுமன்றத்தை வழிநடத்தும் ஆற்றலை அக்கட்சி பெற்றுள்ளது. 2007 தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்ற தேசிய இஸ்திக்லால் கட்சி 60 ஆசனங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.


அப்துல் இலாஹ் பின் கிரைன்

| | |
|---|---|
| **பரப்பு -** | 7,10,850 சதுர கிலோ மீற்றர் |
| **மக்கள் -** | 33.8 மில்லியன் |
| **தலைநகர் -** | ரபாத் (சனத்தொகை 1.6 மில்லியன்) |
| **அரசாங்கம் -** | அரசியலமைப்புக் குட்பட்ட மன்னராட்சி |
| **நாட்டின் தலைவர் -** | மன்னர் 6 ஆம் முஹம்மத் |
| **எல்லைகள் -** | மொரிடானியா, அல்ஜீரியா, மேற்கு ஸஹாரா ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ளது. |

மொரோக்கோவின் மன்னர் ஆறாம் முஹம்மத் அறபுப் புரட்சியைத் தொடர்ந்து நாட்டில் மேற்கொண்டுவரும் அரசியல் சீர்திருத்தத்திற்கான முன்னோடி முயற்சியே இத்தேர்தல் எனக் கருதப்படுகின்றது. மன்னர் ஆறாம் முஹம்மத் முன்வைத்த புதிய அரசியலமைப்பின் பிரகாரம் இத்தேர்தல் நடைபெற்றது. துனீஸியா, லிபியா ஆகிய அயல் நாடுகளில் ஏற்பட்ட அறபுப் புரட்சிகளை அடுத்து மொரோக்கோவிலும் உள்நாட்டுப் புரட்சி வெடிப்பதற்கான வாய்ப்பிருந்தது. இத்தகைய சூழலிலேயே புதிய அரசியலமைப்பை மன்னர் ஆறாம் முஹம்மத் முன்வைத்தார்.

தற்போது அதிக ஆசனங்களைப் பெற்றுள்ள நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி 'கூட்டரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது. "இது நாம் அடைந்த மிகத் தெளிவான வெற்றி. எனினும், இணைந்து பணியாற்ற எமக்கு கூட்டணிகள் அவசியம்" என நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் பொதுச் செயலாளர் அப்துல் இலாஹ் பின் கிரைன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இஸ்திக்லால் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான அப்பாஸ் பாஸ் வெற்றிபெற்ற கட்சியோடு கூட்டுச்சேர விருப்பம் தெரிவித்துள்ளார். "நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி பெற்ற வெற்றி ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி" என அப்பாஸ் மேலும் கூறியுள்ளார்.

நடைபெற்ற தேர்தலில் 13.5 மில்லியன் மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். அவர்களில் 37 வீதமானோரே வாக்களித்திருந்தனர். 2002இல் இது 51.6 வீதமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சிரியாவுக்கெதிரான பொருளாதாரத் தடைக்கு அறப் லீக் அங்கீகாரம்



சிரியா மீதான பொருளாதாரத் தடைக்கு அறபு லீக் அங்கீகாரம் வழங்கியுள்ளது. சிரியா தொடர்ந்தும் தனது மக்கள் மீது மேற்கொண்டுவரும் அடக்குமுறைகளையும் இராணுவத் தாக்குதல்களையும் நிறுத்தி, வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கிலேயே இப்புதிய பொருளாதாரத் தடை விதிக்கப்படுவதாக அறப் லீக் செயலாளர் குறிப்பிட்டார். கெய்ரோவில் கூடிய அறப் லீக் அங்கத்துவ நாடுகள், சிரியாவின் மத்திய வங்கியோடு எவ்வித தொடர்பையும் வைத்துக் கொள்வதில்லை எனவும் சிரியாவின் எந்தவிதமான திட்டங்களுக்கும் நிதியுதவி அளிப்பதில்லை எனவும் முடிவு செய்துள்ளன.

"22 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட அறப் லீக்கில் 19 நாடுகள், சிரியா தன் பொருளாதாரத் தடைக்கு அங்கீகாரம் அளித்துள்ளதாக" கட்டாரின் பிரதமர் ஷெய்க் ஹமாத் பின் ஜாஸிம் அத்தானி தெரிவித்தார்". மத்திய வங்கியுடனான சிரியாவின் பணப்பரிமாற்றம் மற்றும் நிதித்தொடர்பாடல்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் ஜாஸிம் மேலும் தெரிவித்தார்.

சிரியாவில் சமாதான சகோதரர்கள் ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டு, கொலைகளை நிறுத்தி, கைதிகளை விடுதலை செய்வார்கள் எனவும் வீதிகளில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தை விலக்கிக் கொள்வார்கள் எனவும் தான் எதிர்பார்ப்பதாக கட்டார் பிரதமர் அங்கு கூறினார்.

"நாம் சிரியா மீதான வெளிநாட்டுத் தலையீடுகளைத் தவிர்ப்பதற்கே முயற்சிக்கின்றோம்" எனவும் அவர் குறிப்பிட்டார். புதிய பொருளாதாரத் தடை மூலம் சிரியாவுக்கும் ஏனைய அறபு நாடுகளுக்கும் இடையிலான சிரியாவின் பலதரப்பு வர்த்தக உறவுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன.

வீதியில் நிறுத்தப்பட்டுள்ள யுத்த தாங்கிகளையும் அரச இராணுவ வீரர்களையும் விலக்கிக் கொள்வதோடு மனித உரிமைக் கண்காணிப்பாளர்களை அனுமதிக்குமாறும் அறப் லீக் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. சிரிய அரசாங்கம் இந்நிபந்தனைகளை நிறைவேற்றினால் அதன் மீதான பொருளாதாரத் தடையை மறுபரிசீலனை செய்ய முடியும் எனவும் அறப் லீக் செயலாளர் நாயில் அல்அரபி தெரிவித்துள்ளார்.

# இடைக்கால அரசாங்கத்திற்கு தலைமை தாங்கத் தயார்

## முஹம்மத் அல் பராதி தெரிவிப்பு

தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் புதிய இடைக்கால அரசாங்கத்திற்கு தலைமை தாங்க தான் தயார் என முஹம்மத் அல் பராதி கூறியுள்ளார். சர்வதேச அணு சக்தி முகவர் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் பராதி எகிப்தில் நடைபெறவுள்ள அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவுள்ள நிலையில் இடைக்கால அரசாங்கத்திற்கு தலைமை தாங்க தனது விருப்பத்தை வெளிப்படுத்தி யுள்ளார்.

சென்ற திங்கட்கிழமை (29.11.2011) பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு சற்று முன்னரே பராதி இவ்வாறு தெரிவித்தார்.

இடைக்கால இராணுவ ஆட்சியை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர பல



மில்லியன் மக்கள் கலந்து கொண்டும் பேரணியை நடத்துவதற்கு சில அரசியல் செயற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ள நிலையில், எகிப்தில் முதற்கட்டத் தேர்தல் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலுக்குச் செல்லும் எரிவாயுக் குழாய்கள் மீது தாக்குதல்




எகிப்து-இஸ்ரேல் எல்லைப்புறமாக இஸ்ரேலுக்குச் செல்லும் எரிவாயுக் குழாய்கள் மீண்டும் தாக்கியழிக்கப்பட்டுள்ளதாக எகிப்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர். எகிப்திய அல் அரிஷ் நகருக்கு மேற்குப் புறமாகச் செல்லும் எரிவாயுக் குழாய்களே தாக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் இஸ்ரேலுக்குச் செல்லும் எரிவாயுக் குழாய்கள் மீது மேற்கொள்ளப்பட்ட எட்டாவது தாக்குதல் இது என்று அறியப்பட்டுள்ளது. இறுதியாக நவம்பர் 26இல் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலுடனான எகிப்தின் எரிவாயு ஒப்பந்தம் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி முபாரக்கினால் மேற்கொள்ளப்பட்டது. அவர் பதவி விலகி இரு நாட்களின் பின் முதற் தாக்குதல் நடத்தப்பட்டது. இஸ்ரேல் இந்த எரிவாயுவுக்கு முறையாகக் கட்டணம் செலுத்துவதில்லை என்பதுடன், மிகக் குறைந்த விலைக்கே எரிவாயுவைக் கொள்வனவு செய்தும் வருகின்றது. இதனால் எகிப்தியர்களிடையே பெரும் அதிருப்தி அலைகள் ஏற்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவின் இடைக்கால அரசாங்கம் புதிய அமைச்சரவையை அறிவித்துள்ளது



லிபியாவின் அனைத்துப் பிராந்தியங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையிலும் பல முரண்பாடுகள் தலைதூக்கியிருந்த அனைத்து சமூகக் குழுமங்களையும் இணைக்கும் வகையிலும் புதிய அமைச்சரவை அறிவிக்கப்பட்டுள்ளது.

லிபியாவின் இடைக்கால பிரதமர் அப்துர் ரஹீம் அல் கைபிப், ''முழு லிபியாவும் புதிய அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டுள்ளது. பிரதிநிதித்துவம் செய்யப்படாத பகுதி உள்ளதென்று கூறுவது கடினமானது'' எனத் தெரிவித்துள்ளார். லிபிய அமைச்சரவை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே புதிய பிரதமர் அப்துர் ரஹீம் அல் கைபிப் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டின் நடுப்பகுதியில் தேர்தல் நடைபெறும் வரை இப்புதிய அமைச்சரவையே நாட்டின் விவகாரங்களைக் கையாள வேண்டும். 42 ஆண்டு கால கடாபியின் ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் இப்புதிய அமைச்சரவை அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 மாதங்களாக லிபியாவின் பல்வேறு சமூகக் குழுக்களிடையே நிலவிய சமூக முரண்பாடுகள், பகைகள் என்பவற்றை மறைப்பதற்கும், ஒரு தேசிய அடையாளத்தை உருவாக்குவதற்கும் இப்புதிய அமைச்சரவை முயற்சிக்கும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

24 உறுப்பினர்களைக் கொண்டுள்ள புதிய அமைச்சரவையில் சிவில் சமூக அமைச்சு மற்றும் காணாமல் போனோர், காயமடைந்தோர், உயிரிழந்தோருக்கான அமைச்சும் உள்ளடங்குகின்றன.

நாட்டின் பாதுகாப்பு, ஸ்திரப்பாடு, இயல்பு வாழ்வை கொண்டு வருதல், பாடசாலைக் கல்வியைத் தொடருதல், வழங்கப்படாத ஊதியத்தை வழங்குதல் என்பனவே புதிய அமைச்சரவையின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பல மாதங்களாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் இயங்குவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் அவசரமாக வழங்கப்படவுள்ளதாகவும் இடைக்கால அமைச்சரவை தெரிவித்துள்ளது.

# தூனிஸியாவில் இடைக்கால அரசாங்கம் ஆரம்பம்



நடைபெற்று முடிந்த அரசியலமைப்புப் பேரவைக்கான தேர்தலில் வெற்றி பெற்ற பிரதான கட்சிகளுக்கிடையிலான உடன்படிக்கையை அடுத்து அந்நஹ்ழா கட்சியின் ஹமாதி ஜிபாலி பிரதமராகவும் அத்தகத்துல் கட்சித் தலைவர் முஸ்தபா பின் ஜஃபர் ஜனாதிபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நடைபெற்ற தேர்தலில் அந்நஹ்ழா கட்சியே ஆகக் கூடிய ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பாராளுமன்றத் தேர்தலும் ஜனாதிபதித் தேர்தலும் நடைபெறும்வரை அறிவிக்கப்பட்டுள்ள புதிய அரசாங்கமே அதிகாரத்தில் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. மத்திய இடதுசாரி முற்போக்கு ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் துணை ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமரின் அரசியல் பொறுப்புகள் குறித்து தெளிவாகத் தீர்மானிக்கும் வரை அமைச்சர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. தலைநகர் தூனிஸில் உள்ள பர்தோ மாளிகையில் ஜனாதிபதி மற்றும் பிரதமரை நியமிக்கும் நிகழ்வு நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட நஹ்ழா கட்சியின் தலைவர், ''நான் அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகின்றேன். வரலாற்றுப் புகழ்மிக்க இந்நாளில் இப்புரட்சிக்கு உழைத்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்'' என்றார்.

பின் அலி பதவி கவிழ்க்கப்பட்டு 10 மாதங்களின் பின்னர் அரசியலமைப்புப் பேரவை தேர்தலினூடாக உருவாக்கப்பட்டு, இடைக்கால அரசாங்கமொன்று அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸைபுல் இஸ்லாம் லிபியாவிலேயே விசாரிக்கப்படுவார்



ஸைபுல் இஸ்லாம் கடாபியை லிபியாவிலேயே விசாரணை செய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இணக்கம் தெரிவித்துள்ளது. கடந்த மாதம் தெற்கு லிபியாவில் கைதுசெய்யப்பட்ட ஸைபுல் இஸ்லாம் கடாபி மற்றும் முன்னாள் உளவுத்துறை தலைவர் அப்துல்லாஹ் அல் ஸனூஸி ஆகியோரை லிபியாவிலேயே விசாரணை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இவர்கள் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

லிபியாவில் அரசுக்கெதிரான மக்கள் எழுச்சி ஆரம்பித்த போது அவர்கள் மீது சிவில் யுத்தமொன்றை முன்னைய ஆட்சியாளர் கடாபியின் மகன் ஸைபுல் இஸ்லாமே பிரகடனம் செய்தார். கடாபியின் கட்டுப்பாட்டிலிருந்த தொலைக்காட்சியில் ஸைபுல் இஸ்லாம் இப்பிரகடனத்தைக் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிளர்ச்சியின் போது சுமார் 30,000 லிபியர்கள் முன்னாள் ஆட்சியாளர் கடாபியின் விசுவாசப் படையினரால் கொல்லப்பட்டனர். போர் விமானங்கள், யுத்த டாங்கிகள் என்பன சிவிலியன்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டன. ஸைபுல் இஸ்லாமே இதற்குப் பொறுப்பாக இருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மக்களுக்கு எதிராகப் போர் தொடுத்த வேளை, ஆடம்பரமாக வாழ்ந்த ஸைபுல் இஸ்லாம், [illegible] எனப்படும் மலைப்பாங்கான நகரொன்றில் வைத்து கைதுசெய்யப்பட்டார். அப்போது அவரது உருவம் முற்றிலும் மாறியிருந்தது. தனது தந்தையை கொலை செய்தவர்களைப் பழிவாங்கப் போவதாகக் கூறியிருந்த அவர் கைது செய்யப்பட்டு தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கடாபியின் முன்னாள் உளவுத் துறைத் தலைவர் அப்துல்லாஹ் ஸனூஸியும் லிபியாவிலேயே கைது செய்யப்பட்டு, போர்க் குற்றங்களுக்காக லிபியாவிலேயே விசாரணை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வளைகுடா ஒத்துழைப்பு நாடுகளின் தீர்வுத் திட்டத்தை ஏற்க ஸாலிஹ் இணக்கம்



வளைகுடா ஒத்துழைப்பு சபை நாடுகள் முன்வைத்த தீர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக யெமன் ஜனாதிபதி அலி அப்துல்லாஹ் ஸாலிஹ் தெரிவித்துள்ளார். இது தொடர்பான உடன்பாடு ஜனாதிபதி ஸாலிஹுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் எட்டப்பட்டுள்ளதாக யெமனுக்கான ஐ.நா. தூதுவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இதற்கான நடைமுறை ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். ஆயினும், ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும் என்று போராடி வரும் மக்களின் ஆர்ப்பாட்டங்கள் ஓயவில்லை. துணை ஜனாதிபதி அப்துர் ரப் மன்ஸூரிடம் அதிகாரத்தை கைமாற்றும் திட்டத்திலேயே அரபு நாடுகள் ஈடுபட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோர் குற்றம்சாட்டியுள்ளனர்.

பல மாதங்களுக்கு முன்னர் வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தில் ஒப்பமிடுவதற்கு ஸாலிஹ் மறுப்புத் தெரிவித்து வந்தார். தற்போது அத்திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு அவர் தெரிவித்துள்ள சம்மதத்தை பெரும்பாலான யெமனியர்கள் ஐயத்தோடு பார்க்கின்றனர்.

# சோமாலியா மீண்டும் நெருக்கடியில்

சோமாலியாவில் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக வரட்சி நிலை குறைந்துள்ளதோடு, மனிதாபிமான உதவியும் அதிகரித்துள்ளன. இதனால் இறப்போர் வீதம் கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளதோடு, இயல்பு வாழ்க்கை திரும்பத் தொடங்கியுள்ளது. ஆயினும், சோமாலியாவின் தெற்குப் புறத்தை நோக்கி முன்னேறி வரும் கென்யப் படையினரால் சோமாலியாவுக்கு மற்றுமொரு அழிவு ஏற்படலாம் என்று எச்சரிக்கப்படுகின்றது.

சோமாலியாவில் இயங்கிவரும் அல்ஷபாப் போராளிகளை அழிப்பதாகக் கூறி கென்யப் படையினர் முன்னேறி வருகின்றனர். இதேவேளை, எதியோப்பியாவும் தனது இராணுவத்தை சோமாலியாவை நோக்கி நகர்த்துவதற்கு முயற்சித்து வருகின்றது. சோமாலியா ஏற்கனவே எதியோப்பியாவின் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக உருவாக்கத்தின் அடிப்படைகளை ஊடகங்களே தீர்மானிக்கின்றன

## பேரறிஞர் யூஸுப் அல் கர்ளாவி



இன்று உலகை ஒரு கிராமமாக மாற்றுவதில் தொடர்பூடகங்கள் ஆற்றி வரும் பங்கு முக்கியமானது. சமகாலத்தில் ஊடகங்கள் என்பது வெறும் தகவல் பரிமாற்று சாதனம் மட்டுமன்றி, தேசிய, சர்வதேச சமூகங்களின் அரசியல், பொருளாதார மற்றும் கலாசாரம் தொடர்பான பெரும்பான்மை கருத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. தகவல் ஊடகங்கள் முதலாளிய சக்திகளுக்கு ஒரு கருத்தாதிக்கக் கருவியாக தொழிற்படும் அதேவேளை, இஸ்லாமிய உலகுக்கு இன்னும் அது ஓர் அறைகூவலாகவே இருந்து வருகின்றது.

ஊடக உலகியல்; மூன்றாம் மண்டல நாடுகளில் ஏற்படுத்தி வரும் தாக்கம் மிகவும் பாரியதாகும். தொழில்நுட்ப நுட்பங்களினூடாக ஊடகங்கள் ஒவ்வொரு கணமும் உலகத்தைப் புரட்டிப் போடும் ஆற்றல் கொண்டுள்ளது. தகவல் யுகம் என்று இந்நூற்றாண்டு வர்ணிக்கப்பட்டாலும் அதில் இடம்பெறும் தகவல் பயங்கரவாதத்தை முறியடிப்பது பெரும் சவாலாகும்.

இச்சவாலை சமாளிக்க இஸ்லாமிய உலகுக்கு முன்னாலுள்ள ஒரே வழி சர்வதேச ரீதியான பலமான ஊடகத்தைக் கட்டியெழுப்புவதே. இது குறித்து பேரறிஞர் யூஸுப் அல் கர்ளாவி வழங்கிய நேர்காணலின் சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

தமிழில்: றவூப் ஸெய்ன்

**★ ஊடகத் துறையில் கவனம் செலுத்த வேண்டியவர்கள் யார் என நீங்கள் கருதுகின்றீர்கள்?**

இன்று தொடர்பூடகங்கள் மனிதனது சிந்தனையை, நம்பிக்கையை, உணர்வுகளை கட்டியெழுப்புவதில் முன்னிலை வகிக்கின்றன. சமூகங்களை உருவாக்குவதற்கான அடிப்படைகளை ஊடகங்களே இடுகின்றன. எனினும், கவலைக்குரிய விடயம், முஸ்லிம்கள் அதிலும் குறிப்பாக சமூகத் தலைவர்கள்- பள்ளிவாயல் கட்டுவதையும் ஸதகா செய்வதையுமே தமது பணச் சொத்தின் மூலம் நிறைவேற்ற முடியுமான அம்சங்கள் என்று நினைக்கின்றனர். மனிதர்களைக் கட்டியெழுப்பும் அல்லது சமூகங்களைக் கட்டியெழுப்பும் ஊடகத் துறையின் கவனம் செலுத்துவதை தேவையற்றது என்று எண்ணுகின்றனர்.

ஊடகத்துறையின் முக்கியத்துவத்தையும் அதன் தாக்கத்தையும் நோக்கும்போது இத்துறையைக் கட்டியெழுப்பி, அதனை வளர்ச்சியடையச் செய்வதில் சட்ட நிபுணர்கள், கலைத்துறை சார்ந்தோர், பயிற்றுவிப்பாளர்கள், சிந்தனையாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் என எல்லாத் தரப்புமே இவ்விடயத்தில் பங்கெடுக்க வேண்டியுள்ளது. ஏனெனில், இது எமது அன்றாடப் பிரச்சினையாகும்.

நாளாந்தம் ஊடகத்தோடு நாம் உறவாடுகின்றோம். அவை நமது அறிவை மட்டுமன்றி, கலாசாரத்தை, கண்ணோட்டங்களை, உலகப் பார்வைகளை வடிவமைக்கின்றன. சிறுவர்கள், பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், படித்தவர்கள், பாமரர்கள் என சமூகத்தின் எல்லா மட்டங்களையும் ஊடுருவும் ஆற்றல் ஊடகங்களுக்கு மாத்திரமே உண்டு. இதிலிருந்து அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளலாம்.

அறபு முஸ்லிம் நாடுகளில் இயங்கும் தேசிய ஊடகங்கள் இன்னும் குருட்டுப் பின்பற்றல் என்ற கட்டத்தைத் தாண்டாமல் இருப்பது கவலை தருகின்றது. அறபு-முஸ்லிம் தனித்துவமோ சுயசிந்தனையோ, புத்தாக்க முயற்சிகளோ இன்றி அவை ஒரே வகையான சட்டகங்களுக்குள் சுழன்றுகொண்டிருக்கின்றன.

**★ இஸ்லாமிய ஊடகத் துறைக்கும் மார்க்க ஊடகத் துறைக்கும் இடையே வேறுபாடு இருப்பதாக சிலர் கருதுகின்றனரே.**

இஸ்லாமிய ஊடகத் துறை என்பது இஸ்லாமிய சிந்தனைப் போக்கையும், இஸ்லாமிய கண்ணோட்டத்தையும் கொண்டது. மனிதன், பிரபஞ்சம், வாழ்க்கை அனைத்தையும் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் நோக்குவதே இஸ்லாமிய ஊடகம். அதே வேளை, இஸ்லாமிய ஷரீஆ வரையறைகளை பேணும் எந்த ஊடகமும் இஸ்லாமிய ஊடகமாகவே கொள்ளப்படும். இஸ்லாமிய வரையறைகள் என்பதன் மூலம் சட்ட அறிஞர்கள் வகுத்துள்ள வாஜிப், முஸ்தஹப், முபாஹ், மக்ரூஹ், ஹராம் எனும் அடிப்படைகளையே நாம் கருதுகிறோம்.

நேரடியான மார்க்க ஊடகம் எனும்போது ஜும்ஆ தின குத்பாக்கள், பள்ளிவாயல் பயான்கள், மார்க்க வகுப்புகள், ஷரீஆ கலந்துரையாடல்கள் போன்ற நேரடியான மார்க்க நிகழ்ச்சிகளைக் கொண்டதாக அது இருக்கும். மார்க்க ஊடகத்தை விட இஸ்லாமிய ஊடகம் மிகவும் விரிவானது. ஏனெனில், இஸ்லாமிய ஊடகத்துறை மார்க்க நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கியிருக்கும். அதேவேளை, செய்திகள், பகுப்பாய்வுகள், கருத்துப் பரிமாற்றம், கலை இலக்கியம் சார் நிகழ்ச்சிகளையும் கொண்டிருக்கும்.

**★ இவ்வரைவிலக்கணத்தினூடே தற்போதுள்ள ஊடகங்கள் குறித்து என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

மார்க்க ஊடகமே இன்னும் குறுகிய எல்லைக்குள்ளேயே நிற்கின்றது. அது விளைதிறனோ வினைத்திறனோ அற்று, ஒரு பாரம்பரிய எல்லைக்குள் சுருங்கிப் போயுள்ளது. இன்றைய ஜும்ஆ தின குத்பாக்கள் இதற்கு நல்லதோர் உதாரணம். குத்பாக்களை முன்வைப்பதிலும் அதன் உள்ளடக்கத்திலும் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. காலத் [illegible] தாகவும் கேட்கின்றவர்களின் உள்ளங்களை ஈர்க்காததாகவும் அவை மாறியுள்ளன.

சமகாலத்திற்கும், எப்போதும் பேணப்பட வேண்டிய அடிப்படைகளுக்கும் இடையிலான சமநிலையை அவை பேணத் தவறிவிட்டன. இஸ்லாம் சமகாலத்திற்கும், அடிப்படைகளுக்கும் இடையில் நிலைத்திருக்கக் கூடியது. பெரும்பாலான குத்பாக்கள் அடிப்படைகளில் நிலைத்திருக்கின்றனவே ஒழிய, சமகாலத்தை கருத்திற் கொள்ளவில்லை. சில போது அடிப்படைகளே அங்கு பேணப்படவில்லை.

சில கதீப்மார்கள் பலவீனமான மூலாதாரங்களைக் கொண்டு புனைந்துரைக்கப்பட்ட போலி ஹதீஸ்களையும் மூட நம்பிக்கைகளையும் வெறும் கதைகளையும் மிம்பர்களில் கட்டவிழ்க்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் சமகாலத்திற்கு வெளியே வாழ்கின்றனர்.

நாம் வாழும் காலம் அல்லாத வேறொரு யுகத்திலேயே அவர்கள் இருக்கின்றனர். ஆக, எதிர்பார்க்கப்பட்ட தாக்கத்திற்கு மிம்பர் ஊடகமே வாய்ப்பில்லை. ''நாம் அனைத்து நபிமார்களையும் தங்களது தூதைத் தெளிவுபடுத்துவதற்காக அவர்களது சமூகத்தின் மொழியைப் பேசுபவர்களாகவே அனுப்பினோம்.''

(ஸூறா இப்றாஹீம்: 04)

இவ்வசனத்தில் தெளிவுபடுத்தல் என்பது சாதாரண அல்லது மேலோட்டமான தெளிவுபடுத்தல் என்பதை விட ஆழமான கருத்தினைக் கொண்டது. 'லிஸான்' என்ற சொல் 'மொழி' என்பதை விட கருத்தாழம் மிக்கது. அதாவது குறிப்பிட்ட சமூகத்திற்கு விளங்குகின்ற பாஷையில் பேசுவதால் பொதுமக்களுக்கு ஒரு மொழியிலும் ஏனையவர்களுக்கு இன்னொரு மொழியிலும் தஃவா முன்வைக்கப்பட வேண்டும். இங்கு மொழி வேறுபாடுகள் மட்டுமன்றி, பிரதேச ரீதியாக வேறுபடும் மக்களின் அறிவுத்தரம், விளங்கும் ஆற்றல், துணைக் கலாசாரம், வழக்காறுகள் என்பனவும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

**★ சட்டத்திற்கும் (பிக்ஹ்) ஊடகத்திற்கும் (இஃலாம்) இடையிலான உறவு எப்படியுள்ளது?**

சட்டத்திற்கும் ஊடகத்திற்கும் இடையிலான தொடர்பு இன்னும் வெறும் பத்வா சார்ந்ததாகவே உள்ளது. அதாவது இத்துறைசார்ந்து வழங்கப்படும் மார்க்கத் தீர்ப்புகள் பெரும்பாலும் ஹராம் என்பதாகவே அமைகின்றன. உண்மையில் இஸ்லாம் என்பது ஒரு விசுவாசக் கோட்பாடு, ஒரு சட்ட ஒழுங்கு, ஒரு ஒழுக்கக் கோவை. இவையெல்லாம் இணைந்தே இஸ்லாமிய ஊடகத்துறைக்கான செல்நெறியை வடிவமைக்க வேண்டும். ஆனால், இன்றும் நாம் வானொலி, தொலைக்காட்சி, அவற்றின் கலை-இலக்கிய நிகழ்ச்சிகள் குறித்து ஹராம் என்ற பாணியிலேயே பத்வா வழங்கி வருகின்றோம்.

சட்டத்துறையில் கடும்போக்கை பின்பற்றுகின்றவர்கள் ஊடகத்தை இஸ்லாத்தின் எதிரியாகப் பார்க்கின்றனர். மக்களது வாழ்க்கையில் அனைத்து விவகாரங்களையும் ஹராம் என்று தீர்ப்பளித்து விட்டால், மக்களின் எதிர்வினைகள் மிக மோசமாக அமைந்துவிடும் என்பதை எச்சரிக்கையோடு பார்க்க வேண்டும். பெண்கள் தொழில் பார்க்கலாமா? கற்பதற்கு வெளியேறிச் செல்லலாமா போன்ற அபத்தமான கேள்விகளே பிக்ஹ் துறையில் மேலோங்கி நிற்கின்றன.

நாம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். காலத்தின் பெயரால் எடுத்த எடுப்பிலேயே அனைத்தையும் 'ஆகும்' என அனுமதியளிப்பதற்கும் தீமைகளைத் தடுத்தல் என்ற பெயரில் அனைத்தையுமே 'ஹராம்' எனத் தடுப்பதற்கும் இடையில் ஒரு நேர்மையான சமநிலையைப் பேண வேண்டும். இமாம் ஸுப்யான் அத்தௌரி அவர்கள் சொன்னது போன்று மார்க்கத்தைப் பேணுவதோடு பின்பற்றுபவர்களுக்கு சலுகை வழங்கப்பட வேண்டும். கடும்போக்கைப் பொறுத்தவரை அதனை எல்லா மனிதர்களும் சுயமாகப் பின்பற்ற வேண்டும்.

இன்று இஸ்ரேல் செய்மதிகளைத் தயார்செய்து, அறபு நிலங்களை சாண் சாணாக அளந்து கொண்டிருக்கிறது. நாங்களோ கமெராவினால் போட்டோ எடுக்க முடியுமா என்ற வீண் சர்ச்சையில் மூழ்கியிருக்கிறோம். எனவே, நாம் கொள்கை ரீதியில் கடக்க வேண்டிய பல கட்டங்கள் உள்ளன. அதில் கடும்போக்கோ கவனயீனமோ ஏற்பட்டு விடக் கூடாது.

கிளையம்சங்கள் தொடர்பாக வந்துள்ள சட்ட வசனங்களுக்கும் ஷரீஆவின் ஒட்டுமொத்த நோக்கத்திற்கும் இடையில் பேணப்பட வேண்டிய சமநிலையையே கவனத்திற் கொள்ள வேண்டும். நாம் இன்று பல மில்லியன் முஸ்லிம்களுடன் தொடர்புகொள்கிறோம். அவர்கள் வேறு சமூகங்களுடன் இரண்டறக் கலந்து வாழ்கிறார்கள். அவர்களது வாழ்வியல் இலகுபடுத்தலை வேண்டி நிற்கின்றது. பிக்ஹை இலகுபடுத்திக் கொடுக்க வேண்டிய தேவையும் உள்ளது.

நபி (ஸல்) அவர்கள், ''நீங்கள் இலகுபடுத்துங்கள், கஷ்டப்படுத்தி விடாதீர்கள். நன்மாராயம் கூறுங்கள், மக்களை விரட்டி விடாதீர்கள்'' எனக் கூறியுள்ளார்கள்.

ஊடகம் பற்றி தீர்ப்பு வழங்கும்போதும், ஊடகத்தை கட்டியெழுப்ப முயற்சிக்கின்றபோதும் இக்கருத்துக்களை நாம் கவனத்திற் கொள்வது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தடை மாத்திரை பாவிப்பதன் சட்டத்தீர்ப்பு

**ஷெய்க் பின் பாஸ்**

கருத்தடை மாத்திரைகளை ஒரு வருடத்திற்கு அல்லது இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு பாவிப்பது ஹராமானதா? அல்லது மக்றூஹா? அல்லது ஆகுமானதா?

பெண்ணுக்கு ஏற்படுகின்ற நோய் போன்ற காரணங்களால், தேவை ஏற்பட்டால் மாத்திரம் கருத்தடை மாத்திரை பாவிப்பது பிரச்சினையில்லை.

உதாரணமாக பெண் பாலூட்டும் தாயாக இருக்கிறாள். அவள் கருவுற்றால் பாலருந்தும் குழந்தைக்கு பாதிப்பு ஏற்படும் என்ற நிலை.

கருத்தடை மாத்திரை பாவிப்பதற்கு ஷரீஆ ரீதியான நியாயம் இருக்க வேண்டும். நாம் மேலே குறிப்பிட்ட காரணம் அல்லது கர்ப்பம் தரிப்பது நோய்நிலைக்கும் என நம்பகமான வைத்தியர்கள் அறிக்கை தருதல். இந்நிலைமைகளில் கருத்தடை மாத்திரை பாவிப்பது பிரச்சினையில்லை.

ஆனால், ஆடம்பரத்துக்காக அல்லது செலவுகுறைக்க வேண்டுமென்ற பயத்துக்காக கருத்தடை மாத்திரை பாவிப்பது ஆகுமானதல்ல.

(மீள்பார்வை பத்வா பகுதிக்கு வந்த கேள்வி: கடந்த 07 வருடமாக கருத்தடை மாத்திரை பாவிக்கிறேன். இதன் பத்வா யாது?)



# நின்ற நிலையில் உண்ணல், பருகலின் சட்டத்தீர்ப்பு

நின்ற நிலையில் உண்ணல், பருகலைத்தடுக்கின்ற சில ஹதீஸ்கள் காணப்படுகின்றன. அதுபோலவே நின்ற நிலையில் உண்ணல், பருகலுக்கு அனுமதி வழங்குகின்ற ஹதீஸ்களும் காணப்படுகின்றன. பின்பற்றுவதற்கு மிகப்பொருத்தமானது எது?

**ஷெய்க் பின் பாஸ்**

நின்ற நிலையில் உண்ணவும் பருகவும் முடியும் என வந்துள்ள ஹதீஸ்கள் ஸஹீஹானவையாகும். அதேபோன்று, நின்ற நிலையில் உண்ணல் பருகலைத் தடுக்கின்ற ஹதீஸ்களும் ஸஹீஹானவையாகும். நபி (ஸல்) அவர்கள் நின்ற நிலையில் நீரருந்தியதாக வந்துள்ளது. இந்த விடயம் நெகிழ்வுத் தன்மை கொண்டதாகவுள்ளது.

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். நின்ற நிலையில் உண்ணவோ, பருகவோ வேண்டாம் என தடுத்திருப்பதன் காரணம் வெறுக்கத்தக்க நிலையைக் காட்டுவதற்காகும். ஒருவருக்கு நின்ற நிலையில் உண்ணவோ, பருகவோ வேண்டிய நிலை ஏற்பட்டால் அவ்வாறு செய்வதில் பிரச்சினையில்லை. ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் நின்ற நிலையிலும், இருந்த நிலையிலும் நீரருந்தினார்கள் என உறுதியான அறிவிப்புகளில் காணலாம். ஆனாலும், இருந்த நிலையில் உண்ணல், பருகுவதே மிகச் சிறந்ததாகும்.

"நபி (ஸல்) அவர்கள் ஸம்ஸம் நீரை நின்ற நிலையில் அருந்தினார்கள்" என உறுதியான அறிவிப்பு வந்துள்ளது.

அலி (றழி) அவர்கள் அறிவிக்கின்ற ஒரு ஹதீஸிலும் நபி (ஸல்) அவர்கள் நின்ற நிலையிலும், இருந்த நிலையிலும் நீரருந்தினார்கள் என வந்துள்ளது. இதிலே விசாலத்தன்மை காணப்படுகிறது. இருந்த நிலையில் உண்ணல், பருகுவதே மிகச் சிறந்ததும், பாராட்டத்தக்கதும் ஆகும். நின்ற நிலையில் உண்ணுதலும், பருகுவதும் பிரச்சினையில்லை.

# வட்டி வங்கிகளுக்காக கட்டிடங்களை வாடகைக்கு விடுதல்

**ஷெய்க் அஹ்மத் இப்னு ஹம்த் அல்கலீலி**

வட்டி ஒழுங்குகளோடு தொடர்பான வங்கிகளுக்கு கட்டிடங்களை வாடகைக்கு விடுவது ஆகுமானதல்ல. ஏனெனில், அவ்வாறு செய்வது ஹராத்திற்கும் அத்துமீறலுக்கும் தூண்டுதல் வழங்குவதாக அமைந்துவிடும். இதற்கு பின்வரும் வசனத்தை அவதானிப்பது பொருத்தமானதாகும்: "இன்னும் நன்மையிலும், பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள். பாவத்திலும், அத்துமீறலிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ள வேண்டாம்." (அல்மாயிதா: 02)

# தங்க நகைக்கு செய்கூலி பெறுதல்

பொற்கொல்லன் தங்க நகையை செய்து கொடுத்ததற்கான கூலியைப் பெற்றுக்கொள்கிறான். அது தங்க நகையை விற்று, அதற்குரிய பெறுமதியோடு செய்கூலியையும் பெற்றுக் கொள்வதாக அமைகிறது அல்லது புதிய தங்க நகைக்குப் பகரமாக பழைய தங்க நகையைப் பரிமாறி, செய்கூலியையும் பொற்கொல்லன் பெற்றுக் கொள்வதாக அமைகிறது. இது ஆகுமானதா?

தங்க நகைக்குரிய பெறுமதியையும் செய்கூலியையும் பொற்கொல்லன் பெற்றுக் கொள்வது ஆகுமானதாகும். பழைய தங்க நகைக்குப் பகரமாக புதிய தங்க நகையைப் பரிமாறிக் கொண்டு செய்கூலியையும் பெற்றுக் கொள்வது ஆகுமானதல்ல. ஏனெனில் பின்வரும் ஹதீஸ் இவ்வாறு எச்சரிக்கிறது.

"புதிய தங்கத்திற்குப் பகரமாக நீங்கள் பழைய தங்கத்தை விற்க வேண்டாம்." (புஹாரி, முஸ்லிம்)

# இறை திருப்தியை எதிர்பார்ப்போம்

**இப்னு மஸாஹிரா**

மனிதன் மனிதனை வணங்கும் நிலையிலிருந்து இறைவனின் பக்கம் வழிகாட்டிய மார்க்கம் இஸ்லாமாகும். மனிதர்களின் திருப்தி அவசியம் தானே என மனிதன் மார்க்கத்தில் இல்லாத விடயங்களை எல்லாம் செய்யத் துணிந்து விட்டான்.

குறிப்பாக திருமண விடயத்தில் மார்க்கம் என்ற பெயரிலுள்ள குப்பைகள் மலிந்துள்ளன. மார்க்கத்தில் பிடிவாதமாக வாழ விரும்பும் மனிதர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. திருமணத்தில் மணமகன், மணமகள், வலி (பெண்ணின் பொறுப்புதாரி), மஹர் என்பவையே அடிப்படையானவையாகும். அங்கு பிட்டுப்பெட்டி கட்டுதல், பழங்கள், பலகாரப் பெட்டிகள், மருதோண்டி போடுதல், தாலி கட்டுதல், இன்னும் பலவகையான உணவுகள் என்பன இஸ்லாம் விரும்பாத வீண்விரயங்களாகும்.

மார்க்கத்தை பிடிவாதமாக பின்பற்ற நினைப்பவர்களை சமூக ஒற்றுமையை சீர்குலைப்பவர்கள் என நாம் ஓரங்கட்டி விடுகிறோம். இறை திருப்தியே ஏக இலக்கு என நாம் வாழ்த்தவைப் பட வேண்டும்.

எமது வாழ்வின் இலக்கே இறைவனின் திருப்தியாகும். நபி (ஸல்) அவர்களின் பின்வரும் வார்த்தையைப் பாருங்கள்.

"பெற்றோரின் திருப்தியிலேயே இறை திருப்தி இருக்கிறது" நாம் பெற்றோரைத் திருப்திப் படுத்தினால் இறைவனின் திருப்தியை அடையப் பெறலாம்.

ஆனால், இறைவனுக்கு மாறு செய்யும் விடயத்தில் பெற்றோருக்கு கட்டுப்பட முடியாது. எனவேதான் ஸஹாபாக்களின் பெற்றோர் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டுவிடுமாறு கூறிய வேளையிலும் விட்டுவிடாமல் உறுதியாக இருந்தனர். இங்கும் இறை திருப்தியே நாடப்பட்டது.

சில அலுவலகங்களைப் பார்க்கின்றபோது சிரிப்புத்தான் வருகிறது. அங்கு வேலைபார்க்கும் சிலர் மனித திருப்தியையே எதிர்பார்க்கின்றனர். இறை திருப்தியை கிஞ்சிற்றும் எதிர்பார்ப்பதில்லை. மனிதன் மனிதனுக்கு பயப்படும் அளவுக்கு கூட, இறைவனுக்கு பயப்படுவது கிடையாது.

சிலர் மனிதனை நம்பி ஒரு வேலையில் இறங்குகின்றனர். ஆனால், அம்மனிதன் இடை நடுவில் கைவிட்டு விடுகின்றான். அம்மனிதன் எவ்வித உதவியுமின்றி தவியாய் தவிக்கின்றான்.

இவர்களை நினைக்கும்போது "அவர்கள் மனிதனுக்கே பயப்படுகின்றார்கள். அவர்கள் அல்லாஹ்வுக்கு பயப்படுவது கிடையாது" என்ற இறைவசனம்தான் நினைவுக்கு வருகிறது.



சில அலுவலகங்களைப் பார்க்கின்றபோது சிரிப்புத்தான் வருகிறது. அங்கு வேலைபார்க்கும் சிலர் மனித திருப்தியையே எதிர்பார்க்கின்றனர். இறை திருப்தியை கிஞ்சிற்றும் எதிர்பார்ப்பதில்லை. மனிதன் மனிதனுக்கு பயப்படும் அளவுக்கு கூட, இறைவனுக்கு பயப்படுவது கிடையாது.

"இறை திருப்திக்காக செயற்படு மனிதா!" என்றே மலர்ந்துள்ள புதுவருடம் எமக்குச் சொல்ல வேண்டும். மனிதன் இவ்வுலகில் வாழ்வதன் இலக்கே இறைதிருப்தியாக இருக்க வேண்டும். இறைவன் எம்மைப் படைத்தவன். அவனுக்கு நாம் அடிபணிய வேண்டும். அவனே எமது பூரண இலக்காக இருக்க வேண்டும்.

இவ்வேளையில் ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. "பைஅதுர் ரிழ்வான்" இதனைப் பற்றி ஸூறதுல் பத்ஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

"முஃமின்கள் அந்த மரத்தடியில் உம்மிடம் வாக்குறுதி செய்த போது நிச்சயமாக அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டான்" (48 - 18)

நபி (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்து மக்காவுக்கு உம்ரா செய்வதற்கு சென்ற வேளையில் குறைஷிக்காபிர்கள் அதற்கு தடைவிதித்தனர். அவ்வேளையில் சமரசப்பேச்சு வார்த்தை செய்வதற்கு உஸ்மான் (றழி) குறைஷியரிடம் அனுப்பப்பட்டார். அவ்வேளையில் "உஸ்மான் (றழி) கொல்லப்பட்டு விட்டார்" என்ற செய்தி பரவியது. இந்த நேரத்தில் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களோடு சேர்ந்து செய்து கொண்ட ஒரு உடன்படிக்கையே "பைஅதுர் ரிழ்வான்" ஆகும்.

அதிலே உஸ்மான் (றழி) அவர்கள் கொல்லப்பட்டதற்காக குறைஷிக்காபிர்களோடு இறுதி வரை போராடுவோம் என்ற உடன்பாடு பெறப்பட்டது. இதனையே அல்லாஹ் பொருந்திக் கொண்டதாகக் கூறுகிறான்.

ஒரு ஸஹாபியின் உயிருக்காக விடுக்கப்பட்ட இந்தப் பிரகடனத்தை அல்லாஹுதஆலா பொருந்திக் கொண்டதாகக் கூறுகிறான்.

ஸஹாபாக்களின் வாழ்வும், ஒவ்வொரு எட்டும் இறை பொருத்தத்தை தேடிப் புறப்பட்டது. இறை பொருத்தத்தை அடைவதற்கான வழிகளை நாம் தேடுவோம். அதற்காக மும்முரமாக முயற்சிப்போம்.

இன்ஷா அல்லாஹ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிப்கான் ஆதம்

# முஹர்ரம் : சிறப்புக்களால் பயன்பெறல்




"வானங்கள், பூமி படைக்கப்பட்ட நாளிலிருந்தே அல்லாஹ்வின் ஏட்டில் பதிவு செய்யப்பட்ட மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டாகும். அவற்றில் நான்கு மாதங்கள் கண்ணியத்திற்குரியவையாகும்". (அத்தவ்பா 36)

இந்த நான்கு மாதங்களில் முஹர்ரம் மாதமும் ஒன்றாகும். நாம் இப்போது ஹிஜ்ரி 1433 என்ற இஸ்லாமியப் புத்தாண்டை அடைந்திருக்கிறோம். இன்றைக்கு 1433 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஹிஜ்ரத் நிகழ்வி லிருந்தே இஸ்லாமிய வருடக் கணிப்பீடு ஆரம்பிக்கிறது.

இம்மாதத்தில் ஒருவருக் கொருவர் அநியாயம் இழைத்துக் கொள்வதும், இரத்தம் சிந்தவைப்பதும், போராடுவதும் தடைசெய்யப்பட்டுள்ளதாலும், இம்மாதம் கண்ணியப்படுத்தப்பட்டுள்ளதாலும், தடைசெய்யப்பட்ட அல்லது கண்ணியப்படுத்தப்பட்ட மாதம் என பெயர் பெறுகிறது. எனவே இம்மாதம் இஸ்லாத்தில் மிக அந்தஸ்துக்குரிய மாதம் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

காலங்களும் இடங்களும் ஒன்று, உலக நலனை அல்லது மறுமை நலனை கருத்திற் கொண்டு சிறப்புப் பெறுகின்றன. உதாரணமாக ரமழான், நோன்பால் பரகத் செய்யப்பட்ட மாதமாகக் காணப்படுகின்றது. மக்கா அல்லாஹ்வின் ஆலயமான கஃபா அமையப் பெற்றுள்ளதால் சிறப்புப் பெறுகின்றது. இதேபோன்றுதான் ஆஷூரா எனும் நோன்பை அடிப்படையாகக் கொண்டு முஹர்ரம் மாதம் சிறப்புப் பெற்றுள்ளது என அல்-இஸ் இப்னு அப்துஸ் ஸலாம் தனது கவா இதுல் அஹ்காம் (1-38) எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

பொதுவாக ரமழானில் நோற்கப்படும் நோன்பானதுக்கு அடுத்து முஹர்ரம் மாதத்தில் நோற்கப்படுகின்ற நோன்புகள் சிறப்புக்குரியவையாகும். "ரமழானில் நோற்கப்படும் நோன்புகளுக்கு அடுத்து, முஹர்ரம் மாதத்தில் நோற்கப்படும் நோன்புகள் சிறப்புக்குரியவை" என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (முஸ்லிம் - 1982)

குறிப்பாக, முஹர்ரம் 10 ஆம் நாள் நோற்கப்படும் ஆஷூரா நோன்புக்கு ஒரு வரலாறு இருக்கிறது. நபி (ஸல்) அவர்கள் மதீனாவை வந்தடைந்தபோது, யூதர்கள் முஹர்ரம் 10ஆம் நாள் நோன்பு நோற்றிருப்பதை கண்ணுற்ற நபி (ஸல்) அவர்கள் அதற்கான காரணத்தை வினவினார்கள். அதற்கு அவர்கள், 'பனூ இஸ்ரேவேலர்களை அல்லாஹ் அவர்களுடைய எதிரியிடமிருந்து பாதுகாத்த சிறப்புக்குரிய நாள் இதுவாகும். இதில் மூஸா (அலை) அவர்களும் நோன்பு நோற்றார்கள்' எனக் குறிப்பிட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'மூஸா (அலை) நோன்பு நோற்றிருந்தால் உங்களைவிட இந்நாளில் நோன்பு நோற்பதற்கு நானே தகுதியானவன்' என்று கூறி அந்நாளில் நோன்பு நோற்குமாறு ஏனையோருக்கும் கட்டளை இட்டார்கள். (புகாரி 1865)

"ஆஷூரா தினத்தில் நோற்கப்படும் நோன்பால் கடந்த ஒரு வருடத்திற்குரிய பாவங்களை அல்லாஹ் மன்னிக்க வேண்டும் என ஆதரவு வைக்கிறேன்" என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள். (முஸ்லிம் - 1976)

அல்லாஹ்வின் விரோதிகளான யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் மாற்றமாக நடக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். எனவே யூதர்கள் முஹர்ரம் 10ஆம் நாள் நோன்பு நோற்பதால் அவர்களுக்கு மாற்றமாக முஹர்ரம் 9ஆம் நாளையும் தாஸூஆ தினத்தில் நோன்பு நோற்க வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் விரும்பினார்கள். "எதிர் வரும் ஆண்டில் முஹர்ரம் 9ஆம் நாளிலும் நோன்பு நோற்போம் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனினும் அது வருவதற்கு முன்னரே நபி (ஸல்) அவர்கள் இறையடி சேர்ந்து விட்டார்கள்" என இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (முஸ்லிம் - 1916)

முஹர்ரம் 9ஆம் நாள் நோன்பு நோற்க வேண்டும் என்பதற்கான நியாயங்கள்:

இதற்கான நியாயங்களை இமாம் நவவி (றஹ்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

1. யூதர்கள் 10ஆம் நாளில் மாத்திரம் நோன்பு நோற்பதால் அவர்களுக்கு மாறுசெய்து, 9ஆம் நாளும் நோன்பு நோற்றல்.

2. வெள்ளிக்கிழமை மாத்திரம் நோன்பு நோற்காமல் வியாழக்கிழமையோ அல்லது சனிக்கிழமையோ சேர்த்து இரண்டு நோன்புகளாக நோற்பதுபோல முஹர்ரம் 9ஆம், 10ஆம் நாட்களில் நோன்பு நோற்றல்.

3. 10ஆம் நாள் பிறைக் கணிப்பீட்டில் குறைபாடு ஏற்பட்டாலும் அதனை நிவர்த்தி செய்ய 9ஆம் நாள் நோன்பு நோற்பதே ஏற்றமானதாகும்.

எனினும், வேதம் கொடுக்கப்பட்டோர் போன்று இருப்பதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள். இதற்காகவே 9 ஆம் நாளும் நோன்பு நோற்க வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் விரும்பினார்கள் என இப்னு தைமியா (றஹ்) குறிப்பிடுகிறார். (அல்பதாவா அல்குப்ரா)


எனவே, இம்மாதத்தில் ஒருவருக்கொருவர் சொல்லாலோ செயலாலோ அநியாயம் இழைப்பதை தவிர்ந்து கொள்வோம். முஹர்ரம் 10ஆம் நாள் நோன்பு நோற்று கடந்த ஒரு வருடத்திற்கான பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்வோம். 9ஆம் நாள் நோன்பு நோற்று யூதர்களுக்கு மாறுசெய்து அல்லாஹ்வின் அன்புக்குரியவர்களாக மாறுவோம்.

# ஹிஜ்ரத் : படிப்பினைகளிலிருந்து நடைமுறைகள்

இஸ்லாம் இப்பூமியில் வேரூன்றி கிளைபரப்பி நிலைத்து நிற்பதற்கு துணை புரிந்த நிகழ்வாக ஹிஜ்ரத் காணப்படுகின்றது. இது இஸ்லாத்தின் வெற்றிக்கு பெரும் துரும்பாகவும், தஃவா வரலாற்றின் திருப்புமுனையாகவும் அமைந்திருந்தது. இந்நிகழ்வை வைத்தே இஸ்லாமிய வருடக் கணிப்பீடு இடம் பெற்றது. இந்த நிகழ்வில் நமக்கு பல பாடங்களும் படிப்பினைகளும் காணப்படுகின்றன. அவற்றை விளங்கிக்கொள்ள முயற்சி செய்வதோடு நடைமுறைப்படுத்த முடியுமான பகுதிகளை நடைமுறைக்கு கொண்டுவருவோம். இந்நிகழ்வில் கிடைக்கப்பெறும் படிப்பினைகளும் நடைமுறைகளும் பின்வருமாறு அமைகின்றன.

01. அல்லாஹ்வின் தூதர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வழமைப்படாத ஒரு விதியாகவே ஹிஜ்ரத் காணப்படுகிறது. எனினும், நபி (ஸல்) அவர்களுடைய ஹிஜ்ரத் தனது தஃவாவை பலப்படுத்தக்கூடிய பொருத்தமான இடத்தைத் தேர்வு செய்வதாகவும், தனது கொள்கையைப் பாதுகாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது. எனவே, இஸ்லாத்தின் கொள்கையைப் பலப்படுத்தவும் பாதுகாக்கவும் பொருத்தமான இடத்தை தெரிவுசெய்து அங்கு ஹிஜ்ரத் செய்ய முடியும் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

02. சத்தியத்துக்கும் அசத்தியத்துக்கும் எப்போதும் போட்டியும் போராட்டமும் காணப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அசத்தியம் சத்தியத்தை விரட்டியடிக்கும். எனினும் இறுதி வெற்றி சத்தியத்துக்கே என்பது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். இதனை இந்நிகழ்வு உண்மைப்படுத்தியது. "அல்லாஹ்வே எமது இறைவன் என்று கூறியதற்காகவே எவ்வித நியாயமுமின்றி அவர்கள் தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர்" (அல்-ஹஜ் - 40) "நிராகரிப்பாளர்கள் வெறுத்த போதிலும் அல்லாஹ் தனது ஒளியைப் பூரணப்படுத்துவான்" (அத்தவ்பா - 32)



03. எதிரிகள் இஸ்லாமிய தஃவாவுக்கு எப்போதும் தடையாகவே இருப்பர். "நபியே உம்மைச் சிறைப்படுத்தவோ அல்லது கொலை செய்யவோ அல்லது நாடுகடத்தவோ நிராகரிப்பாளர்கள் சூழ்ச்சி செய்கின்றனர். சூழ்ச்சி செய்பவர்களில் அல்லாஹ்வே மிகச் சிறந்தவன்" (அல்அன்பால் 30) இந்த வசனம் எதிரிகள் தஃவாவை எதிர்ப்பதற்காக தம்மால் முடியுமான அனைத்து சூழ்ச்சிகளை மேற்கொள்வர் எனக் குறிப்பிடுகிறது. எனவே, எப்போதும் ஒரு தாச விழிப்பு நிலையில் இருக்க வேண்டும்.

04. ஹிஜ்ரத்தில் இடம்பெற்ற அற்புதங்களை சமான் கொள்வதும், அல்லாஹ் எப்போதும் தஃவாவுக்கு உதவி செய்வான் என உறுதி கொள்வதும் அவசியமாகும். நபி (ஸல்) அவர்கள் காபிர்கள் விழிப்புடன் இருக்கும் நிலையில் அவர்களைக் கடந்து சென்றமை, தௌர் குகையின் வாயிலை சிலந்தி மூடியமை, உம்மு மஃபத் என்ற பெண்ணின் ஆட்டில் பால் கறந்தமை, சுராகாவுடைய குதிரையின் கால்கள் மண்ணில் புதையுண்டமை போன்றவை இதற்கான சான்றுகளாகும்.

05. நம்பிக்கைக்குரிய ஒரு காபிரிடம் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை ஹிஜ்ரத் நிகழ்வு சுட்டிக் காட்டுகிறது. நபி (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் உரைகத் என்ற தேர்ச்சி பெற்ற யூத வழிகாட்டியை தனக்கு வழி காட்டுவதற்காக கூலிக்கமர்த்தினார்கள். எனினும், நபி (ஸல்) அவர்களும் அபூபக்ர் (றழி) அவர்களும் அல்லாஹ்வின்மீது தவக்குல் வைத்து பின்னர் அவ்வழிகாட்டியின் மீதான பூரண அறிவும், நம்பிக்கையும் கொண் [illegible] கூலிக்கு அமர்த்தினார். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அழைப்புப் பணியாளர்கள் கவனமாக செயற்பட வேண்டும். இல்லாதபோது அதுவே தமக்கு வினையாக மாறிவிடும் என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

06. அமானிதங்களை நிறைவேற்றல் - நபி (ஸல்) அவர்கள் அவருடைய சமூகத்தில் உண்மையாளர் எனவும் நம்பிக்கையாளர் எனவும் பிரபல்யமாயிருந்தார். இதனால் அவருடைய சமூகம் தமது பொருட்களை அவரிடம் பாதுகாப்புக்காக ஒப்படைத்திருந்தனர். நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செல்ல நேரிட்டபோது அவற்றை உரியவர்களிடம் ஒப்படைத்துவிடுமாறு அலி (றழி) அவர்களை நியமித்து விட்டுச் சென்றார்கள். எனவே அமானிதம் பேணுவது ஒரு தாஈயின் அடிப்படைப் பண்பாகும்.

07. தௌர் குகையிலிருந்து வெளியேறி தொடர்ந்து பிரயாணத்தை மேற்கொள்வதற்காக அபூபக்ர் (றழி) அவர்கள் தனது அடிமையான ஆமிர் பின் புஹைரா மூலமாக இரண்டு ஒட்டகங்களை வருவிக்கச் செய்தார்கள். அதில் ஒன்றை நபி (ஸல்) அவர்களுக்கு பிரயாணிக்க கொடுத்தபோது, நபி (ஸல்) அவர்கள் அதற்கான பெறுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையில் ஏற்றுக் கொண்டார்கள். இது அழைப்புப் பணியாளர்களின் கைகள் கொடுக்கும் கையாக எப்போதும் உயர்ந்தே இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

08. மக்களின் சொத்துகளை விட்டும் பேணுதலாகவும், கற்பொழுக்கத்துடனும் நடந்து கொள்ளல்: குதிரையின் கால்கள் மண்ணில் புதையுண்டதும் நபி (ஸல்) அவர்களின் உண்மையை விளங்கிக் கொண்ட சுராகா தனது அம்பாரியை நபி (ஸல்) அவர்களுக்கு பாதுகாப்புக்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று வழங்கியபோது அதனை நபி (ஸல்) அவர்கள் மறுத்தமை இதற்கான சான்றாகும்.

09. அழைப்புப் பணியை மேற்கொள்கின்ற முன்னோடிகள் தமது படைவீரர்களை எதற்கும் செயற்படுவதற்கு தயாரான தனிநபர்களாக உருவாக்க வேண்டியது அவசியமாகும். அலி (றழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் படுக்கையில் உறங்கியமை, அபூபக்ர் (றழி) அவர்கள் ஹிஜ்ரத்திற்காக முற்கூட்டியே தயாரானமை போன்றவை இதற்கான சான்றுகளாகும்.

10. கடுமையான இருள் சூழ்ந்த, இக்கட்டான நிலமைகளில் தஃவாவை தொடர்ந்து மேற்கொண்டமை. நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செல்கின்ற வழியிலேயே சிலருக்கு இஸ்லாத்தை எத்தி வைத்தார்கள். இந்த வகையில் புரைதா அல் அஸ்லமி என்பவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

11. சூழ்நிலைகளை முற்கூட்டியே அறிந்து கொண்ட நபி (ஸல்) அவர்கள் செய்திகளை அறிந்து கொள்வதற்கு அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் (றழி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எச்.எம். நாஸிர்

# உமரியம்

## உமர் ஹஸ்ரத் பற்றிய வாசிப்பு - i

> ''எம்மைப் பிடித்திருக்கும் சகல பிணிகளுக்கும் உரிய மருந்து மத்ரஸாக்களிலிருந்துதான் வெளிவர வேண்டும். அங்குதான் அம்மருந்துகள் தயாரித்தாக வேண்டும். வேறு இடம் இல்லை. ஆலிம் ஷாக்கள் கையில்தான் மருந்துகள் தரப்பட வேண்டும். வேறு வைத்தியர்கள் இல்லை. மத்ரஸாக்களின் பாடத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டு பொது அறிவும், சமுதாய இயலும் (Sociology) சீர்திருத்த முறையும் (Missionary Work) அங்கு பயிற்றுவிக்கப்படுமானால் நாட்டுக்கு நல்லொளி பரப்பும் ஞான சூரியன்களை எமது மத்ரஸாக்களில் உருவாக்குவது சாத்தியமானதே''

தென்னிந்திய அரபு மத்ரஸாக்களில் வேலூர் பாக்கியாதுஸ் ஸாலிஹாத் பழமையானது, பிரபலமானது. தனித்துவமான ஆலிம்களை உருவாக்கிய பெருமை அதற்கு உண்டு. அத்தகையவர்களுள் ஒருவரே உமர் ஹஸ்ரத் என கண்ணியமாக அழைக்கப்பட்ட மௌலானா மௌலவி அப்துல் காதிர் முஹம்மத் உமர் (றஹ்) ஆவார்.

1898இல் தென்னிந்தியாவில் பாலக்காடு எனும் இடத்தில் பிறந்த அவர் தமிழ், மலையாளம், ஹிந்தி, உர்து, ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார். சன்மார்க்கக் கல்விக்காக அரபு மொழியைக் கற்றுத் தேர்ந்தார். புதுக்குடி நூர் முஹம்மதியியாவில் சன்மார்க்கக் கல்வி பெற்ற அவர், உயர் கல்வியை பாக்கியாதுஸ் ஸாலிஹாத்தில் கற்றார். சில ஆண்டுகள் அதே கல்லூரியில் போதனாசிரியராக பணியாற்றினார். 1938 இல் இலங்கை வந்த அவர், கபூரிய்யா அறபுக் கல்லூரியில் போதனாசிரியராக அமர்த்தப்பட்டார்.

1939இல் கபூரிய்யாவின் அதிபராக பணியேற்றபோதுதான் அவரது உள்ளத்தில் மறைந்திருந்த உமரியம் வெளிப்பட ஆரம்பித்தது. அவர் கற்றுக் கொண்ட இந்திய மத்ரஸாக்கள், கற்பித்த மத்ரஸாக்கள் அனைத்தும் தர்ஸே நிழாமி பாடத்திட்டத்தைத் தழுவியே பாடங்களை நடத்தி வந்தன. இலங்கை மத்ரஸாக்களும் அதே வழியைத்தான் தொடர்ந்தன. அதன் குறைபாடுகள் பற்றி எவரும் அலட்டிக் கொள்ளவில்லை, வித்தியாசமாக சிந்திக்கவுமில்லை. இருப்பதை வைத்து ஓட்டிக் கொண்டிருந்தார்கள்.

இது உமர் ஹஸ்ரத் அவர்களுக்கு பொருத்தமாகத் தெரியவில்லை. சமூக மாற்றம் ஏற்பட வேண்டுமானின் அடிப்படை வித்து மத்ரஸாக்களில் ஊன்றப்பட வேண்டும் என்பது அவரது கருத்தாக இருந்தது. கபூரிய்யா ஆரம்பிக்கப்பட்டு பல தசாப்தங்கள் கடந்திருந்தன. எனினும் மரபு ரீதியான மத்ரஸாவாகவே அது இருந்து வந்தது. எனவே அதன் கட்டமைப்பு, கலைத்திட்டம், கற்றல் - கற்பித்தல் முதலான விடயங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும் என அவர் விரும்பினார். படிப்படியாக செயற்பாடுகளை முன்னெடுத்தினார்.

மரபு ரீதியான மத்ரஸாக்களில், கீழே அமர்ந்து கட்டையான நீண்ட பலகைகளின்மேல் நூல்களை வைத்துக் கொண்டே மாணவர்கள் பயின்றுவந்தனர். கோணகத் தமிழோடு அறபு மொழி நூல்களை விளங்கினார். நூல் நிலையம் எனக் குறிப்பிடத்தக்க அமைப்பு எதுவும் காணப்படவில்லை. பாட நூல்கள் மாத்திரம் அலுமாரிகளை அடக்கி இருந்தன. வெள்ளைச் சாரமும், வெள்ளைச் சேட்டும் சீருடையாக இருந்தன. இந்நிலையில் கபூரிய்யா வகுப்பறைகள் தளபாடங்களை (மேசை, கதிரை, அலுமாரி) கொண்டமைந்தன. அறபு மொழியோடு ஏனைய மொழிகளையும் கற்பதற்கான வசதிகள் செய்யப்பட்டன. அறபு மொழியில் மட்டுமன்றி தமிழ், ஆங்கிலம் முதலான மொழியில் அமைந்த நூல்களையும் உள்ளடக்கிய நூலகம் உருவானது. பத்திரிகை வாசிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. சீருடையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஏனைய மத்ரஸாக்களில் வீட்டுக்கு ஒரு மாணவரை பொறுப்புச் சாட்டி அன்றாட உணவுக்கான வசதி செய்யப்பட, கபூரிய்யாவில் மாணவர்களுக்கான உணவு வழங்கப்பட்டது. எழுதவும், சொற்பொழிவாற்றவும், குத்பா ஓதவும் பயிற்றுவிக்கப்பட்டது.

உமர் ஹஸ்ரத் அவர்களின் சமூகப் பார்வை; வித்தியாசமான சிந்தனை இத்தோடு நின்றுவிடவில்லை. பகிரங்க சொற்பொழிவுகளுக்கூடாக அவை சமூகத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டன. அவர் சமர்ப்பித்த முன்மொழிவுகள் சில, அவர் காலத்திலேயே நிறைவேறின. சில காலங்கடந்து நிறைவேறின. மற்றும் சில நிறைவேறாமலேயே நிற்கின்றன. அவற்றுள் முக்கியமான சில விடயங்களை மாத்திரம் எடுத்துக் காட்டுகின்றோம்.

''எம்மைப் பிடித்திருக்கும் சகல பிணிகளுக்கும் உரிய மருந்து மத்ரஸாக்களிலிருந்துதான் வெளிவரவேண்டும். அங்குதான் அம்மருந்துகள் தயாரித்தாக வேண்டும். வேறு இடம் இல்லை. ஆலிம் ஷாக்கள் கையில்தான் மருந்துகள் தரப்பட வேண்டும். வேறு வைத்தியர்கள் இல்லை. மத்ரஸாக்களின் பாடத்திட்டம் திருத்தி அமைக்கப்பட்டு பொது அறிவும், சமுதாய இயலும் (Sociology) சீர்திருத்த முறையும் (Missionary Work) அங்கு பயிற்றுவிக்கப்படுமானால் நாட்டுக்கு நல்லொளி பரப்பும் ஞான சூரியன்களை எமது மத்ரஸாக்களில் உருவாக்குவது சாத்தியமானதே'' என மீலாத் பிரசங்க மொன்றில் குறிப்பிட்டார்.

இந்திய துணைக்கண்டத்தில் ஒரு தலைசிறந்த அறபுக் கல்லூரியாக அமைவதற்கு திட்டமிட்டு, அரியதொரு பாடத்திட்டத்தை வகுத்து, அதற்குத் தக்க போதனாசிரியர்களையும் தெரிவு செய்தார். விடுதி மாணவர்களுக்கென ஒழுக்கக் கோவை ஒன்றை வகுத்தார். அறபுக் கல்வியின் முக்கியத்துவம் பாதிக்கப்படாத வகையில் ஆங்கிலம், தமிழ், கணிதம் போன்ற பாடங்களையும் இணைத்தார்.

அவர் அறபு இலக்கண இலக்கியத் துறைகளிலும், தமிழ் இலக்கண இலக்கிய துறையிலும் திறமை பெற்றிருந்தமையால் இரு மொழிகளிலும் கவிபாடும் திறமையைப் பெற்றிருந்தார். அறபு அணியிலக்கணங்களைக் கற்பிக்கும்போது தமிழ் அணியிலக்கணத்தையும் ஒப்புநோக்கி கற்பிப்பார் என அவரது மாணவர்கள் பெருமையாகக் கூறுவார்கள்.

சமூதாயத்தின் அவல நிலைக்கு சன்மார்க்க அறிஞர்களே முதல் பொறுப்பாளர்கள் என்பது அவரது கருத்தாக இருந்தது. 'ஆலிம்கள் அம்பியாக்களின் வாரிசுகள், அவர்கள் போய்விட்டபின்னர் அந்தப் பணியைச் செய்ய வேண்டியவர்கள் வாரிசுகள்தானே' ஹதீஸ்களைச் சொல்கிறோம். ஆகிர் ஸமான், பித்னா, பஸாத், மனிதர்கள் கெட்டுப்போனார்கள் அல்லாஹ் அவர்களை திருத்த வேண்டும் என்று சொல்லித் தட்டிக் கழிக்கிறோம்.

நீங்கள் உங்கள் வேலையை முறைப்படி செய்யவில்லை. இது விஞ்ஞான யுகம். உள நூற்காலம் அனுபவத்தை அல்லாது வெற்று உரைகளை நம்பாத காலம். காலப் போக்கை அறிந்து, காலத்திற்கு ஏற்ற ஆயுதங்களைக் கொண்டு அல்லாஹ்வின் தீனை நிலைநாட்ட வேண்டும். அணுகுண்டு யுகத்தில் அம்பும் வில்லும் வைத்துப் போராடுகிறீர்கள். இயன்ற மட்டும் முயன்று முழுச் சக்தியையும் பயன்படுத்துங்கள். (8-60) என்ற ஆயத்தை மனதிற் கொண்டு செயலாற்றுங்கள்.

விஞ்ஞானத்திலும், உள நூலிலும், தத்துவ ஞானத்திலும் தேர்ச்சி அடைந்து, அகில உலக சமயங்களைக் கற்றறிந்து, அப்பால் ஆத்ம ஞானத்தைக் கைக்கொண்டு அனுபவமூலமாக உண்மையைக் கண்டறிந்து மக்களுக்கு சமய விளக்கம் கொடுங்கள். இமாம் ராஸி, இமாம் கஸ்ஸாலி போன்ற அறிஞர்கள் இப்படித்தான் நடந்து கொண்டார்கள். ஷாஹ் வலியுல்லாஹ் கூட இப்படித்தான் நடந்து கொண்டார்கள். இத்தகையவர்களை நாம் உருவாக்கக் கூடாதா?

---

Dr. அல்வி முஹம்மத் காஸிம்

# இளமைப் பருவம்: காதல்

கட்டிளமைப் பருவ வளர்ச்சியின் விளைவுகளில் ஒன்றுதான் காதல். காதல் என்பதை பலரும் பலவிதமாக நோக்குகின்றனர். சில ஆசிரியர்கள் பிள்ளைகளிடம் காதலித்துத்தான் திருமணமுடிக்க வேண்டும் என்கின்ற கருத்தை விதைக்கின்றனர். இது எவ்வளவு தூரம் பாரதூரமானது என்பதனை உணராமல் இப்படி நடந்து கொள்கின்றனர்.

அண்மையில் ஒரு பாடசாலைக்கு நிகழ்ச்சி ஒன்றை நடத்துவதற்குச் சென்றிருந்தேன். அங்கே ஆச்சரியம் தரக்கூடிய பல்வேறு விடயங்களைக் கண்டேன். அதில் ஒன்றுதான் 8ஆம் தரத்திலிருந்து 11ஆம் தரம் வரையான 100 பிள்ளைகளில் 32 பிள்ளைகள் காதலிக்கிறார்கள். அதேநேரம் இந்தக் காதலால் நாங்கள் கல்வியில் கவனம் செலுத்த முடியாமல் இருக்கின்றது என்பதனை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

சுவாரஷ்யமான, ஆனால் மிகக் கவலையான ஒரு விடயத்தை இவ்விடத்தில் நான் கூறியாக வேண்டும். ஒரு நிகழ்ச்சியில் உங்களது ஆசைகளை எழுதித் தாருங்கள் எனக் கேட்டுக் கொண்டேன். அனைத்துப் பிள்ளைகளும் எழுதித் தந்தார்கள். ஒரு மாணவன் எழுதியிருந்த விடயங்கள் என்னை வெகுவாக சிந்திக்கவைத்தது.

சேர் நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன்.

அவளையே திருமணம் செய்து கொள்ளவும் விரும்புகிறேன்.

அவளுடன் நான் நாடு பூராகவும் சுற்றித் திரிய வேண்டும்.

அவளை சந்தோசமாக வைத்திருக்க வேண்டும்.

அவள் கிடைக்காவிட்டால் நான் என்ன செய்வேனோ தெரியாது.

அவள் இல்லாமல் நான் வாழவே முடியாது.

நான் எழுதியிருப்பவை அனைத்தும் உண்மை.

இதனைப் பார்த்ததும் காதலர்கள் அனைவரும் இப்படித்தானே எழுதுவார்கள் இது சாதாரணமானதுதானே என நீங்கள் கூறலாம். மேற்படி விடயத்தை எழுதிய மாணவன் 6ஆம் தரத்தில் படிப்பவன் அவனது முகத்தில் மீசை கூட இன்னும் அரும்ப ஆரம்பித்திருக்கவில்லை. அதிர்ச்சியான விடயம் என்ன தெரியுமா? இது ஒரு பக்கக் காதல்.

ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மேலே எழுதிய சிறுவன் பருவக் கோளாறின் காரணமாக எழுதவில்லை. மாற்றமாக அவன் பருவமடைய முன்னரே இப்படியான சிந்தனைகள் அவனை ஆட்கொண்டிருக்கின்றன. இது மீடியாக்களின் தாக்கத்தின் ஒரு விளைவு. எனவே, தொடர்ந்தும் பிள்ளைகள் விடயத்தில் கவனயீனமாக இருப்பது மிகப்பாரிய பிரச்சினைகளை எதிர்காலத்தில் தோற்றுவிக்கும்.

எனவே மாணவர்களே! நீங்கள் செய்யும் எந்த வேலையையும் சுய உணர்வுடன் செய்யுங்கள். பின்விளைவுகளை சற்று சிந்தித்து செயற்படுங்கள்.

காதல் இஸ்லாத்தின் பார்வையில் எந்தச் சந்தேகமுமில்லாத ஒரு ஹறாம். இது அனேகமானவர்கள் அறிந்த விடயம். என்றாலும் பெரும்பான்மையானவர்கள் அறியாத ஒரு விடயம் இருக்கின்றது. அதுதான், காதல் பற்றிய உளவியல் நோக்கு என்ன என்பது?

இப்போது உளவியல் ரீதியில் காதல் பற்றி சற்று நோக்குவோம். மனிதனது உடம்பில் செரடோனின் என்கின்ற ஒரு வகையான இரசாயனப் பதார்த்தம் இருக்கின்றது. இது நரம்புகளுக்கிடையில் தகவல்களைக் கடத்துவதற்கு உதவுகின்றது. அதுமட்டுமல்ல அது மனிதன் சந்தோசமாக இருப்பதற்கும் எங்களது உணர்ச்சிகளை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் மனஅழுத்தத்தைக் (Depression) குறைப்பதற்கும் இது உதவுகின்றது. செரடோனின் நரம்பிணைப்புகள் ஊடாக கடத்தப்படுவது தடைப்படும் போது (OCD) obsessive compulsive Disorder என்கின்ற நோய் ஏற்படுவதாக அண்மைய ஆய்வுகள் கூறுகின்றன. OCD என்பது இது ஒரு வகையான உளவியல் நோய், வஸ்வாஸ் என்று முஸ்லிம்களால் கூறப்படுகின்ற நிலைதான் இது.



உடம்பில் செரடோனின் அளவு குறைந் தால் பாலியல் ரீதியான குற்றங்களில் ஈடுபாடு அதிகரிக்கும் அல்லது காதல் வயப்படுவார்கள் என ஆய்வுகள் கூறுகின்றன. OCD இற்கும் காதலுக்கும் இடையிலான தொடர்பு சம்பந்தமாகப் பல்வேறு ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. இதனை முதலில் Donatella Marazziti ஆரம்பித்து வைத்தார் இவ்வாய்வுகளின் கடைசி முடிவு என்ன தெரியுமா? காதல் என்பது OCD உடன் தொடர்பான நோய். மாற்றமாக காதல் தெய்வீக மானது அல்ல.

குறிப்பாக OCD நோய் உள்ளவர்கள் அதிகமான சிந்தனைகளுக்கு ஆளானவர்கள் சில விடயங்களைத் திரும்பத் திரும்ப சிந்திப்பார்கள் அல்லது செய்வார்கள். மன அழுத்தத்திற்கு உட்படுவார்கள். இதனை நாம் காதலர்களிடமும் காணலாம். தனது காதலனைப் பற்றி அல்லது காதலியைப் பற்றியே எந்நேரமும் சிந்திக்கக் கூடியவர்களாக இவர்கள் இருப்பார்கள். அது மட்டுமல்ல, திரும்பத் திரும்ப SMS பண்ணுவது, திரும்பத் திரும்ப தொலைபேசியில் உரையாடுவது,

(பக். 19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனிடமிருந்து தந்தை கற்ற பாடம்!



ஒரு பணக்காரத் தந்தை தன்னுடைய மகனுக்கு ஏழ்மையில் வாழ்கின்ற மக்களின் நிலைமையை கற்றுக் கொடுக்க வேண்டும் என விரும்பினார். எனவே, தந்தை மகனை அழைத்துக் கொண்டு ஏழை மக்கள் வாழ்கின்ற ஒரு பிரதேசத்திற்கு சுற்றுலா ஒன்றை மேற்கொண்டார்.

அவர் சுற்றுலாவை முடித்து விட்டு திரும்பி வரும்போது தனது மகனிடம், "சுற்றுலா எவ்வாறு இருந்தது" என்று கேட்டார். அதற்கு மகன், "மிகச் சிறப்பாக இருந்தது" என்று பதிலளித்தான். தொடர்ந்து தந்தை, "ஏழை மக்கள் எவ்வாறு வாழ்கின்றார்கள் என்பதை நீ பார்த்தாயா?" என்று கேட்டார். "ஆம்" என்று மகன் பதிலளித்தான். தந்தை, "சரி அவ்வாறானால் இந்த சுற்றுலாவிலிருந்து என்னத்தைக் கற்றுக் கொண்டாய் என்பதை எனக்குச் சொல்" எனக் கேட்டார்.

மகன் பதிலளித்தான், "எங்களிடம் ஒரு நாய் தான் இருக்கிறது. அவர்களிடம் நான்கு நாய்கள் இருக்கின்றன. எங்களிடம் ஒரு நீச்சல் தடாகம் தோட்டத்தின் மத்தியில் இருக்கின்றது. ஆனால், அவர்களுக்கு முடிவில்லாத ஒரு பெரிய குளம் இருக்கின்றது. எங்களிடம் இறக்குமதி செய்யப்பட்ட விளக்குகள் இருக்கின்றன. அவர்களிடம் இரவில் நட்சத்திரங்கள் இருக்கின்றன.

நாங்கள் ஒரு சிறிய நிலப்பகுதியில் வாழ்கிறோம். அவர்களுக்கு நிறைய நிலங்கள் இருக்கின்றன. எங்களுக்கு பணியாற்றுவதற்கு வேலையாட்கள் இருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் ஏனையவர்களுக்கு சேவையாற்றுகின்றார்கள். நாங்கள் உணவை வாங்குகின்றோம். ஆனால், அவர்கள் தமக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்து கொள்கிறார்கள். எங்களது சொத்துக்களைப் பாதுகாக்க எங்களது வளவைச் சுற்றி மதில்கள் இருக்கின்றன. ஆனால், அவர்களைப் பாதுகாக்க நண்பர்கள் கூடி இருக்கிறார்கள்.

தந்தை வாயடைத்துப் போனார்.

# டுவிட்டர் இப்படித்தான் ஆரம்பித்தது

சாதாரணமான சமூக வலையமைப்புகளிலிருந்து விலகி வித்தியாசமாய் ஒரு தளத்தை உருவாக்க வேண்டும் என்னும் சிந்தனை, ஓடியோ நிறுவனத்திற்கு வந்தது. அதற்காக அந்த நிறுவனம் முக்கியமான நிர்வாகிகள், வல்லுனர்களுடன் ஒரு விவாதத்தை நிகழ்த்தியது. அங்கு அலசப்பட்ட பல்வேறு விடயங்களில் ஜேக் டோர்சி என்பவருடைய வித்தியாசமான சிந்தனைதான் டுவிட்டர் உருவாகக் காரணம்.


மொபைலில் எஸ்.எம்.எஸ். அனுப்புவது போல இணையத்தில் குறுஞ்செய்திகளால் ஒரு இணைய தளம் உருவாக்கினால் என்ன? என்பதுதான் அந்த மில்லியன் டாலர் சிந்தனை விதை.

அதன் வளர்ச்சி பெற்ற வடிவம்தான் இன்று 100 மில்லியனுக்கும் அதிகமான பாவனையாளர்களால் கொண்டாடப்படும் டுவிட்டர். முதலில் ஐந்து இலக்க வார்த்தையான twttr என்று அழைக்கப்பட்டு பின்னர் அது டுவிட்டரானது.

2006 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் தேதி முதல் டுவிட் (குறுஞ்செய்தி) அனுப்பி சோதனை செய்யப்பட்டது.

அதே ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் தேதி இது பொதுப் பயன்பாட்டுக்கு வந்தது. வினாடி ஒன்றுக்கு 750 குறுஞ்செய்திகள் இதில் அனுப்பப்படுகிறது. அதாவது ஒரு நாளைக்கு 65 மில்லியன் குறுஞ்செய்திகள்!

டுவிட்டர் நிறுவனம் ஆண்டுக்கு 150 மில்லியன் டொலர்களை சம்பாதிக்கின்றது.




## அன்ட்ரு கார்னகி

மிகச்சிறந்த தொழிலதிபராக விளங்கியவர் அன்ட்ரு கார்னகி. தன் தொழிலில் அவர் நிபுணரல்ல. ஆனாலும் அவர் வென்றது எப்படி என்று யாருக்கும் தெரியவில்லை. அவர் வாழ்ந்து முடித்தபிறகு அந்தக் கேள்விக்கு விடைகிடைத்தது. அந்த வெற்றி ரகசியத்தை அவருடைய கல்லறை மீது பொன்னெழுத்தில் பொறித்திருந்தார்கள். 'தன்னைவிட மேலானவர்களை வேலைக்கு வைத்து மரியாதையாய் நடக்கத் தெரிந்த மாமனிதர் இங்கே உறங்குகிறார்'.

# ஏன் வானம் நீல நிறமாக இருக்கிறது?



ஏன் வானம் நீல நிறமாக இருக்கிறது? சூரியனில் இருந்தோ அல்லது மின்குமிழில் இருந்தோ வரும் ஒளி வெள்ளை நிறமாக இருக்கும். ஆனால் பல நிறங்களை உள்ளடக்கியது. இதனை வான வில்லில் அவதானிக்கலாம். வாயு மண்டலத்தில் கூடுதலான பகுதி கிதம் (78 % நைதரசன், 21 % ஒட்சிசன்) வாயுக்களும் மிகுதி நீராவியும் மாசுத்துகள்களும் உண்டு. அவற்றினூடே ஒளி பூமியை வந்தடைகிறது.

ஒளி அலைகள் வேறுபட்ட அலைநீளத்தை உடையனவை. சிவப்பு நிறம் கூடிய அலை நீளம் கொண்டது. நீல நிறம் குறைந்த அலைநீளம் உடையது. கூடிய அலைநீளம் உடைய ஒளி அலைகள் ஊடுருவிச் செல்கின்றன. குறுகிய அலை நீளம் உடைய நீல நிற ஒளி வாயுத்துணிக்கைகளால் உறிஞ்சப்படுகிறது. உறிஞ்சிய துணிக்கைகள் அதை கதிர்க்கின்றன. அவை தெறிப்பு அடைந்து நீல நிறமாக வானம் தோன்றுகிறது.

ஒளி காற்று மண்டலத்தில் இடையூறில்லாமல் பயணம் செய்தாலும் காற்றிலுள்ள அணு மூலக்கூறுகள் நீர்த்துளிகள் பனிமூட்டம் போன்றவை ஒளியைச் சிதறடிக்கின்றன. சிதறிய ஒளி மேலும் மேலும் சிதறடிக்கப்படுகிறது. இவ்வாறு நடைபெறும்போது மிக அதிகத் துடிப்புடைய நீல நிறம் மிக அதிகமாக சிதறடிக்கப்படுகிறது. (சிவப்பு மிகக்குறைவாக சிதறுகிறது.)

நாம் பார்க்கும்போது அவ்வொளி அலைகள் கண்ணை வந்தடைகின்றன. அதனாலேயே பகலில் வானம் நீல நிறமாக இருப்பது போல தோன்றுகிறது. வானம் என்பது வெறுமனே வாயுத்துணிக்கைகள், மாசுக்களால், மேலே கூறப்பட்ட ஒளியால் ஆனதே தவிர அப்படி ஒன்று இல்லை என்பதே உண்மை. பௌதிக விதிப்படி ஒரு நிறத்தின் ஒளி அலைகளின் நீளம் அதிகமா இருந்தால் அவை நம் பார்வைக்குக் கிடைக்காமலே போய்விடும்.

நீல நிறத்தின் ஒளி அலைகள் குறைவாக இருப்பதால் அது நம் கண்களுக்குள் சிக்கிக்கொள்கிறது.

வானம் நீல நிறமாக இருப்பதால் அதை பிரதிபலிக்கும் கடலும் நீல நிறமாகவே இருக்கிறது. காலை மாலை சூரிய உதயம் அஸ்தமனத்தின் போது மட்டும் அந்தப் பகுதி சிவப்பாக தெரியக் காரணம், சூரியக்கதிர்களில் உள்ள சிவப்பு நிறத்தின் ஒளியலைகளின் நீளம் அப்போது மட்டும் குறைவதுதானாம்!


# வன்தட்டு டிரைவர் மென்பொருளை சேமித்து வைக்கலாம்



விண்டோஸ் 98 முதல் 7 வரை உள்ள அனைத்து ஒபரேட்டிங் சிஸ்டத்தின் வன்தட்டு டிரைவர் மென்பொருளை எளிதாக பேக் அப் செய்து வைக்கலாம். கணினி வாங்கி ஓராண்டு ஆகிவிட்டதும், கணினி வாங்கும்போது உடன் கொடுத்த Motherboard CD எங்கிருக்கிறது என்றே தெரியவில்லை என்று சொல்லும் அனைவருக்கும் Driver மென் பொருளை பேக்அப் செய்து வைப்பதற்கு உதவுவதற்காக ஒரு இலவச மென்பொருள் இருக்கிறது.

http://www.softpedia.com/get/System/Back-Up-and-Recovery/Semper-Driver-Backup.shtml என்ற இத்தளத்திற்கு சென்று மென்பொருளை இலவசமாக தரவிறக்கிக்கொண்டு நம் கணினியில் எளிதாக நிறுவலாம். இந்த மென்பொருளை இயக்கி வரும் (Audio, Video, Lan, Modem) வகைகளில் நமக்கு எந்த வகையான டிரைவர் பேக்அப் செய்ய வேண்டுமோ அதை தெரிந்து (Back-Up-Drivers) எளிதாக தரவிறக்கலாம். உங்கள் கணினியுடன் வரும், Motherboard CD இல்லையெனில் இனி இந்த இலவச மென்பொருளை தரவிறக்கி டிரைவர் பேக்அப் செய்து வைத்துக் கொள்ளலாம்.

# கத்தரிக்கோல் உருவான கதை



கத்தரிக்கோல் கி.மு. 1500இல் எகிப்து நாட்டில் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. ஆரம்ப காலத்தில் இங்கிலாந்தில் கத்தரிக்கோல் உயர்ந்த, அபூர்வப் பொருளாகக் கருதப்பட்டது. விலை உயர்ந்து காணப்பட்ட கத்தரிக்கோல் சாதாரண மக்கள் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்தது. 1761இல் இந்நிலைமாறி, பலரும் கத்தரிக்கோலை பயன்படுத்த ஆரம்பித்தனர்.

ரொபேர்ட் ஹின்கிளிப் (Robert Hinchliffe) என்பவர் முதன் முதலில் தொழிற்சாலை அமைத்து கத்தரிக்கோலை தயாரிக்க ஆரம்பித்தார். இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் துருப்பிடிக்காத இரும்பினால் நீண்ட காலத்திற்குப் பயன்படக்கூடிய மழுங்காத, கூறிய முனை கொண்ட கத்தரிக்கோல் தயாரிக்கப்பட்டன.

# மிக ஆபத்தான பறவை



உலகின் மிக ஆபத்தான பறவையாக நெருப்புக்கோழி கணிக்கப்பட்டுள்ளதுடன், கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தின் 2007ஆம் ஆண்டுப் பதிப்பிலும் உலகின் மிக ஆபத்தான பறவையாக இடம் பிடித்துள்ளது. விசேடமாக தான் காயப்பட்டாலோ அல்லது தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலிருந்தாலோ பலமாக எதிரில் உள்ளவர்களை தாக்கும் ஒரு அதிசயப் படைப்பாகும். இதன் தாக்குதலானது எலும்புகள் முறிவடைவதற்கு பலமானதாகவும் இருக்கும்.

இந்த நெருப்புக் கோழிகள் பெரும்பாலும் அவுஸ்திரேலியா மற்றும் நியூகினியாவின் மழைக் காடுகளில் வாழ்கின்றன. மிருகக் காட்சிசாலைகளில் வைத்து பராமரிக்க மிகக் கடினமான ஒரு உயிரினமாக இவை உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமாக பரீட்சைக்கு முகம் கொடுப்பது எப்படி?

பொதுவாக இது பரீட்சைக் காலமாக இருக்கின்றது. குறிப்பாக க.பொ.த. சாதாரண தரத்தில் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதியிலிருந்து பரீட்சைக்கு முகம் கொடுக்கவுள்ளனர். எனவே அவர்களுக்குப் பிரயோசனமளிக்கும் வகையில் நாம் தொடர்ந்தும் பரீட்சைக்கு வழிகாட்டும் அம்சங்களை பிரசுரித்து வருகின்றோம். அதில் ஒரு பகுதியே இது.

சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் சிறந்த முறையில் சித்தியடைவதற்கு வாழ்த்துகின்றோம். அதற்காகப் பிரார்த்திக்கின்றோம். (பொறுப்பாசிரியர்)



01. உங்களுடைய பாடங்களை பரீட்சை நடைபெறும் தினத்திற்கு முன்னர் மீட்டிக் கொள்ள வேண்டும் மாற்றமாக, பரீட்சை நடக்கும் தினத்தில் அல்ல.

02. எவ்வாறு கற்கலாம் என்று தொடர்பான புத்தகங்கள், கட்டுரைகளை வாசிக்கலாம் அது உங்கள் கற்றல் முறையை இலகுபடுத்தும்.

03. பரீட்சை நடக்கும் தினத்தில் படிக்க வேண்டாம். நன்றாகத் தூங்கி எழும்பி குளித்து ஏற்கனவே தயாரித்துள்ள சிறிய குறிப்புகளை அவதானியுங்கள்.

04. நல்லதொரு காலை உணவை உட்கொள்ளுங்கள்.

05. உங்களிடம் தேவையான பேனை, பென்சில், அனுமதி அட்டை, அடையாள அட்டை போன்றன இருக்கின்றனவா என்பதை வீட்டைவிட்டு வெளியேறும் முன்னர் கவனித்துக் கொள்ளுங்கள்.

06. பரீட்சை ஆரம்பமாவதற்கு முன்னர் ஒரு கிளாஸ் தண்ணீர் அல்லது ஒரு சொக்க லட் சாப்பிடுங்கள்.

07. பரீட்சை முடிவடைந்த தன் பின்னர் அதுபற்றி கலந்துரையாட வேண்டாம். ஏனெனில் சிலவேளை அது உங்களது ஏனைய பாடங்களைப் பாதித்து விடும்.

08. படிக்கும்போது சோர்வு ஏற்பட்டால் சிறிது விளையாடலாம் அல்லது பூ மரங்களுக்கு நீரூற்றலாம் அல்லது செல்லப் பிராணியுடன் விளையாடலாம்.

09. உங்களுக்கு டென்ஷன் ஏற்பட்டால் இறைவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள். உங்கள் பெற்றோரிடமும் உங்களுக்காக பிரார்த்திக்குமாறு கூறுங்கள்.

10. உடனடி உணவுகளை தவிர்த்துக் கொள்ளுங்கள். பழங்கள் அல்லது பழச்சாறு போன்றவற்றை உணவாகக் கொள்ளுங்கள்.

11. உங்களது நேர அட்டவணையை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். அதில் படிப்பதற்கு, சாப்பிடுவதற்கு, விளையாடுவதற்கு என நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுங்கள்.

தொகுப்பு-பாஸிரா மைந்தன்

# க.பொ.த. சாதாரண தரம் - இஸ்லாம் -

(மீள்பார்வை இதழ் 233 இல் கேட்கப்பட்ட வினாக்களுக்கான விடைகள் இங்கு பிரசுரிக்கப்படுகின்றன.)

1. தொடர்பாடல் என்பது ஒரு கருத்தை அல்லது விடயத்தை பகிர்ந்துகொள்ளும் முறைமையாகும்.

2. ஒரு தகவலை எத்திவைப்பதற்காக, ஒரு விடயத்தை தெரிந்து கொள்வதற்காக, ஒரு சமூகமாக வாழ்வதற்காக, உணர்வுகளை, கருத்துக்களை பகிர்ந்துக்கொள்வதற்காக.

3. கடிதங்கள், உரையாடல்கள், உபதேசங்கள், சைகைகள்.

4. அகபா மலையடிவாரம், ஸபா மலைக்குன்று, ஒட்டகையின் முதுகு, தாருல் அர்க்கம், உக்காழ், துல்மஜாஸ், மஜன்னா போன்ற சந்தைகள், மஸ்ஜிதுகள், மிம்பர்கள், மீஃதனா மைதானம்.

5. ஜஃபர் இப்னு அபீதாலிப் (றழி) - அபீஸீனியா
முஸ்அப் பின் உமைர் (றழி) - மதீனா (யத்ரிப்)
முஆத் பின் ஜபல் (றழி) - யெமன்

6. சொற்களை நிறுத்தி, திருத்திப் பேசுதல், முக்கிய விடயங்களை மூன்று முறை சொல்லுதல், கேட்பதற்கான ஆர்வத்தை தூண்டி விளக்கமளித்தல், முடியுமான தொடர்பாடல் சாதனங்களைப் பயன்படுத்தல்.

7. அபிஸீனியா - அம்ரு இப்னு உமையா (றழி)
றோம் - திஹ்யதுல் கல்பி (றழி)
பாரசீகம் - அப்துல்லாஹ் இப்னு ஹுஸைமா (றழி)
எகிப்து - ஹாதிப் இப்னு அபீ பல்தஆ (றழி)

8. நீவாறுல் பாரித்

9. ஸைத் பின் ஸாபித் (றழி) மன்னர்களுக்கு கடிதம் எழுதல், அப்துல்லாஹ் இப்னு அர்க்கம் (றழி) கடன் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்தல்

10. ஆதாரபூர்வமானவை, நம்பகத்தன்மை, நடுநிலை தவறாமை, பொதுநலன் பேணல், பண்பாடு பேணல்.

11. அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள்

12. பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், இணையம்; தொலைக்காட்சி, வானொலி.

13. நன்மை
தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றமை, செய்திகளை அறிந்து கொள்கின்றமை, பல்வேறுபட்ட புதிய அம்சங் களைத் தெரிந்து கொள்கின்றமை.

தீமை
கலாசாரத்திற்கு முரணான அம்சங்களை பார்க்க வேண்டி, ஏற்படுகின்றமை, ஒழுக்க சீர்கேடு, ஆபாசம், நம்பகமற்ற செய்திகள், தகவல்கள்.

## Students @ மீள்பார்வை

## மாணவர்களின் கவனத்திற்கு...

இப்பக்கத்தில் பாடங்களை [illegible] அனுப்ப [illegible] கல்வி கற்கின்ற மாணவர் களின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

ஆக்கங்கள் A4 தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட வேண்டும். மாணவர் பக்கத்தில் [illegible] கருத்துக்களை எதிர்பார்க்கிறோம்.

(பொறுப்பாசிரியர்)

# க.பொ.த. சாதாரண தரம் - வரலாறு

## சுருக்கமான வினாக்களும் விடைகளும்

1. தந்தை இறந்த போது அசோகன் இருந்த இடம் எது? தட்சசீலம்

2. அசோகன் அரசியல் வாழ்வை ஆரம்பித்த இடம் எது? அவந்தி தேசம்

3. சப்தசிந்து என்று ஆரியர் குறிப்பிடப்பட்டவற்றுள் இன்று மறைந்துவிட்டதாகக் கருதப்படும் இரு நதிகள் எவை? சரஸ்வதி, துரஸ்டவதி

4. ஜெகன் மாதா அழைக்கப்பட்ட மலை எது? இமயமலை

5. சுவர்ணம் என்ற பெயரில் தங்க நாணயம் வெளியிட்ட குப்த அரசன் யார்? ஸ்கந்த குப்தன்

6. குப்தாது இருமொழி நாணயங்களுக்கு வழிகாட்டியவர் யார்? கிரேக்கர்

7. வீர காவியங்கள் எனப்படுவது எவை?
இராமாயணம், மகாபாரதம்

8. மிகப்பெரிய தானியக் களஞ்சியம் கண்டுபிடிக்கப்பட்ட சிந்து வெளி நகரம் எது? ஹரப்பா

9. சிந்து வெளியில் எழுத்துக்கள் எப்பெயர் பெறும்? ஓவிய எழுத்துக்கள் ஸ்டெடைட்

10. இந்திக்கா நூல் எம்மொழியில் எழுதப்பட்டது? கிரேக்கமொழி

11. ஆரிய நாகரிகத்தை வெளிப்படுத்தும் சமீபத்திய அகழ்வு? பொகஸ்கோயி அகழ்வுகள்

12. கலிங்கத்தை முதலில் சுதந்திர அரசனாக்கியவன்? மகா மேகவாகனன்



13. மொகஞ்சதாரோவும் ஹரப்பாவும் தற்போது அமைந்துள்ள இடங்கள் எவை? மொகஞ்சதாரோ - லார்க்கனா மாவட்டம் (சிந்து மாநிலம்), ஹரப்பா - மான்கோமரி மாவட்டம் (பஞ்சாப் மாநிலம்)

14. அறிவியலுக்கு எல்லாம் அறிவியல் என்று புகழப்படும் நூல்? நியாய தரிசனம் (கௌதம முனிவர்)

15. இந்தியாவின் தொன்மை இலக்கியம் என்று புகழப்படும் நூல்? ரிக் வேதம்

16. வரலாற்றை ஒழுங்காக எழுதும் முறையை இந்தியர் யாரிடமிருந்து பெற்றனர்? கிரேக்கரிடமிருந்து

17. பிற்பட்ட வேதகால அரசர்களை குறிப்பிடப் பயன்படுத்திய பெயர்கள்? அதிராஜன், சாம்ராஜன், சுவராஜன், ஏகராஜன், ஷ்ராஜன், சர்வராஜன்

18. இந்தியாவின் முதல் மாமன்னன் எனப்பட்டவன்? சந்திரகுப்த மௌரியன்

19. சந்திரகுப்த மௌரியன் உயிர் நீத்த இடம்? சரவன பொன்கொலா (தக்கணம்)

20. மௌரியர் கலையை வெளிப்படுத்தும் நகரம் எனப்படுவது? சாஞ்சி

21. 2ஆம் சந்திரகுப்தனால் தோற்கடிக்கப்பட்ட சாக அரசன்? உருத்திர சின்னா

22. பௌத்த முக்காவலர் எனப் புகழப்படும் இந்திய அரசர்கள்? அசோகன், கனிஸ்கன், ஹர்சன்

23. தந்தை கொல் மரபு எனப்படும் வம்சம்?
சிசுநாக வம்சம்

24. தேனும் பாலும் பாய்ந்தோடும் நாடு என்று இந்தியாவைப் புகழ்ந்தவர்? மார்கோ போலோ

25. குவாங் சுவாங்கை சீனா எல்லைக்கு கொண்டு சென்று விட்ட சிற்றரசன்? உதித்தன் இரும்புத்தூண் பட்டயம்

26. கோட்டை காலம் பிரசித்தி பெற்ற கல்வி நிலையம்? பத்மாதேவி பிரிவெனா

27. பின்வரும் சங்கங்களை நிறுவியோர் யாவர்?
மகா போதி சங்கம் – அநகாரிக தர்மபால
பௌத்த இளைஞர் சங்கம் – D.P. ஜயதிலக்க
பரம விஞ்ஞானார்த்த சங்கம் - ஒல்கொட்
மது ஒழிப்பு இயக்கம் – F.R. சேனாநாயக்க
முஸ்லிம் கல்விச் சங்கம் - சித்திலெப்பை

(நன்றி - கெதர் பேஜ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்பதுக்கும் அதிகமான கட்சிகள், இயக்கங்கள், அமைப்புகளை உள்ளடக்கிய அரசியல் கூட்டமைப்பை உருவாக்குவதிலும் தலைமை வழங்குவதிலும் நீங்கள் பங்களித்திருக்கிறீர்கள். இக்கூட்டமைப்புக்கான தூண்டற் காரணிகள், அதன் இலக்குகள் என்ன?



இஹ்வான்களின் சுதந்திரத்திற்கும் நீதிக்குமான கட்சி கடந்த ஜூன் மாதத்தில் தனது சட்ட அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டது. நடைபெறுகின்ற 498 ஆசனங்களுக்கான பாரா ளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறது. தற்போது ஏற்படுத் தப்பட்டுள்ள கூட்டமைப்பின் நோக்கங்கள் என்ன? வஃப்த் கட்சி ஏன் அதிலிருந்து விலகியது? இஹ்வான்களுக்கும் இராணுவ சபைக்கும் இடையிலான தொடர்பு என்ன? போன்ற பல கேள்விகள் குறித்து சுதந்திரத்திற்கும் நீதிக்குமான கட்சியின் தலைவர்களில் ஒருவரும் அதன் சட்ட ஆலோசகருமான கலாநிதி அபூ பரகா அவர்களுடன் மேற்கொண்ட நேர்காணலின் சில பகுதிகளை மீள்பார்வை வாசகர்களுக்காக தருகிறோம்.

தமிழில்
ஏ.டபிள்யூ.எம். பாஸிர்

# மக்களின் விருப்புகளை ஆக்கிரமிக்க முடியும் என்பது வெறும் கற்பனாவாதமே!

**- கலாநிதி அபூ பரகா -**

உண்மையில் அங்கு அரசியல் சக்திகளுக்கிடையே ஒரு ஒருங்கிணைப்பு இருக்கிறது. அதுவே "எகிப்திய ஜனநாயக கூட்டமைப்பு" என்றழைக்கப்படுகிறது. இது உருவாக்கப்பட்டதுமுதல் ஒரு அரசியல் கூட்டமைப்பாக விளங்குகிறது. தேர்தலுக்கான கூட்டமைப்பாக மாத்திரம் அது இயங்கவில்லை. கூட்டமைப்பு மூன்று கருப்பொருள்களில் ஒருமித்த நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது.

அவற்றில் ஒன்று, அரசியல் ஒழுங்கு, அதன் இயல்புத் தன்மை, எதிர்வரும் காலப் பிரிவில் நாட்டின் கட்டமைப்பு, யாப்பை உருவாக்கும் அரசியல் கொள்கைகள், எகிப்து கட்டியெழுப்பப்பட வேண்டிய சட்ட அடிப்படைகள் அவற்றுடன் பொருளாதாரம், பாதுகாப்பு, சிவில் நிருவாக ஒழுங்கு, வெளிநாட்டுத் தொடர்புகள் போன்றவற்றுக்கான பொதுக் கொள்கைகள் என்பவற்றுடன் தொடர்புடையவை. இவை கூட்டமைப்பில் பங்கு கொண்ட அனைத்துக்கட்சிகளும் உடன்பட்ட அம்சங்களாகும்.

இரண்டாவது, சட்டம் தொடர்பானது. கூட்டமைப்பு மிகத் தெளிவான நிலைப்பாடுகளையும் சட்டதிட்டங்களையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

மூன்றாவது, தேர்தல் ஒருங்கிணைப்பு தொடர்பானது. இதனை நாம் ஆரம்பித்துள்ளோம். நாம் ஒரே பட்டியலில் இறங்குவதன் மூலம் முழுமையான கூட்டமைப்பை அடையவே எதிர்பார்த்திருந்தோம். அது நடக்கவில்லை. என்றாலும் தேர்தல் செயற்பாட்டைத் தூய்மைப்படுத்துவதன் அவசியம், தேர்தலின் பாதுகாப்பினை பெருமளவில் உறுதிப்படுத்தல், அரசாங்கத்தை சமாதானமாக கைமாற்றுதல் என்பவற்றில் நாம் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டியுள்ளது.

கூட்டமைப்பில் இருந்து வஃப்த் கட்சி விலகிக் கொண்டமைக்கு என்ன காரணம்?

வஃப்த் கட்சி தனது வேட்பாளர்களைக் கொண்டுவந்தபோது ஜனவரிப் புரட்சிக்கு முன்பிருந்த அரசியல் கட்சிகள் எல்லாவற்றிலும் நடந்ததுபோல தன்னில் மாற்றம் கொண்டுவர முயற்சித்தது. அதற்கு பலமான மக்கள் பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. எனவே மக்கள் தரப்பில் இருந்து பெரும் எண்ணிக்கையானோர் வேட்பாளர்களாவதற்கான வாயிலைத் திறந்து கொடுத்தது. இந்தப் பெரும் எண்ணிக்கையானவர்கள் ஏதாவது ஒரு வகையில் ஹிஸ்புல் வதனியை சார்ந்திருந்தனர். பின்னர் அது பிரச்சினையைத் தோற்றுவித்தது. இப்பிரச்சினைதான் இக்கூட்டமைப்பிலிருந்து வெளியேறும்படி வஃப்த் தலைமைத்துவத்திற்கு அழுத்தங்கொடுத்தது.

குறிப்பாக இவர்களில் அதிகமானோர் வஃப்த்தின் உயர் சபை உறுப்பினர்களின் சிபாரிசுகளின் வழியாக வந்தவர்கள். இங்கிருந்து அவர்கள் தேர்தல் ஒருங்கிணைப்பிலிருந்து வெளியேறினார் கூட்டமைப்பில் இருந்து அல்ல.

தற்போதைய விடயங்கள் கூட்டமைப்பைத் தொடரச் செய்யும் நிலையில் இருப்பதாக நம்புகிறீர்களா? அல்லது அதற்கு மாற்றமாக நடக்குமா?

கூட்டமைப்பைத் தொடர்வதற்கு முழு முயற்சிகளையும் செலவழிக்க உறுதிபூண்டிருக்கிறோம். எங்களது பார்வையில் அது மிக முக்கியமானது. இக்காலப் பிரிவில் அது தேசிய நலன் சார்ந்த ஒரு விடயம். எமக்கு முன் இரு முக்கியமான விடயங்கள் இருக்கின்றன. அவ்விரண்டும் மற்றொன்றுடன் முரணானவை. ஒன்று, பாராளுமன்றத்தினுள்ளே இருக்கும் அனைத்துக் கட்சிகள், சக்திகள், அரசியல் குழுக்களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது. இதன்மூலம் வரும் பாராளுமன்றம் வித்தியாசமான சிந்தனைப் பாங்கும் கட்சிசார்பும் கொண்டவர்களை உள்ளடக்கிய சபையாக இருக்கும்.

இரண்டாவது விடயம், பாராளுமன்றம் ஒருங்கிணைக்கப்படாத ஒன்றாக வரலாம். அப்படி வந்தால் ஒரு கருத்தை உருவாக்குவது சிரமமாக இருக்கும். தேவையான நேரத்தில் தேவையான முடிவெடுப்பது கஷ்டங்களை தோற்றுவிக்கும். நாம் பெரும் சவால்களை எதிர்கொள்கிறோம். பாதுகாப்பு, அபிவிருத்தி, சுகாதாரம், கல்வி, பொருளாதாரம், வேலையில்லாப் பிரச்சினை, கலாசாரம், சமூக நீதி என்று பல்வேறு துறைகளில் பெரும் பிரச்சினைகள் உள்ளன.

சவால்களை எதிர்கொள்ள வேண்டுமானால் பலமான அரசாங்கம் அமையவேண்டும். அப்போதே இப்பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்கலாம். தம்மிடையே ஒத்துழைத்துக் கொள்ளும் பெரும்பான்மையைப் பெறாது பலமானதொரு அரசாங்கம் அமையவே முடியாது. இவ்விரு பெரும் சிக்கல்களை வெல்ல வேண்டும். அப்படியானால் கூட்டமைப்பைத்தவிர வேறு வழியில்லை.

தற்போது எகிப்தில் நடக்கும் குழப்பங்களை எப்படிப் பார்க்கிறீர்கள்?

இது இயல்பானதொரு விடயம். இது அரசியல் சக்திகளின் பிரச்சினைகளே தவிர வேறொன்றும் இல்லை. இவற்றை மதிப்பிட்டு இதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டியிருந்தது. காலத்தை இழுத்தடிக்காமல் தேர்தலை விரைவாக நடத்தி முடிக்க வேண்டும். நாட்டின் ஜூலையின் 7 மாதங்கள் வீணாய்ப் போய்விட்டன. இராணுவ சபை சபைக்கியத்துடன் விடயங்களைக் கையாளும் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். "மார்பே முதலாவது" எனும் கோஷத்தில் இணைந்து கொண்டு ஆரம்பம் முதலே அரசியல் தளத்தில் பெரும் அழுத்தம் பிரயோகித்துவரும் சிறுசிறு குழுக்களும், கூட்டமைப்புகளும், அரசியல் கட்சிகளும், யாப்பு சீர்திருத்தம் குறித்த நியாயமற்ற கருத்து முரண்பாடுகளும் எல்வழியிலாவது இடைக்கால அரசை நீடிக்கச் செய்வதற்கான ஒரு முயற்சியே. தேர்தலைவிட ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பும் மிகச் சிறந்த கருவி ஏதும் இருக்கிறதா?



இஹ்வான்களும் பொதுவாக இஸ்லாமியவாதிகளும் எதிர்வரும் தேர்தலில் ஆதிக்கம் செலுத்துவது குறித்து சில அரசியல் சக்திகள் அச்சம் கொண்டிருக்கின்றன. இது குறித்து என்ன கூறுகிறீர்கள்?

ஆதிக்கம் என்ற சொற்பிரயோகத்தினால் நாடவருவது எதனை. சுதந்திரமான தேர்தல் ஒன்றினூடாக பெரும்பான்மையைப் பெறுபவர்களை ஆதிக்கத்தினால் வெற்றிபெற்றதாக சொல்ல முடியுமா? இது ஒரு சரியான அரசியல் தர்க்கமா? அல்லது சுயநலம், பலயீனம், தோல்வி மனப்பாங்கா.

சிலர் உங்களைப்போன்று சிறந்த முறையில் தேர்தலுக்கு தயாராகிக் கொள்ளவில்லை என்று காரணம் சொல்கின்றனரே?

சிறந்த முறையில் தயாராகுவதற்கு அவர்களை யார் தடுத்தது-

இஹ்வான்கள் முபாரக்கின் ஆட்சியின் கீழ் அவர்களைவிட மிகச் சிறந்த நிலையில் இருந்தனரா? இஹ்வான்கள் அடக்கப்பட்டு, தடை செய்யப்பட்டு, உளவு பார்க்கப்பட்டு, கைது செய்யப்பட்டு, சிறைப் பிடிக்கப்பட்டிருந்தபோது இந்தக் கட்சிகள் எல்லாவற்றுக்குமே நிலையங்களும், பத்திரிகைகளும் உத்தியோகபூர்வ ஊடகங்களும் இருந்தனவே..!

அப்படியானால் சுதந்திரத்திற்கும் நீதிக்குமான கட்சி ஏன் இராணுவ சபையின் இடைக்கால பிரிவிற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது?

நாம் ஜனநாயக வடிவத்தைக் கொண்டுவந்து இராணுவ சபையின் இடைக்காலப் பகுதியை சுருக்கி படையினரை அவர்களது முகாம்களுக்குள் மீளச் செய்யும் எல்லா கால அட்டவணைகளுக்கும் சார்பானவர்கள். இது தேசத்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் ஒரு புனிதமான பணியாகும். இடைக்காலப் பிரிவை சுருக்கி அதன் ஆயுளை ஒரு வருடமாகக் குறைக்கும் இராணுவ சபையின் ஒப்பந்தத்திலே கட்சியின் தலைவர் டொக்டர் மூர்ஸி கைச்சாத்திட்டார். அதிகாரத்தைத் தேர்ந்தெடுக்கும் சிவில் அரசாங்கத்திற்கு நகர்த்துவதை விரைவுபடுத்தும் எமது கோரிக்கையை அவர் எத்திவைத்துவிட்டார்.

சுதந்திரமான இயக்கத்திற்கும் பங்குபற்றலுக்கும் இடமளிக்கும் முகமாக இஹ்வான்களுக்கும் இராணுவ சபைக்கும் இடையே அறிவிக்கப்படாத ஒரு உடன்படிக்கை இருப்பதாக சிலர் பேசிக் கொள்கின்றனர். இது தொடர்பில் என்ன கூறுகிறீர்கள்?

இது முபாரக்கின் தர்க்கம் மட்டுமல்ல, அவரது அதிகார வர்க்கத்தினரின் சிந்தனைப்பாங்கு. இது வெறும் கற்பனையே. அவற்றில் எவ்வித உண்மையும் கிடையாது. அது எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. இஹ்வான்களும், சுதந்திரத்திற்கும் நீதிக்குமான கட்சியும் சட்டத்திலிருந்தே தமது சட்ட அந்தஸ்தைப் பெற்றுள்ளனர். அவர்களுக்கு இருக்கும் அடிப்படை உரிமையிலேயே அவர்கள் அரசியல்களத்தில் மேற்கொள்கிறார்கள். ஏனெனில் அவர்கள் மகத்தான புரட்சிக்கு பங்களித்த பிரதான சக்திகளில் ஒரு சக்தி. இப்புரட்சி வெற்றி பெறச் செய்வதில் பெரும் தியாகங்களைச் செய்தவர்கள். கட்சியும் சட்டத்திலிருந்தே தமது உரிமையைப் பெற்றிருக்கிறது. வேறு யாரிடமிருந்துமல்ல. யாருடனும் உடன்படிக்கையைச் செய்து கொள்ளும் தேவையில் நாம் இல்லை.

பல ஜும்ஆ தினங்களில் நடந்த மில்லியன் ஆர்ப்பாட்டங்களில் இஹ்வான்கள் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தமைக்கான விளக்கம் என்ன? சிலர் அதனைவைத்து இஹ்வான்களுக்கும் இராணுவத்திற்கும் இடையே உடன்படிக்கை ஒன்று இருப்பதாக வியாக்கியானம் கொடுக்கின்றனர்.

இது சரியானதல்ல. இஹ்வான்கள் நிருவனமயப்பட்ட ஒரு ஜமாஅத். சூழ்நிலைகளை, நிலைப்பாடுகளை முழுமையாகப் படித்து, நிர்ணயித்து, அக்காலப் பகுதிக்குரிய மிகப் பொருத்தமான தீர்மானத்தை சரியான கோணத்தில் எடுப்பவர்கள். அதன்மூலம் எல்லாவற்றுக்கும் முன்பாக நாட்டின் நலனையே அவர்கள் கருத்திற் கொள்கிறார்கள்.

எகிப்தின் ஆட்சியை உயர் இராணுவ சபை ஆக்கிரமிக்கலாம் என்ற அச்சம் உங்களுக்கு இருக்கிறதா?

காலச் சக்கரம் ஒருபோதும் பின்னோக்கி நகர்வதில்லை. இவ்வகையிலான சிந்தனைப் பாங்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. மக்கள் விருப்பத்திற்கு முன்னால் ஒருவருக்கு (இராணுவ சபையோ, வேறு எவருமோ) நிற்க முடியும் என்ற கொள்கை போய்விட்டது. எகிப்திய மக்களது விருப்பத்தை தன்னால் ஆக்கிரமிக்க முடியும் என்று நினைப்பவர் ஒரு கற்பனைவாதியாகவே இருப்பார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ். அஸீம்

# இது எங்கள் வரலாறு

இனிக்கும் கனிகளும்
நறுமண மலர்களும் சொரிந்த
எங்கள் நந்தவனத்துக்குள்
அவர்கள் நுழைந்தனர்...
பிரபஞ்சம் முழுவதும்
பேய்கள் நிறைந்ததுபோல்!

கனிகளை மட்டும்
சுவைபாடிய பேய்கள்
கிளைகளை உடைத்து
இலைகளை உதிர்த்து
எங்கள் சந்தோஷ விருட்சத்தை
வேரோடு பிடுங்கி வீசின!

கொதிக்கும் குருதி
கொப்பளிக்கப் பாய்கிறது
எலும்புக் கூடுகளிலன்றும்...
கொடூரப் பேய்களின்
வெறியாட்ட நினைவுகள்
விழித்திடும் போதினில்!

கறுப்பு ஜூலைக்காய்
கண்ணீர் சொரிந்த எம்
கண்களில் குத்திவிட்டு
கறைபடிந்த வரலாற்றுக்கு
முகவுரை எழுதினார்கள்
கறுப்பு ஒக்டோபரில்!

வெறுங்கையோடு துரத்தி எம்மை
வெறுப்போடுதிர்த்த வார்த்தை
இதயத் தழும்புகளில்
இன்னும் வலிக்கிறது...
'தெருத் தெருவாய் அலைபவர்கள்
தொலைக்காட்சியில் பார்க்கிறோம்'

உதிரத்தில் ஊறித்து
உயிரோடு கலந்து
இதயம் ஒலித்திடும்
இனிய கலிமாவின் முன்
இதயமற்றவனே நீ
அபகரித்த பொருளெல்லாம்
எமக்குத் தூசு
இது ஒன்றும் புதிதல்ல
எங்களுக்கு...

ஹிஜ்ரத்...
கேள்விப்பட்டிருக்கிறாயா?
கல்போடிணைந்த கலிமாவுக்காக
மக்கத்து மண்ணை எங்கள்
மாநபி துறந்த வரலாறு!

உதடுகள் உச்சரித்த
உயர் கலிமாவுக்காகவன்றி
முஸ்லிமாய் இம்மண்ணில்
பிறந்ததற்காகவன்றி
வேறெதற்கு எம்மை
விரட்டினாய் நீயும்?

தேடிய பொன்
ஓடியுழைத்த சொத்து
வாழ்ந்த வீடு
வாழ வைத்த கடை
பன்னிரண்டு நூற்றாண்டாய்
வேரோடி விருட்சித்த
உறவும் பெருவிருட்சமது
இரு மணித்துளியிடையே
தூசாகிப் பறந்தது
துவேசப் பெரு நெருப்பில்!

செல்வமெல்லாம் அபகரித்து
செல்கையில் நீ செப்பியது
சொல்லம்பாய் இன்னும்
செவிகளில் ஒலிக்கிறது
'சுல்தான்களெல்லாம்
பக்கீராய் செல்கிறீர்'

சுல்தானை பக்கீராய்
பக்கீரை சுல்தானாய்
மாற்றுகின்ற வல்லவன்
எல்லோரின் தலைவிதியும்
எழுத்தாணி பதிக்கின்ற
அல்லாஹ்வேயன்றி நீயல்ல...

என்னை வெட்டித் துண்டாக்கு
சுட்டுப் பொசுக்கு
வேரோடு பிடுங்கி வீசு!
விழும் உடலின்
ஒவ்வோர் அணுவும்
ஓடும் குருதியின்
ஒவ்வொரு துளியும்
உச்சரிக்கும் கலிமாவை!




கவிதைகளுக்கான பக்கம்

# கோபத்தில் எழுதிய கவிதை

ஜே. பிரோஸ்கான்

அது சந்தோஷம் போர்த்திய பொழுது
கடற்கரையை நோக்கியான பயணிப்பு.
ஆணும் ஆணுமாய்
பெண்ணும் பெண்ணுமாய்
ஆணும் பெண்ணுமாய்
அவர்களும் இவர்களுமாய்
இன்றும் இன்னுமாய்...
கடல் நுரைபோல பொங்கிய
சலசலப்புக்குள்
சுகதல்லாமல் தீக்குச்சியுரசல்போல
இனம் புரியாதபடி
அவர்கள் வரம்பின்
நெருக்கத்தோடு நகர்கையில்
அந்தப் பெருநாள் நாவில்
தாதரின் வார்த்தை நசுங்கியே போயிற்று.
அடிவயிற்றில் பிசையும் வலியோடு
கவலைக்குள் சிக்கி
நொறுங்கியே போனேன்.
மார்க்கம் அவமானப்பட்டுப்போனதாக
சொல்லிய நண்பனின்
கனல் கக்கிய பார்வையில்
எனக்கும் தெளிவாயிற்று
இப்படியான பெருநாள் தேவைதானா
நம் சமூகத்துக்கென்று.
வெறுத்திற்றுப் போனது மனசு.
கடற்கரையை மட்டுமல்ல
அன்றைய பெருநாளையும்தான்.



# முயல்களும் மோப்ப நாய்களும்

- மூதூர் முஹம்மது ராபி -



(கடந்த இதழின் தொடர்ச்சி...)

அவர்களிலே மூன்று அல்லது நான்கு பேர் எங்கள் மொட்டை மாடித்தளத்தில் குதித்து இறங்கினார்கள். இறங்கியதுதான் தாமதம், கண்மூடித் திறப்பதற்குள் துப்பாக்கிகள் மற்றும் நவீன தொலைநோக்கிகளுடன் சட்டென தரையில் படுத்துக் கொள்வதைக் கண்டேன்.

ஏனையவர்கள் எங்கள் பக்கத்திலிருந்த மாடிக்குடியிருப்பின் சந்துபொந்துகள் எங்கும் தொப் தொப்பென துப்பாக்கிகள் சகிதம் இறங்கித் தரையிலே படுத்துக் கொண்டார்கள். மேலே பறந்த ஹெலிகொப்டர் கழற்றிய காற்றினால் கிளம்பிய புழுதிப்படலம் கண்களைக் குருடாக்கியது.

சுற்றிலும் என்ன நடக்கின்றது என்பதை நான் புரிந்து கொள்வதற்கிடையில் 'டவுண்! போய்..!! டவுண்!' என்று கத்தியபடியே என்னை நோக்கிக் கூச்சலிட்டபடி ஒரு சிப்பாய் ஓடிவந்தான். எனது கால்களைத் தனது ஒரு காலால் தட்டிவிட்டு தோள்பட்டையில் பிடித்து இலாவகமாய் வீழ்த்தி தரையோடு குப்புறப்படுக்க வைத்த கையோடு அவனும் துப்பாக்கியோடு வீழ்ந்து படுத்தான்.

சத்தம் கேட்டு நித்திரை கலைந்து மேலே ஓடி வந்த எனது தந்தை மற்றும் தாய் குடும்பத்தினரையும் மொத்தமாக பிடித்து, 'கோ! கோ பெக்!! கெட் இன்ஸைட்... கோ!!' என்று உள்ளே தள்ளிவிட்டு மொட்டை மாடிக் கதவை அடைத்தான் மற்றொரு சிப்பாய். உள்ளேயிருந்து எனது தாயும் தம்பிகளும் பயத்திலே அழுவது கேட்டது. ஹெலிகொப்டரிலிருந்து இறங்கிய சிப்பாய்கள் பலர் எங்கள் மொட்டை மாடியின் சுற்றுச் சுவரில் மறைந்தவாறு எதிர்ப்புறமுள்ள இக்ரமின் குடியிருப்பை சூழ்ந்து குறிவைத்து படுத்திருந்தார்கள்.

ஹெலிகொப்டர்களிலிருந்து கடைசியாக இறங்கிய சிப்பாய்களின் கைகளிலே உறுதியான பட்டிகளால் பிணைத்திருந்த இரண்டு பெரிய அல்சேஷன் மோப்ப நாய்கள் பயங்கரமாக உற்றுப் பார்த்தவாறு இறங்கிச் சென்றன. அவற்றின் கோரைப் பற்கள் உலோகம் போல பளபளத்தன. யார் இவர்களெல்லாம் ஏன் இப்படியெல்லாம் நடக்கின்றது? எதற்காக இக்ரமின் வீட்டைச் சுற்றி இவ்வளவும் நடக்கின்றது? எதுவுமே விளங்கவில்லை எனக்கு.

திடீரென வானத்திலிருந்து தீப்பிழம்பு ஒன்று சீறிக்கொண்டு வந்து வெடித்துக் காதைச் செவிடாக்கியது. அதைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுகள். எங்கும் ஒரே புகைத்திரள். சிறிது நேரம் என்ன நடக்கிறது என்றே புரியவில்லை எனக்கு.

'ஓ! சுடாதீங்க அங்க..என்ட முயல் குட்டி இருக்கு ...சுட வேணாம்... முயல்குட்டி அங்க இருக்கு!' என்று கத்தினேன். 'வாட்? கீப் கொயட் போய்!' என்று அதட்டினான் என்னருகே படுத்திருந்த சிப்பாய். அவன் நீச்சல் கண்ணாடிபோல எதையோ கண்களிலே அணிந்து பார்க்கவே விநோதமாக இருந்தான்.

அவனது ஒரு கை என்னை வலது தோள் பட்டையைப் பிடித்து எழுந்திருக்க விடாமல் தரையோடு அழுத்திக் கொண்டிருக்க மற்றக் கை இயந்திரத் துப்பாக்கியின் விசையிலே தயாராயிருந்தது.

'சுடாதீங்க! என்ட அல்லாஹ்! அங்க இருக்கிறான்..!' என்று இக்ரமின் வீட்டைக் காட்டிக் கத்தினேன்.

ஹெலிகொப்டரின் விசிறி ஒலியிலே நான் கத்தியது என்னைப் பிடித்திருந்த அந்தச் சிப்பாய்க்கு கேட்கவில்லை.

'வாட்?' காதிலே அவன் அணிந்திருந்த இயர் போனை சிறிது அகற்றிவிட்டு, 'யூ வோன்ட்டு கோ தாட் ஹவுஸ்?' என்றான் ஆங்கிலத்தில். 'நோ.. மை.. ரபிட், அர்னப்' என்றேன்.

'வாட்... யுவர் பாதர்?' என்றான் புரியாமல். நான் கைகளால் முயல் குட்டிபோல சைகை காட்ட,

'ஓ! டோண்ட் வொறி!' என்று சிரித்தான்.

இதற்கிடையில் எதிர்வீட்டிலிருந்து துப்பாக்கியால் திருப்பித் தாக்கினார்கள். அதனையடுத்து மேலே பறந்து கொண்டிருந்த ஹெலிகொப்டர்களில் ஒன்று தீப்பற்றியவாறு வெடித்து வீழ்வதையும் கண்டேன். உடனே என்னோடிருந்தவன் உட்பட சிப்பாய்கள் அனைவரும் உசாராகி, எனது அழுகையையும் புறக்கணித்து விட்டு இக்ரமின் மாடிக்குடியிருப்பை நோக்கித் துப்பாக்கியால் சல்லடையிட்டு ஓய்ந்தார்கள்..

சிறிது நேரத்தில் பெருமழை வடிந்து ஓய்ந்ததுபோல வெடிச்சத்தம் ஓய்ந்தது. சிப்பாய்கள் எல்லோரும் எங்களை விட்டு விட்டு இக்ரமின் மாடிக்குடியிருப்புக்குள் இறங்கி ஓடிச் சென்றார்கள். மாடிச்சுவரின் மேலாகப் பார்த்தபோது அந்த வீட்டின் கண்ணாடிகள் நொருங்கிக் கிடப்பதைக் கண்டேன்.

இருட்டிலே சரியாக எதுவுமே தெரியவில்லை. டோர்ச் வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி பலர் நடமாடுவது தெரிந்தது. சில நிமிடங்களிலே நாங்கள் காலபந்தாடும் மேட்டில் நின்றிருந்த ஹெலிகொப்டர்களில் அவசர அவசரமாக எதையெல்லாமோ ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

எல்லாமே தெளிவில்லாமல் தெரிந்தது. இராட்சத விசிறிகள் புழுதி கிளப்பியபடி வானிலே எழுந்து திரும்பிய கதவுகளற்ற ஹெலிகொப்டர்களில் ஒன்றிலே அமர்ந்திருந்த சிப்பாய்கள் கீழிருந்த எங்களைப் பார்த்து கைகளையுயர்த்தி வெற்றி முழக்கமிட்டபடி சென்றார்கள். அவர்களின் முழங்கால்களுக்கிடையே நாக்கைத் தொங்கவிட்டபடி நின்றிருந்தது ஒரு மோப்ப நாய்.

அந்த நாயின் வாயிலே தொங்கிக் கொண்டிருந்தது சிவப்பு நிறம் தோய்ந்த ஒரு வெண் பஞ்சுக் குவியல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 வருடங்களில்... (03ஆம் பக்கத் தொடர்)



இவ்விரண்டுக்கும் இடையில் இணங்கிப் போகும் சமநிலைப் போக்கைக் கடைப்பிடிப்பதில் மு.கா.வின் தேசியத் தலைமையிலும் உள்ளூர் மட்டத் தலைமையிலும் பாரிய இடைவெளிகள் காணப்பட்டன.

தனிநபர்களை விட கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அரசியல் பண்பு காலவோட்டத்தில் பலவீனப்பட்டுக் கொண்டே சென்றது. இன்று அதன் நேரடி விளைவுகள் களத்தில் புலப்படுகின்றன. மக்களை கொள்கையின்பால் ஆழமாக வார்த்தெடுக்கும் முயற்சிகளுக்கு கட்சி கொடுத்த முன்னுரிமை மிகவும் குறைவானது. அன்றாட அரசியல் நகர்வுகளுக்குள் அமிழ்ந்து போக வேண்டிய தீர்ப்பந்தத்திற்குள் அது அகப்பட்டுக் கொண்டது.

எனினும், இலங்கை முஸ்லிம் சமூகத்தை -குறிப்பாக வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம்களை- அரசியல் மயப்படுத்தியதில் மு.கா.வுக்கு வரலாற்றுப் பங்களிப்பு இருக்கிறது. தேசிய அரசியல் கட்சிகளுக்கு கண்மூடி ஆதரவளிக்கும் நிலையிலிருந்து விடுவித்து, சிந்தித்து வாக்களிக்கும் பண்பை உருவாக்குவதில் மு.கா. ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது.

'அதீத இளமைய அரசியல்' சிலவேளை ஆபத்தானது. பல்வின, பல்கலாசார சூழலை ஆழமாகப் பகுத்தாராய்ந்து புதிய பாதையில் செல்வதற்கான உத்வேகத்தை இன்றைய கட்சியினுள் காண்பது அபூர்வமாகவே உள்ளது. கால மாற்றங்கள், புதிய அரசியல் யதார்த்தங்களைப் புரிந்துகொள்வதில் மு.கா. மிகவும் பலவீனமான நிலையிலேயே உள்ளது.

புதிய அரசியல் பாதையை வரைவதற்கான வரலாற்றுத் திருப்பத்தில் மு.கா.வின் இடம் எங்கே? தொடங்கப்பட்ட காலத்தில் இருந்த அரசியல் முக்கியத்துவத்தை அது படிப்படியாக இழந்துள்ளது போலவே தெரிகிறது.

வரலாறு வெற்றிடங்களை வைத்திருப்பதில்லை என்பது மட்டும் உண்மை. மு.கா. இப்போதுள்ள வரலாற்று வெற்றிடத்தை சரியாக நிரப்பாவிடின், புதிய பதிலீடுகளால் அது நிரப்பப்படும்.

## ஹிஜ்ரத்... (13ஆம் பக்கத் தொடர்)

அப்பெண்களை இஸ்லாமிய நிலைநிறுத்தக் கொண்டவையாகவும் அவர்கள் பெற்றுக் கொண்டிருந்தார் அஸ்மா (றழி) அவர்களை நிரப்பி தலைமையும் ஒரு தாக எப்போதும் நுணுக்கமாகச் செயற்பட வேண்டும் ஆளுமைகளையும், முக்கட்டுப்பெற்றிட்டிட வேண்டும் காலமுமையும் காட்டுகிறது. அத்தோடு சவால்மிக்க சூழ்நிலைகளில் பெண்களாலும் தஃவாவுக்கு பங்களிப்புச் செய்ய முடியும் என்பதை அஸ்மா (றழி) அவர்களின் நிகழ்வு உறுதிப்படுத்துகின்றது.

12. எதிர்ப்பையும் நெருப்பையும் சவால்களையும் முறியடிக்க கொள்கைக்கும் மனிதர்களுக்கும் பெரிய முக்கியத்துவமும், பங்கும் உண்டு என்பதையும் இலக்கை அடைந்து கொள்ள படிமுறை அடிப்படையில் கட்டம் கட்டமாக செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதையும் ஹிஜ்ரத் நிகழ்வு உணர்த்துகிறது.

மொத்தமாக, ஹிஜ்ரத் தஃவாவுக்கான மிகப் பெரிய அர்ப்பணமாகும். எப்போதும் அவ்வர்ப்பணத்தை வேண்டி நிற்கும்.

இவ்வாறான பல படிப்பினைகளையும், பாடங்களையும் கொண்ட ஹிஜ்ரத் நிகழ்வு வரலாற்றை மாற்றியமைத்த முக்கிய திருப்பு முனையாக அமைந்துள்ளது. இந்நிகழ்வு நடைபெற்று முடிவுற்ற ஹிஜ்ரி 1433ஐ நினைவு கூருவோம். அவ்வரலாற்றைப் புகழ்ந்து அதன் மூலமாக படிப்பினை பெற்று நடைமுறைப் படுத்துவோம்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

## இளமைப் பருவம்... (01ஆம் பக்கத் தொடர்)

திரும்பத் திரும்ப அவனு(ளு)டைய பெயரை எழுதுவது, கையிலே காதலனுடைய அல்லது காதலியுடைய பெயரைப் பச்சை குத்திக் கொண்டு அந்தப் பெயருடன் உரையாடுவது, காதலனுடைய அல்லது காதலியுடைய புகைப்படத்தை வைத்துக் கொண்டு தனிமையில் உரையாடுவது. இவ்வாறு பட்டியல் நீண்டு கொண்டே செல்லும்.

உடம்பில் செரட்டோனின் அளவு குறைவடையும்போது அல்லது நரம்பிணைப்புகளூடாகக் கடத்தப்படுவது தடைப்படும்போது மூளை சரியான விடயங்களை பிழையாக வலியுறுத்தும், பிழையான சில விடயங்களை சரியெனக் காட்டும். எப்போதும் ஒருவகையான கவலை அவர்களைப் பிடித்துக் கொள்ளும். அமெரிக்காவில் உள்ள காதலர்களில் 40% ஆனவர்கள் Depressionஇற்கு உட்படுவதாக Helen Fisher குறிப்பிடுகின்றார்.

எனவே, காதலர்களிலும் இந்த வெளிப்பாட்டைக் காணலாம். எனவே இவ்வளவு காலமும் ஊடகங்கள் புனிதமானது, தெய்வீகமானது எனப் போற்றிப் புகழ்ந்து எமது இளைஞர்களை வழிபிறழச் செய்த காதலுடைய உண்மை நிலை இதுதான். எனவே இந்நோயிலிருந்து விடுபட வேண்டியதும், அதற்கான சரியான சிகிச்சையை மேற்கொள்வதும் அவசரமாகச் செய்யப்பட வேண்டிய விடயங்கள்.



முழுவதும் ஹிஜாப் அணிந்து தேசிய உடையில் ... தேசிய இறைமை மற்றும் ஹிஜாப் ... இரத்த தான நிகழ்வொன்று அக்குறணையில் ... இணைந்து ... (01.10.2011) ... நடைபெற்றது.

## முஸ்லிம் அரசியல்வாதிகள்... (01ஆம் பக்கத் தொடர்)



பங்களித்திருக்கிறார்கள். உதாரணமாக, 1948 சுதந்திரத்திற்கான பிரச்சாரத்தை அவர்கள் முழுமையாக ஆதரித்தார்கள். அதில் அவர்களுக்கு சில பாதிப்புகள் கூட இருந்தன. பண்டாரநாயக்கவின் உணர்ச்சிகரமான கூற்றுகள் முஸ்லிம்களது பங்களிப்பையும் தியாகத்தையும் அதிகளவில் பேசியது. இதை தற்போதைய தலைமுறையினர் அறியாமல் இருக்கக் கூடும்.

இதன் விளைவாக முஸ்லிம்கள் நாட்டைப் பிரிக்கும் புலிகளது கோரிக்கையை கடுமையாக எதிர்த்தார்கள். நாட்டின் ஒருமைப்பாடு என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தனர். ஆனால், அவர்கள் இந்த துரதிஷ்டவசமான தேவையற்ற இனமோதலுக்குள் அகப்பட்டுக் கொண்டார்கள். இந்த யுத்தத்தால் மரணம், நிம்மதியின்மை, சொத்திழப்பு, வாழ்வாதார இழப்பு, இடப்பெயர்வு போன்றவையே நிகழ்ந்தன. ஆனால், நாட்டுக்கான அவர்களது பங்களிப்பு பற்றி குறைந்தளவே பேசப்படுகிறது அல்லது அறவே பேசப்படுவதில்லை.

நாட்டின் ஆயுதப் படையினர் ஆரம்ப காலங்களில் இப்போதைய அளவுக்கு ஆயுத ரீதியான பலங்களைக் கொண்டிருக்கவில்லை. அந்தக் காலங்களில் வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் பிரிவினைவாதக் கோரிக்கைக்கு ஆதரவளித்திருந்தால், நாட்டின் வரலாறு இன்று வித்தியாசமாக அமைந்திருக்கும்.

இன்றும்கூட முஸ்லிம் சமூகத்தின் 70 வீதமானோர் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்றனர். பொதுவாக முஸ்லிம்களது பொருளாதாரம் குறித்த தவறான கருத்தே நிலவுகிறது. சுனாமி காரணமாக முஸ்லிம் சமூகத்தில் ஒரு வீதமானோர் அழிந்து விட்டனர். கொடை வள நாடுகளிடமிருந்து கிடைத்த சுனாமி உதவியை முஸ்லிம்களுக்கு வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட்டது. இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சிய கதையாக அமைந்தது. சுனாமிக்குப் பின்னரான கட்டமைப்பு உடன்பாட்டில் முஸ்லிம்களது விடயமும் பேசப்பட்டது. ஆனால், இறுதியில் அதுவும் இயற்கை மரணம் அடைந்து விட்டது.

சமூகத்தைப் பற்றி கவலைப் படுவதற்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எத்தனையோ விடயங்கள் உள்ளன. கொழும்பிலுள்ள முஸ்லிம்களது சேரிப் புறங்களுக்கு ஒரு சாதாரண விஜயத்தை மேற்கொண்டால் கூட கடுமையான வறுமை, எழுத்தறிவின்மை, வேலைவாய்ப்பின்மை, அதனோடு தொடர்புபட்ட சமூகப் பிரச்சினைகள் பற்றி விரிவாக அறிந்துகொள்ள முடியும். அவர்கள் வாழ்க்கையை ஓட்டுவதற்கே பெரும் சிரமப் படுகின்றனர். நாட்டிலுள்ள ஒவ்வொரு முஸ்லிம் கிராமத்தினது நிலையும் இதுபோன்றுதான் உள்ளது.

இரண்டு பத்தாண்டுகளுக்கு முன்னர் புலிகளால் வடக்கு முஸ்லிம்கள் ஈவிரக்கமின்றி விரட்டியடிக்கப்பட்டனர். அவர்கள் இன்னமும் மீளக் குடியமர்த்தப்படவில்லை. போர் முடிந்த பின்னரும் கூட அது நடைபெறவில்லை. வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் தங்களது வாழ்க்கையைப் பாதிக்கும் எல்லைசார் விடயங்களுள் அகப்பட்டுள்ளனர்.

இங்குள்ள மற்றும் வெளிநாடுகளிலுள்ள சமாதான செயற்பாட்டாளர்கள், தமிழர்களது பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குமாறு கோரி முஸ்லிம்களை வசதியாக மறந்து விடுகின்றனர். அவர்களது பரிதாபகரமான நிலையை அலட்சியப்படுத்துவது தெளிவான நீதி மறுப்பாகும். முஸ்லிம்கள் இந்நாட்டிலுள்ள மூன்றாவது பெரிய சமூகம். அவர்களை எப்படிப் புறக்கணிக்க முடியும்? இந்த சூழலில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனமாக இருப்பது சமூகத்தை அவமானப் படுத்துகிறது.

## ஜனாதிபதியை... (01ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு சட்டத்தரணி என்ற வகையில் அவரை எனக்குத் தெரியும். அதனைத் தவிர அவர் எமது குடும்ப நண்பர் என்று கூறப்படுவது உண்மையல்ல.

வெள்ளைக்கொடி தீர்ப்பின்போது சரத் பொன்சேகாவை விடுவித்த மூன்றாவது நீதிபதியான வராவெவவின் எனினும் செய்தப்படுத்தப்பட்டதாக வெளியான தகவல் குறித்து கருத்துரைத்த ரஜீவ் விஜேசிங்க, வழமையாக தமது கணவரின் முடங்கிப்போகும் நிலை இருந்ததாக குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த வழக்கில் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக தீர்ப்பளித்த நீதிபதி வராவெவ 14 நாட்கள் விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ரணிலின்... (01ஆம் பக்கத் தொடர்)

எதிர்ப்பாளர்கள் கூறியுள்ளனர். கடந்த வாரம் அனுர பல்தியவின் வீட்டில் கூடிய முன்னாள் ஐ.தே.க. எம்பிக்கள் குழுவொன்று, கரு ஜயசூரியவை தலைவராக நியமிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இக்கூட்டத்தில் கருவும் சஜித்தும் பிரசன்னமாகியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

நாட்டின் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.க.வில் நீண்ட காலமாக நிலவி வரும் உட்பூசல்களுக்கும் தலைமைத்துவம் தொடர்பான இழுபறிக்கும், இந்த மாநாடு உரிய தீர்வைத் தருமா என்ற கேள்விகளை அவதானிகள் எழுப்பியுள்ளனர். ஐ.தே.க. பொறுப்பற்ற எதிர்க் கட்சியாகவே தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப் படுகிறது.


மீள்பார்வை

உள்நாட்டு - வெளிநாட்டு சந்தா விபரம்

மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 30.00
ஆறு மாத சந்தா - ரூபா 450.00
ஒரு வருட சந்தா - ரூபா 900.00

இந்தியா
தனிப் பிரதி - ரூபா 75.00
ஒரு வருடம் - ரூபா 2000.00

மத்திய கிழக்கு நாடுகள், மலேசியா
தனிப் பிரதி - ரூபா 90.00
ஒரு வருடம் - ரூபா 2500.00

ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், தென்கொரியா
தனிப் பிரதி - ரூபா 120.00
ஒரு வருடம் - ரூபா 3000.00

காசுக் கட்டளை அனுப்ப விரும்புபவர்கள், காசுக்கட்டளை பெறுவோர்: Meelparvai Publishers எனவும், தபால் நிலையம்: Grandpass எனவும் குறிப்பிட்டு அனுப்புமாறு வேண்டுகிறோம். முகவரி: MMC, 2A, Hill Castle Place, Bandaranayake Mawatha, Colombo 12.

MMC


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/101/NEWS/2011 - ISSN 2012-5038



**மறை நிழலில் மனிதன்**


பொதுமக்களுக்கும் இஸ்லாமியப் பணியில் ஈடுபட்டிருப்போருக்குமான வழிகாட்டி நூல் 50/- MMC





அய்யாஷ் ஃபாராபி

## பேசவும் பகிரவுமாய்...



'கும் யாபா'வை கண்டுகளிக்கும் வாய்ப்பு நமக்கும் கிட்டுமா?

இந்தப் படத்தின் நடிகரும் இயக்குனருமான காஸிம் இஸ்தான்பூலி 'கும் யாபா' என்ற ஓரங்க நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். பலஸ்தீன மக்களது போராட்டம், அல்-அக்ஸாவை விடுவித்தல், புலம்பெயர்ந்து வாழும் பலஸ்தீன மக்களது உரிமைகள் என்பவற்றை ஆதரித்து அவர் ஐரோப்பாவுக்கு (மெட்ரிட் மற்றும் பாரிஸ்) மேற்கொண்டுள்ள விஜயத்தின்போதே இந்நாடகத்தை அரங்கேற்றுகிறார்.

## 'கும் யாபா': பலஸ்தீனுக்கு ஆதரவான கலை முயற்சி

பலஸ்தீன மக்கள் 1948இலிருந்து இன்று வரை எதிர்நோக்கிவரும் துயரங்களைப் பற்றி 'கும் யாபா' பேசுகிறது. பலஸ்தீன எழுத்தாளர் ஸல்மான் நாதூரின் பிரதியை மையமாகக் கொண்டு இவ் ஓரங்க நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இஸ்தான்பூலி இந்நாடகத்தை காஸா ஆக்கிரமிப்பின்போது முதலில் அரங்கேற்றினார். பின்னர் பெய்ரூத்திற்கு அதனை எடுத்துச் சென்றார். பெய்ரூத் வீதிகளிலும் பொது இடங்களிலும், அங்குள்ள அமெரிக்கத் தூதுவராலயத்திற்கு முன்னாலும், பலஸ்தீன அகதி முகாம்களிலும் அவர் இதனை நிகழ்த்திக் காட்டினார். அத்தோடு லெபனானிலும் சிரியாவிலும் உள்ள பல பல்கலைக்கழகங்களில் இந்த கலை முயற்சி அரங்கேறியுள்ளது.

'கும் யாபா' ஸ்பெய்னிலும் களம் கண்டுள்ளது. கலை முயற்சிகள், நாடகங்களூடாக மேற்குலகிற்கு பஸ்தீன விவகாரத்தை சரியாக முன்வைக்க முடியும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை ஸ்தான்பூலிக்கு உள்ளது. பலஸ்தீனப் பிரச்சினையை உலகெங்கும் கொண்டு செல்வதற்கான கலாச்சார ஊடாட்டத்திற்கு, இவரது கலை முயற்சி ஒரு முக்கிய திறவுகோலாக உள்ளது.


**JUHAMA MARKETING SERVICE (PVT) LTD.**

SALES REPRESENTATIVE & ACCOUNTANT தேவை

கொழும்பில் அமைந்துள்ள குளியலறை (Sanitary ware) உபகரணங்கள் மொத்தமாக விநியோகம் செய்யும் கம்பனி ஒன்றிற்கு Sales Representative மற்றும் கணக்காய்வு (Audit Firm) அனுபவமுள்ள Accountant தேவை. 25-35 வயதெல்லைக்குட்பட்ட குறைந்தது 3 வருட அனுபவமுள்ளவர்கள் தங்களது சுய விபரங்களுடன் (CV) விண்ணப்பிக்கலாம். Juhama@sltnet.lk

For High Quality Water Tap Brands

ARMY® GLORY® NEEL YAAL® HARK




சமீபத்தில் பிரிட்டனுக்கு விஜயம் செய்திருந்த துருக்கி ஜனாதிபதி அப்துல்லாஹ் குல்லும் அவரது பாரியாரும் எலிசபெத் மகாராணிக்கு நினைவுப் பரிசொன்றை வழங்குகிறார்கள். ஆரம்பத்தில் துருக்கியை ஒதுக்க நினைத்த ஐரோப்பிய நாடுகள், பொருளாதார நெருக்கடியால், அதனை 'அன்பாக' பார்க்கத் தொடங்கியிருக்கின்றன.


**WinSYS NETWORKS**
The information security training provider of the nation
No: 14, Schofield Place, Kollupitiya, Colombo-03, Sri Lanka.
Tel: 011-2589567/8,011-4340666,0777 259927
www.winsysnetworks.net / info@winsysnetworks.net

| | | |
|---|---|---|
| CCNA | 640-802 (ICND1) v1.1<br>(ICND2) v1.1 | Rs.12,000/= |
| CCNP | 642-902 (ROUTE)<br>642-813 (SWITCH)<br>642-832 (TSHOOT) | Rs.15,000/= (PER MODULE) |
| CCIP | 642-691 (BGP)(MPLS)<br>642-902 (ROUTE)<br>642-642 (QoS) | Rs.150,000/= |

Microsoft Certifications
MCP XP & Server | MCSA | MCTS 70-680 / 70-642 70-643 / 70-640 | MCITP Enterprise Administrator Server Administrator | VMware VMware vSphere® 5.0

Diploma In Hardware Engineering With Networking. | Special Diploma In Network Administration. | Linux leads to RHCE | PHP MySQL

REFER 5 STUDENTS FOR ANY TRAINING GET YOUR TRAINING TOTALLY FREE


WEEKDAYS SPECIAL OFFER ALL 3 TRAININGS ONLY 25000/=
# Special Diploma In Advanced Networking (ANW)
# Cisco Certified Network Associate (CCNA)
# Microsoft Certified Technology Specialist (MCTS) 70-680 MCTS: Windows 7 Configuring

Learn Computerized Accounting
கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கற்கைநெறி

Certificate in Professional Accountant (CPAC): Introduction to Computerized Accounting, M.Y.O.B. Premier Accounting, Quick Books Premier — Duration 48 hrs

Diploma in Professional Accountant (DPAC): Introduction to ERP & BPO, Sage Accpac ERP / SAP ERP, Sage Line 50 / Peachtree by Sage, Tally ERP — Duration 72 hrs

BRANCHES
Kandy E-win NETWORKS — No: 524, Peradeniya Road, Kandy. 081-2203785-6/0777-047708/0777-807630
Puttalam. Twin-WIN ICT Professionals — No: 33,Masjid Road, Puttalam. Tel:- 032-2267477 / 0777-112771
Batticaloa WinSYS NETWORKS — No: 10, New kalmunai Road, Batticaloa. Tel: 065-2228789-0777-832-871

வரவு-செலவுத் திட்ட வாசிப்பின்போது பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஒரு காட்சி. நாட்டின் அதிஉயர் சபை தரம் தாழ்ந்து செல்கிறதா? எம்.பி.க்களே அடிபிடிப்படுவதால் யாருக்கு வெட்கம்?

## கொழும்பு-யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையை உருவாக்க ஜனாதிபதி மஹிந்த விருப்பம்

நாட்டின் முதலாவது நெடுஞ்சாலையான தெற்கு நெடுஞ்சாலையை திறந்து வைத்ததன் பின்னர், அடுத்தகட்டமாக கொழும்பு - யாழ்ப்பாணம் நெடுஞ்சாலைக்கான வேலைகளைத் தொடங்க வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விருப்பம் தெரிவித்துள்ளார். 'யாழ்ப்பாண நெடுஞ்சாலைக்கான வேலைகளை நான் செய்யவுள்ளேன். இதனால் 3 மணித்தியாலங்களுள் யாழ்ப்பாணம் செல்ல முடியும்' என ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் 400 கி.மீ. தூரம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி இதனைச் செய்ய ஆர்வமாக உள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு பணிப்பாளர் பந்துல ஜயசேகரவும் கூறியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Published by Meelparvai Media Centre, 2A, Hill Castle Place, Bandaranayaka Mawatha, Colombo 12. Printed at A.J. Prints, Station Road, Dehiwala.